January 2026

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



## பொங்கல் மலர்

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA







# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

**January 2026** சுவடி — 15 ஓலை — 11


## வணக்கம் பல

புத்தாண்டுகொண்டாட்டங்கள் விமரிசையாகக்கொண்டாடப்பட்டு வரும் நேரத்தில், புதியனவாக சிந்தனைகள், கண்டுபிடிப்புகள், வாழ்வு முறைகள் என ஆண்டு துவக்கத்தில் என்னதான் உறுதிமொழிகளை ஏற்றாலும் கூட, அனைவரும் நாடுவதும் தேடுவதும் மகிழ்ச்சியான வாழ்க்கை ஒன்றுதான்!

வெற்றியும் மகிழ்ச்சியும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை! அதுபோல் எதிர்துருவமான தோல்வியும் கவலையும் ஒன்றோடு ஒன்று இணைந்த ஒன்றுதான்! வெற்றியில் கொண்டாடித் திளைக்கும் நாம், தோல்வியில் துவளுவதும் இயல்புதான். வாழ்வு சிறப்புற வேண்டுமானால், நமக்குள் ஒரு சமநிலையை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். கடந்த காலத் தவறுகளைக் கணக்கில் கொண்டும், எதிர்காலத் திட்டங்களை வகுத்துக் கொண்டும், நிகழ்காலத்தில் நாம் எடுத்து வைக்கின்ற அடிகள் வருங்காலத்தைத் தீர்மானிப்பதாக அமைகின்றது.

இளையத் தலைமுறையினரின் மிகப்பெரிய வரமும் சாபமுமாக இருப்பது சமூகத் தளங்கள். அவர்களது செயல்பாடுகள் வாழ்வின் போக்கையே மாற்றிவிடக் கூடிய வல்லமை மிக்கவை. இதனை உணர்ந்தே ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் இளையோருக்கு சமூக வலைத்தளங்களில் கட்டுப்பாடுகளையும், தடைகளையும் விதித்துள்ளது கவனிக்கத் தக்கது. இளையோர் மட்டுமல்லாது பெரியவர்களும் கூட இதில் விழிப்புடன் செயல்பட வேண்டும். உறுதிமொழிகள், நமது பழக்கவழக்கங்களாக மாறுமேயானால் நிச்சயம் வியக்கத்தக்க மாற்றங்களைக் காண முடியும். எப்பேற்பட்ட மலை உச்சியும் கூட எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியால்தானே அடைய முடியும்! அந்த வகையில், மகிழ்ச்சி என்ற மலை உச்சிக்குச் செல்வதற்கு நாம் இந்தப் புத்தாண்டில் எடுக்கின்ற உறுதிமொழிகளே ஊன்றுகோலாய் நின்று இலக்கை எட்ட உதவட்டும்!

உச்சியை அடைவது நாம் மட்டுமல்லாது, நம்மைச் சார்ந்தவர்களையும் மகிழ்ச்சியும் வெற்றியும் கொண்ட வாழ்க்கைப் பாதை நோக்கித் திருப்புவோமானால், அந்த வாழ்க்கை மகத்தான வாழ்க்கையாக மாறிவிடுகிறது. மகத்தான வாழ்வை எல்லோரும், எல்லாமும் பெற வேண்டும் என்ற சிந்தனையோடு இந்தப் புத்தாண்டையும் தமிழர் திருநாளையும் வரவேற்றுச் சிறப்பாக்குவோம்! பிறந்திருக்கும் புத்தாண்டு இல்லங்களிலும் உள்ளங்களிலும், மகிழ்ச்சியையும் வெற்றியும் தரத்தக்கதாக இருக்க வேண்டுமென வேண்டுவோமாக! அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

நேசப்பகிர்தலுடன்

**ஆசிரியர் குழு**

## உள்ளே...





**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*



(பொறுப்பு துறப்பு: இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது. படைப்புக்கள் யாவும் படைப்பாளிகளின் கருத்துக்களே. அதற்கு எவ்வகையிலும் அய் தமிழ் பொறுப்பேற்காது.)

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

பெரிய அண்ணன்

அரண்டவன் கண்கள்

சங்கம் கண்ட பாவலன்

தமிழே தமிழே

சேரமான் கனவு



# உள்ளே


கவிதைகள்

சிறுகதை

சிவகாமியின்சபதம்

தல வலம்

அறிவோம் தமிழர் பெருமை

தாங்கும் தூண்கள்

வேரறியா மொட்டுகள்




# பெரிய

## இலங்கை தமிழ் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகள்

இலங்கையை சமீபத்தில் தாக்கிய திட்வா புயலினால் ஏற்பட்ட வரலாறு காணாத பாதிப்புகளில் இருந்து நாட்டை மீள கட்டியெழுப்புவதற்காக இந்தியா ஆரம்பம் முதலே பாரிய உதவிகளைச் செய்து வருகின்றது. இலங்கையில் புயலின் தாக்கம் குறைவதற்கு முன்னதாகவே பல்வேறு நிவாரண உதவிப் பொருட்களுடன் இந்திய கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

அயலவருக்கு முன்னுரிமை என்ற கொள்கையின் அடிப்படையில் அன்று முதல் இன்று வரை தொடர்ச்சியாக இந்தியாவின் உதவிகள் இலங்கையை மீண்டெழுவதற்குக் கரம் கொடுத்து வருகின்றன. நிவாரண உதவிகள், மீட்புக் குழுவின் உதவிகள், இந்திய ராணுவத்தின் உதவிகள், சாலை புனரமைப்பு மற்றும் பாலங்களின் நிர்மாணத்திற்கான உதவிகள் எனப் பலவற்றில் இந்தியா உதவி செய்துள்ளது.

இந்த நிலையில், புயலினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து ஆராய்வதற்காக இந்திய பிரதமர் நரேந்திர மோதியின் விசேட பிரதிநிதியாக வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் டிசம்பர் 22ஆம் தேதி கொழும்பு வந்தடைந்தார்.

எஸ்.ஜெய்சங்கரின் இலங்கை விஜயம்

மோதியின் விசேட கடிதத்தை எடுத்துக்கொண்டு, இலங்கையை வந்தடைந்த எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை 23ஆம் தேதி சந்தித்து, அதை வழங்கி இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தார்.

“அயலவருக்கு முன்னுரிமை’ எனும் எங்கள் கொள்கை மற்றும் முதலில் பதிலளிப்பவராக இருப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டின்படி, திடீரென ஏற்பட்ட சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக ‘சாகர் பந்து’ நடவடிக்கையை நாம் ஆரம்பித்தோம். இந்திய கப்பல்கள், விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் நிவாரணப் பொருட்களையும் அவசரமாகத் தேவையான பொருட்களையும் கொண்டு வந்தன.”






# அண்ணன்

“மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவவும், அவசர மருத்துவ சேவைகளை வழங்கவும், பாதிக்கப்பட்ட தகவல் தொடர்பு கட்டமைப்புகளை மீளமைக்கவும் இந்திய விசேட குழுக்கள் அனுப்பப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களின் உயிர்களைக் காப்பாற்ற ‘சாகர் பந்து’ நடவடிக்கை உதவியதோடு இது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவின் பரந்த மற்றும் ஆழமான வெளிப்பாடாக அங்கீகரிக்கப்பட்டு இருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்“ என பிரதமர் நரேந்திர மோதி, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ‘’இலங்கை தற்போது அடுத்த கட்டம் குறித்து கவனம் செலுத்தியுள்ள வேளையில், நம்பகமான பங்காளியாகவும் நம்பகமான நண்பராகவும் இந்தியா சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்கும் என்பதில் நான் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன். இலங்கை மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதிலும், தாங்குதிறனை உறுதிப்படுத்துவதிலும் கடந்த காலத்தைப் போன்றே நாங்கள் உங்களுடன் தோளோடு தோள் நிற்போம். இந்தச் சூழலில், இந்தியா ஒரு விரிவான சலுகைப் பொதியை வழங்குகிறது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். சலுகைப் பொதியை எவ்வாறு சிறப்பாகச் செயல்படுத்தலாம் என்பது குறித்து உங்கள் அரசாங்கத்துடன் கலந்துரையாடுமாறு அமைச்சர் ஜெய்சங்கருக்கு அறிவித்துள்ளோம். இலங்கை எப்போதும் இல்லாத அளவுக்கு வலிமையாக எழுச்சி பெறும் என்று நான் நம்புகிறேன். இந்தப் பயணத்திலும்,






தேசிய அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்திலும், இந்தியா எப்போதும் இலங்கைக்கு நெருக்கமாக இருக்கும்'' எனவும் இந்திய பிரதமர், இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கும் இடையில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடந்தது.

இலங்கையை கட்டியெழுப்ப இந்தியா பாரிய நிதியுதவி

புயலினால் பாதிக்கப்பட்ட இலங்கையை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள் வதற்காக இந்தியா 450 மில்லியன் அமெரிக்க டாலர் பெறுமதியான நிதியுதவி பொதி யொன்றை வழங்கி யுள்ளது. இதன்படி, இந்தியாவால் வழங்கப்படும் 450 மில்லியன் அடிப்படையிலான கடனுதவி என்பதுடன், எஞ்சிய 100 மில்லியன் அமெரிக்க டாலர் உதவித் திட்டம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை மீளக் கட்டியெழுப்புதல், சுகாதார வசதிகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கிலேயே இந்த உதவித் திட்டத்தை வழங்கியுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

மீட்புப் பணிகளுக்காக ஹெலிகாப்டர்களை வழங்கியமை, மருந்து, உணவுப் பொருட்கள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகளை வழங்கியமை மாத்திரமன்றி, சேதமடைந்த வீதிகளை மீளமைத்தல், மருத்துவமனைகளைப் புனரமைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்தியா வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இதன்போது இந்தியாவுக்கு நன்றி தெரிவித்தார்.






அமெரிக்க டாலர் பெறுமதியான நிதியுதவி பொதியில், 350 மில்லியன் அமெரிக்க டாலர் சலுகை வட்டி

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கும், இலங்கை எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றது. திட்வா புயலினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு இந்தியா வழங்கி வரும் ஆதரவுக்கு, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். அத்துடன், இந்தியாவினால் அறிவிக்கப்பட்ட 450 மில்லியன் அமெரிக்க டாலர் உதவித் திட்டத்திற்கும் தனது நன்றியை எதிர்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



கடந்த 2004ஆம் ஆண்டு சுனாமியில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு சரியான அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை உருவாக்கத் தவறியதாலேயே, இந்த புயலினால் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். அத்துடன், நாட்டிற்கு முறையான அனர்த்த முகாமைத்துவ திட்டமும் துறைசார் அமைச்சொன்றையும் ஸ்தாபிப்பது அவசியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

இந்திய அரசு வழங்கும் உதவிகள் மிகவும் வெளிப்படையான முறையில் மக்களைச் சென்றடைய வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். இதற்கு எதிர்க்கட்சி என்ற ரீதியில் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் என சஜித் பிரேமதாச உறுதியளித்ததோடு, இலங்கைக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குமாறும் இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார். இலங்கை தமிழரசு கட்சி உள்ளிட்ட வடக்கிலுள்ள தமிழ் கட்சிகள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி உள்ளிட்ட மலையக தமிழ் கட்சிகளுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இலங்கையில் நடத்தப்படாமல் உள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான அழுத்தங்களை இந்தியா இலங்கை அரசுக்கு பிரயோகிக்க வேண்டும் என வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகள், இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கேட்டுக்கொண்டுள்ளன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், மலையக மக்களின் கோரிக்கைகள் அடங்கிய கடிதமொன்றை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் கையளித்தார்.




திட்வா புயல் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுத் தமது வீடுகளை இழந்துள்ள மலையக மக்களுக்கு நிரந்தர வீடு திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் வரை அந்தக் குடும்பங்களுக்குத் தங்குமிடம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் நிச்சயமற்ற நிலைமை காணப்படுவதாக செந்தில் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தற்காலிக வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், தேயிலை தொழில்துறையுடனும், உள்நாட்டு பொருளாதாரத்துடனும் இணைந்ததான சுயதொழில் மற்றும் சிறு தொழில்களை ஊக்குவிக்க இந்தியாவின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை அவர் கேட்டுக் கொண்டுள்ளார். அத்துடன், தேயிலை தொழிலாளர் சமூகத்திற்கு மருத்துவ

காப்புறுதி திட்டத்தை விரிவுப்படுத்துகின்றமை தொடர்பில் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் இவ்வாறான கோரிக்கைகள் அடங்கிய கடிதமொன்றை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் கையளித்துள்ளார்.




இதேவேளை, திட்வா புயலினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மலையக பகுதிகளின் தற்போதைய நிலைமை தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தெளிவூட்டியுள்ளார். இந்த இக்கட்டான சூழ்நிலையில் இந்தியா வழங்கிய உதவித் திட்டத்திற்கும் அவர் இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.இந்தச் சந்திப்பு, இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவையும், மலையக மக்களின் நலன் மற்றும் நிலையான எதிர்காலத்திற்கான கூட்டு முயற்சிகளையும் மேலும் வலுப்படுத்தும் முக்கிய அடித்தளமாக அமைந்துள்ளதாக ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட பிரதிநிதியாக, இந்திய வெளியுறவு விவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் அவர்கள் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட இந்த விஜயத்தின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் பல முக்கிய சந்திப்புகள் இடம்பெற்று: இலங்கை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஏனைய உயர்மட்ட அரசியல் தலைவர் களுடன் இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரை யாடினார்.

பொருளாதார ஒத்துழைப்பு:




எரிசக்தி, உட்கட்டமைப்பு மற்றும் வர்த்தக ரீதியான திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு, அண்டை நாடு முதலாவதாக **(Neighborhood First)**: இந்தியாவின் 'அண்டை நாடு முதலாவதாக' கொள்கையின் கீழ் இலங்கையுடனான நட்புறவை உறுதிப்படுத்துவதே இந்த விஜயத்தின் முக்கிய நோக்கமாகும். ஜெய்சங்கர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து, பிரதமர் நரேந்திர மோடியின் ஆதரவு மற்றும் நல்லெண்ண செய்தியை எடுத்துச் சென்றுள்ளார்.

சூறாவளி தாக்கிய உடனேயே அவசர நிவாரணத்தை வழங்கிய ஆபரேஷன் சாகர் பந்துவின் கீழ் இந்தியாவின் முதல் பதிலளிப்பாளர் பங்கை அடிப்படையாகக் கொண்டு இந்த உதவி உருவாக்கப்பட்டுள்ளது என்று ஜெய்சங்கர் கூறினார். அதன்படி, இந்தியாவின் விரிவான தொகுப்பு ஐந்து முக்கியமான பகுதிகளில் கவனம் செலுத்தும் என ஜெய்சங்கர் அதன்போது கூறியுள்ளார்.

சாலை, தொடருந்து மற்றும் பாலம் இணைப்புகளின் மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்பு

முழுமையாக அழிக்கப்பட்ட மற்றும் பகுதியளவு சேதமடைந்த வீடுகளின் கட்டுமானம்

சூறாவளியால் சேதமடைந்த சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளுக்கான ஆதரவு

குறுகிய மற்றும் நடுத்தர கால பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கான விவசாய உதவி

மேம்படுத்தப்பட்ட பேரிடர் மீட்பு மற்றும் தயார்நிலை

இதேவேளை, “இந்தியா இலங்கையுடன் உறுதியாக நிற்கிறது, நமது நாகரிக உறவுகளை கட்டியெழுப்புகிறது மற்றும் **#NeighbourhoodFirst** மற்றும் **#VisionMAHASAGAR** ஆல் வழிநடத்தப்படுகிறது,” என்று ஜெய்சங்கர் உறுதிப்படுத்தினார். இந்த விஜயமானது, தெற்காசிய பிராந்தியத்தில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலைகளுக்கு மத்தியில், இந்தியா மற்றும் இலங்கை இடையிலான நீண்டகால நட்புறவில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




# சொல்றாங்க... சொல்றாங்க...






"இந்த விஜய் சும்மா 'நன்றி'ன்னு சொல்லிட்டு போறவன் கிடையாது. நன்றிக்கடன் தீர்த்துவிட்டுத்தான் போவேன்!"

**விஜய்**

(இந்த வார்த்தைகள் நிரூபிக்கப்பட்டால், வருங்காலம் எல்லாம் கொண்டாடப்படுவீர்கள்!)



"ரஷ்யா அமைதியை விரும்பவில்லை!"

**ஜெலென்ஸ்கி**

(அதுதான் தெரிஞ்ச கதையாச்சே! இதுக்கு எப்படியாவது ஒரு முடிவு கட்டுங்க!)



தே.மு.தி.க.விற்கு வெறும் 6 சீட்டா? எந்த கட்சி சொன்னதோ அதுக்கு அழிவுகாலம் ஆரம்பமாகிவிட்டது!"

**பிரேமலதா**

(அதாவது கிடைக்குமான்னு பார்க்காம, இப்படி சாபம் விடலாமா? தனியா நின்னா ஒன்னாவது கிடைக்குமான்னு யோசிங்க!)



"விமர்சனங்களைத் தாங்கக்கூடிய பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறீர்கள். இருந்தாலும் விஜய், தயவு செய்து நீங்கள் மீண்டும் படத்தில் நடிக்க வேண்டும்."

**நாசர்**

(என்ன சார் இது? அவர் நடிச்சது போதும்னு சேவையில் இறங்கிட்டார்! இழுக்கலாமா? வாழ்த்துங்க!)

# அரண்டவன்

ஜூலை மாதத்தில், வங்கதேச மக்கள் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடினர். இந்தப் போராட்டங்கள் வன்முறையாக மாறியதால், ஆகஸ்ட் 5ஆம் தேதி, ஷேக் ஹசீனா தனது உயிரைக் காப்பற்றிக் கொள்ள இந்தியாவுக்கு வர வேண்டியிருந்தது. வங்கதேசத்தில் ஷேக் ஹசீனா ஒரு சர்வாதிகார ஆட்சியை நடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டது. வங்கதேசத்தின் நிறுவனரான ஷேக் ஹசீனாவின் தந்தை முஜிபுர் ரஹ்மான், இந்தியாவுடன் வரலாற்று ரீதியான உறவைக் கொண்டிருந்தவர். ஷேக் ஹசீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவும் அதே தொடர்ச்சியைக் கொண்டிருந்தது.

இருப்பினும், வங்கதேசத்தின் எதிர்க்கட்சிகளும் ஷேக் ஹசீனாவின் எதிர்ப்பாளர்களும், இந்தியாவின் ஆதரவுடனேயே அவர் அதிகாரத்தில் நீடித்ததாக நம்பினர். கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஷேக் ஹசீனாவுக்கு இந்தியா அடைக்கலம் கொடுத்தபோது, வங்கதேசத்தில் இந்திய எதிர்ப்பு உணர்வு மேலும் தூண்டப்பட்டது. வங்கதேசம் ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதித்துள்ளதுடன், அவரை இந்தியாவில் இருந்து நாடு கடத்தவும் கோரி வருகிறது. இந்தியா எப்போதும் வங்கதேசத்தை ஷேக் ஹசீனா குடும்பத்தின் கண்ணாடி யின் வழியாகவே பார்த்து வருவதாகவும், அதற்கு அப்பால் பார்க்க ஒருபோதும் முயலவில்லை என்றும் வங்கதேச ஊடகங்களில் கூறப்படுகிறது.

டிசம்பர் 23ஆம் தேதி, பிரஸ்ஸல்ஸில் இருந்து இயங்கும் 'இன்டர்நேஷனல் கிரைசிஸ் குரூப்' (ஐ.சி.ஜி—மிசிநி) என்ற லாப நோக்கற்ற ஆராய்ச்சி நிறுவனம், இந்தியா—வங்கதேச உறவுகள் குறித்து "ஆப்ஃடர் தி கோல்டன் எரா: கெட்டிங்








# கண்கள்

பங்களாதேஷ்—இந்தியா டைஸ் பேக் ஆன் டிராக்” **(After the Golden Era: Getting Bangladesh-India Ties Back on Track)** என்ற தலைப்பில் 51 பக்க ஆய்வறிக்கையை வெளியிட்டது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஷேக் ஹசீனா அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்டது இந்தியாவுக்கு ஒரு பலத்த அடி என்று அந்த அறிக்கை கூறுகிறது.

இந்தியா—வங்கதேச உறவுகள் குறித்த தனது சமீபத்திய அறிக்கையில், வில்லியம் வான் ஷெண்டலின் ‘வங்கதேச வரலாறு’ **(‘A History of Bangladesh’)** என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விஷயத்தை ஐ.சி.ஜி மேற்கோளாகச் சேர்த்துள்ளது. இது இரு நாடுகளும் ஒன்றையொன்று எவ்வாறு பார்க்கின்றன என்பதை வெளிப்படுத்துகிறது. இரு நாடுகளிலும் உள்ள பொதுவான உணர்வு

வில்லியம் வான் ஷெண்டல் தனது

## ரஜ்னீஷ் குமார்

“வங்கதேசத்தின் வரலாறு” எனும் புத்தகத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்: “வங்கதேசத்தின் சுதந்திரத்திற்கு இந்தியா ஆதரவளித்த போதிலும், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் பெரும்பாலும் பதற்றமாகவே இருக்கின்றன. சில நேரங்களில் வெளிப்படையான பகைமையுடனேயே இருந்துள்ளன. வங்கதேசம் ஒரு சுதந்திர நாடாக உருவெடுத்ததில் ஒன்றுக்கொன்று ஆற்றிய பங்கைக் குறைத்து மதிப்பிடும் கதைகளையே






இரு நாடுகளும் முன்னிறுத்தியுள்ளன."

"சுதந்திரப் போராட்டத்தில் இந்தியாவின் பங்களிப்புக்கு வங்கதேசம் போதுமான நன்றியைக் காட்டவில்லை என்ற பொதுவான கருத்து இந்தியாவில் நிலவுகிறது. அதேநேரம், இந்தியா தனது சொந்த உத்தி சார்ந்த நலன்களுக்காக மட்டுமே தலையிட்டது என்றும், சுதந்திர வங்கதேசத்தை தன்னால் கட்டுப்படுத்தப்படும் நாடு போல் அலட்சியமாக நடத்தியதாகவும் வங்கதேசத்தில் பரவலான நம்பிக்கை உள்ளது."

இதே அறிக்கையானது, 'இந்தியன் ஃபாரின் அஃபர்ஸ் ஜர்னலில்' **(Indian Foreign Affairs Journal)** என்ற தலைப்பில் ஸ்மிருதி எஸ். பட்நாயக் எழுதிய ஒரு கட்டுரையையும் மேற்கோள் காட்டுகிறது. அதில் அவர், "வங்கதேசத்தில் அவாமி லீக் அதிகாரத்தில் நலன்களைப் பாதுகாப்பதற்கு இந்தக் கட்சி மிகவும் முக்கியமானது என்று இந்தியா நீண்டகாலமாகக் கருதுகிறது. மற்ற நேரங்களில், இந்தியாவும் வங்கதேசமும் ஒரு சமநிலையான உறவைப் பேணுவதில் சிரமங்களைச் சந்திக்கின்றன. மேலும் தொடர்ந்து பரஸ்பர சந்தேகம், தூண்டுதல் மற்றும் எரிச்சலடையும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன" என்று கூறுகிறது.

இந்தியா—வங்கதேச உறவுகள் குறித்த தனது சமீபத்திய அறிக்கையில், வில்லியம் வான் ஷெண்டலின் 'வங்கதேச வரலாறு' **('A History of Bangladesh')** என்ற புத்தகத்திலிருந்து ஒரு மேற்கோளை ஐ.சி.ஜி சேர்த்துள்ளது. இது இரு நாடுகளும் ஒன்றையொன்று எவ்வாறு பார்க்கின்றன என்பதை வெளிப்படுத்துகிறது. வங்கதேசத்தின் முன்னணி ஆங்கில நாளிதழான 'தி டெய்லி ஸ்டார்' , இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு







இருக்கிறதா என்பதுதான் இருதரப்பு உறவுகளின் நிலையைத் தீர்மானிக்கும் முக்கியக் காரணியாக உள்ளது. ஏனெனில், வங்கதேசத்தில் இந்தியாவின்

சீர்குலைந்து வருவது குறித்து டிசம்பர் 22 அன்று ஒரு தலையங்கம் எழுதியது.

அதில், "பல ஆண்டுகளாக இந்தியா, வங்கதேசம் இடையிலான உறவின் அடித்தளம், ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சிக்கு இந்தியா அளித்த அசைக்க முடியாத ஆதரவால் பலப்படுத்தப்பட்டது என்பதை மீண்டும் வலியுறுத்துவது அவசியம். இப்போது அந்த கட்சி அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்டு, நாட்டைவிட்டு வெளியேறிய அதன் தலைவர் எரிச்சலூட்டும் விதமான கருத்துகளைக் கூறி வருவதால், அந்த அடித்தளம் கடுமையாகச்



சேதமடைந்துள்ளது” என்று குறிப்பிட்டுள்ளது.

அதற்குப் பதிலாக இப்போது பரஸ்பர சந்தேகங்களால் நிறைந்த ஒரு வெற்றிடம் உருவாகியுள்ளது. வங்கதேசத்திற்கு எதிராகச் சதி செய்பவர்களுக்கு இந்தியா ஒரு பாதுகாப்பான புகலிடமாக இருப்பதாக வங்கதேசம் கருதுகிறது. மறுபுறம், அண்டை நாடு பெரும்பான்மைவாத அராஜகத்திற்குள் சென்று கொண்டிருப்பதாக இந்தியா கருதுகிறது. சிறுபான்மையினர் பாதுகாப்பு விஷயத்தில் இடைக்கால அரசின் அணுகுமுறையை இந்தியா சந்தேகத்துடன் பார்க்கிறது மற்றும் வங்கதேசத்தின் உறுதிமொழிகள் போதுமானதாக இல்லை என்று நிராகரிக்கிறது.

கிழக்கு பாகிஸ்தான் காரணமாக இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் கிட்டத்தட்ட துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்தன. வங்கதேசத்தின் உருவாக்கம் ஒரு நம்பிக்கையைத் தந்தது. இந்த நம்பிக்கை ஷேக் முஜிபுர் ரஹ்மான் மற்றும் ஷேக் ஹசீனாவின் பதவிக்காலத்தில் உயிர்ப்புடன் இருந்தது. இருப்பினும், வங்கதேசத்தில் ஜியாவுர் ரஹ்மான், எர்ஷாத் ஆகியோரின் எழுச்சி இந்தியாவின் நலன்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது. எனவே, ஷேக் ஹசீனாவையும் அவாமி லீக்கையும் வலுப்படுத்த வேண்டிய கட்டாயம் இந்தியாவுக்கு ஏற்பட்டது. ஆனால், ஷேக் ஹசீனா வங்கதேசத்தில் தனது செல்வாக்கை இழந்தபோது, இந்தியா தனது கொள்கையை மாற்றியிருக்க வேண்டும். 2023 தேர்தலில் இந்தியா ஷேக் ஹசீனாவை ஆதரித்திருக்கக் கூடாது. சரிவு ஏற்படும் அபாயம் இருந்தபோதிலும், இந்தியா தனது அனைத்து நம்பிக்கைகளையும் அவாமி லீக் மீதே வைத்தது. வங்கதேசத்தில் மட்டுமல்ல, மாலத்தீவு மற்றும் நேபாளத்திலும் இதையே செய்தது. இந்தியா, வங்கதேசம் இடையிலான உறவுகளில் அவநம்பிக்கை ஏற்பட்டதற்கான வரலாற்றுக் காரணங்களையும் ஐ.சி.ஜி அறிக்கை குறிப்பிடுகிறது.




ஐ.சி.ஜி தனது அறிக்கையில், “ஆகஸ்ட் 1975இல், சுதந்திரப் போராட்டத் தலைவரும் வங்கதேசத்தின் முதல் பிரதமருமான ஷேக் முஜிபுர் ரஹ்மான் மற்றும் அவரது குடும்பத்தினர் பெரும்பாலானோர், அதிருப்தி கொண்ட ராணுவ அதிகாரிகளால் படுகொலை செய்யப்பட்டனர். இந்த நிகழ்வு நாட்டின் திருப்புமுனையாக அமைந்தது. இந்தப் படுகொலைகளைத் தொடர்ந்து, வங்கதேசத்தில் ராணுவ ஆட்சிக் காலம் தொடங்கியது. குறிப்பாக 1976 முதல் 1981 வரை ஜியாவுர் ரஹ்மான் தலைமையிலும் (இவரும் பின்னர் ராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டார்), பின்னர் 1982 முதல் 1990 வரை ஹுசைன் முகமது எர்ஷாத் தலைமையிலும் ராணுவ ஆட்சி நீடித்தது. மேலும், “இந்த அரசாங்கங்கள் இந்தியாவுக்கு எதிரான சமநிலை கொள்கையின் ஒரு பகுதியாக, வங்கதேசத்தை பாகிஸ்தான், பிற இஸ்லாமிய பெரும்பான்மை கொண்ட நாடுகள், சீனா மற்றும்

அமெரிக்காவுக்கு நெருக்கமாகக் கொண்டு செல்ல முயன்றன. ஜியாவுர் ரஹ்மான், எர்ஷாத் ஆகிய இருவரும் தங்கள் ஆட்சிகளை நியாயப்படுத்தவும் அவாமி லீக்கை எதிர்க்கவும் வங்கதேச தேசியவாத கட்சி (பிஎன்பி), ஜாதியா கட்சி ஆகிய அரசியல் கட்சிகளை நிறுவினர்.

ஜமாத்—இ—இஸ்லாமி மீண்டும் அரசியலுக்கு வர அனுமதிப்பது உள்பட ஷேக் முஜிபுர் ரஹ்மான் அரசாங்கத்தின் மதச்சார்பற்ற கொள்கைகளையும் அவர்கள் மாற்றியமைத்தனர். மேலும் அரசியல் லாபத்திற்காக இந்திய எதிர்ப்பு உணர்வைத் தூண்டினர்" என்று ஐசிஜி அறிக்கை குறிப்பிட்டுள்ளது. சிங்கப்பூரின் எஸ். ராஜரத்தினம் ஸ்கூல் ஆஃப் இன்டர்நேஷனல் ஸ்டடீஸுக்காக பூமித்ரா சக்மா மேற்கொண்ட ஆய்வை ஐசிஜி தனது அறிக்கையில் மேற்கோள் காட்டியுள்ளது.

தலைவர்களைப் படுகொலை செய்தன அல்லது சிறையில் அடைத்தன. இதனால் அக்கட்சி அரசியலில் ஓரங்கட்டப்பட்டது. ஷேக் முஜிபுர் ரஹ்மானின் மகள் ஷேக் ஹசீனா, 1975 ஆகஸ்டில் தனது குடும்பத்தினர் படுகொலை செய்யப்பட்டபோது வெளிநாட்டில் இருந்ததால் தப்பினார்." ஷேக் ஹசீனா 1981இல் நாடு திரும்பும் வரை இந்தியாவில் தஞ்சம் புகுந்து அங்கிருந்தே கட்சியை வழிநடத்தினார். இந்தியாவின் ஆதரவு அவாமி லீக் மற்றும் இந்திய அரசுக்கு இடையிலான நெருக்கமான உறவை வலுப்படுத்தியது. இந்த உறவு ஷேக் ஹசீனாவுக்கும், சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்திய அரசியலில் ஆதிக்கம் செலுத்திய இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களுக்கும் இடையிலான தனிப்பட்ட உறவுகளின் அடிப்படையில் அமைந்திருந்தது.

ஐ.சி.ஜி அறிக்கை, "வங்கதேசத்தில் நடந்த 15 ஆண்டுக்கால ராணுவ







அதில் பூமித்ரா சக்மா பின்வருமாறு எழுதியுள்ளார்: "1975க்குப் பிறகு, ராணுவ ஆட்சிகள் பல அவாமி லீக்

ஆட்சியின்போது, இந்தியாவும் வங்கதேசமும் ஒன்றையொன்று முதன்மையாகப் பாதுகாப்பு கண்ணோட்டத்திலேயே பார்த்தன. இரு நாடுகளும் தங்கள் எல்லைக்குள் செயல்படும் கிளர்ச்சிக் குழுக்களுக்கு மறைமுக ஆதரவை வழங்கின. வங்கதேசத்தின் சிட்டகாங் மலைப் பகுதிகளில் செயல்பட்ட 'சாந்தி பாஹினி' குழுவுக்கு இந்தியா ஆதரவு அளித்தது. அதேநேரம், இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் செயல்படும் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை வழங்க வங்கதேசம் உதவியதுடன், வங்கதேச மண்ணில் அவர்கள் முகாம்களை அமைக்கவும் அனுமதித்தது.

கடந்த 1980களில், வங்கதேசத்தில் இருந்து சட்டவிரோதமாகக் குடியேறுவது இந்தியாவில் ஓர் அரசியல் பிரச்னையாக மாறியது. இதற்குப் பதிலடியாக, இந்தியா எல்லையில் வேலி அமைக்கத் தொடங்கியதுடன் எல்லைப் பாதுகாப்பு சோதனைகளையும் தீவிரப்படுத்தியது. கடந்த 1990—1991இல் வங்கதேசத்தில் ஜனநாயகம் திரும்பியபோது, இருதரப்பு உறவுகள் மேம்படும் என்ற நம்பிக்கை இந்தியாவில் உருவானது. ஆனால், வங்கதேசத்தில் புதிதாக பி.என்.பி தலைமையிலான அரசு புதிய அரசாங்கத்தை அமைத்தது.




கடந்த 1992இல் பிரதமர் கலிதா ஜியாவின் இந்திய வருகை மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான புதிய வர்த்தக ஒப்பந்தம் போன்ற ஆரம்பக்கால நேர்மறை அறிகுறிகள் இருந்தபோதிலும், உறவுகள் மேம்படும் என்ற நம்பிக்கை விரைவில் தகர்ந்தது.

ஜமாத்—இ—இஸ்லாமி ஆதரவு பெற்ற பிஎன்பி அரசாங்கத்தின் மீதான இந்தியாவின் நீண்டகால அவநம்பிக்கை படிப்படியாகப் பகையாக மாறியது. வங்கதேசம், தொடர்ந்து கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு அளிப்பதாக இந்திய அதிகாரிகள் குற்றம் சாட்டினர். மேலும் நதி நீர் பங்கீடு, எல்லை நிர்ணயம் போன்ற முக்கிய இருதரப்பு விவகாரங்களில் மிகக் குறைந்த முன்னேற்றமே ஏற்பட்டது. இந்தியாவின் உள்நாட்டு அரசியலும் இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்து தேசியவாத பாரதிய ஜனதா கட்சியின் எழுச்சி, 1992 டிசம்பரில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது ஆகியவை வங்கதேசத்தில் இந்திய எதிர்ப்பு உணர்வைத் தூண்டின.

பாபர் மசூதி இடிப்புக்கு உடனடி எதிர்வினையாக வங்கதேசத்தில் இந்து சமூகங்கள் தாக்கப்பட்டன, அதே நேரத்தில் இந்தியாவிலும் இந்து—முஸ்லிம் மதக் கலவரங்கள் வெடித்தன. இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்பு அரசியல் இருந்தால், அது வங்கதேசத்தையும் பாதிக்கும் என்றும், அங்கு தாராளவாத ஜனநாயகத்தை நாம் எதிர்பார்க்க முடியாது என்றும் பேராசிரியர் லாமா கூறுகிறார்.

கடந்த 16 மாதங்களாக வங்கதேசம் இந்தியா இடையிலான இருதரப்பு உறவுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த 10




நாட்களில், இந்தப் பதற்றம் ஒரு கடுமையான நெருக்கடியாக மாறியுள்ளது. இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று தூதர்களை மீண்டும் மீண்டும் வரவழைத்து எதிர்ப்பு தெரிவிப்பதோடு, எதிர் அறிக்கைகளையும் வெளியிட்டு வருகின்றன.

பாதுகாப்பு காரணங்களைக் கூறி, டெல்லி உள்ளிட்ட நான்கு இடங்களில் இந்தியாவுக்கான விசா சேவைகளை வங்கதேசம் நிறுத்தி வைத்துள்ளது. இந்தியாவும் டாக்கா உள்ளிட்ட நான்கு இடங்களில் விசா சேவைகளைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

டிசம்பர் 25 அன்று, வங்கதேசத்தின் முன்னணி நாளிதழான 'புரதோம் ஆலோ' ஆங்கில பதிப்பில், 'இந்தியா தனது அவாமி லீக் சார்பு நிலையைக் கடந்து நகருமா?' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியானது. "செல்வாக்கிழந்த ஆட்சியாளருடன் இந்தியாவின் நெருங்கிய உறவு, வங்கதேசத்தில்

இந்திய எதிர்ப்பு உணர்வை மேலும் அதிகரித்தது. வெகுஜன இயக்கத்தின் மூலம் ஷேக் ஹசீனா அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்ட பிறகு, சூழல் இந்தியாவுக்கு பாதகமாக மாறியது. ஷேக் ஹசீனாவின் 15 ஆண்டுக்கால சர்வாதிகார ஆட்சியின்போது 'பொற்காலம்' என்று அழைக்கப்பட்ட வங்கதேசம் —இந்தியா உறவின் எதிர்காலம் இப்போது கடுமையான நிச்சயமற்ற நிலையை எதிர்கொள்கிறது. என்று அதில் கூறப்பட்டுள்ளது.

ஜூலை 2024இல் மக்கள் போராட்டங்களுக்கு மத்தியில் பதவியில் இருந்து அகற்றப்பட்ட ஷேக் ஹசீனா இந்தியாவுக்கு தப்பிச் சென்றார். அதன் பிறகு ஒரு இடைக்கால அரசாங்கம் பதவியேற்றது, இது இருதரப்பு உறவுகளில் கசப்பை ஏற்படுத்தியது. கடந்த ஆண்டு டிசம்பரிலும் உறவுகள் பாதிக்கப்பட்டன, ஆனால் இந்த அளவுக்கு இல்லை.




வங்கதேசத்துக்கான முன்னாள் அமெரிக்க தூதர் எம். ஹுமாயூன் கபீர், புரதோம் ஆலோவிடம் பேசுகையில், "வங்கதேசம், இந்தியா இடையே இவ்வளவு பெரிய அளவிலான சந்தேகத்தையும் அவநம்பிக்கையையும் நான் இதுவரை பார்த்ததில்லை. சர்வதேச நெறிமுறைகளின்படி, இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் தூதரகப்




பணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். இரு அண்டை நாடுகளும் ஒன்றையொன்று சார்ந்து இருப்பதால், இந்தியா எதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு, வங்கதேசத்துடனான உறவில் நம்பிக்கையை மீட்டெடுக்க முன்முயற்சி எடுக்க வேண்டும்," எனத் தெரிவித்தார். பி.என்.பி **(BNP)** செயல் தலைவர் தாரிக் ரஹ்மான், 17 ஆண்டுகளுக்குப் பிறகு, டிசம்பர் 25 அன்று லண்டனில் இருந்து வங்கதேசத்திற்குத் திரும்பினார். பி.என்.பி ஆட்சிக்கு வந்தால், அவர் வங்கதேசத்தின் புதிய பிரதமராக வாய்ப்புள்ளது. பி.என்.பி உடனான இந்தியாவின் உறவு இன்னும் நிச்சயமற்றதாகவே உள்ளது.

இருப்பினும், கடந்த வாரம் இந்திய பிரதமர் நரேந்திர மோதி, கலிதா ஜியாவின் உடல்நலனுக்

காக பிரார்த்தனை செய்து, உதவி செய்வதாக உறுதியளித்தார். இந்தச் செயலை பி.என்.பி வரவேற்றுள்ளது.


VARSHA
தமிழ்
நற்றமிழின் நாடித்துடிப்பு
2026
HAPPY NEW YEAR
HAPPY PONGAL
HAPPY PONGAL



# சங்கம்

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மன்னர்கள், புரவலர்களாக இருந்து புலவர்களைக் காத்து நின்றதனால்தான் இன்றும் சங்கத் தமிழ் பாடல்களான திருக்குறள், ஆத்திச்சூடி, நாலடியார் அகம், புறமெனப் பல்லாயிரப் பாடல்கள் மூவாயிரமாண்டுகள் தாண்டியும் தமிழின் அடையாளமாகத் திகழ்கின்றன.

ஆனால் இன்றோ, பல அற்புதமான கவிஞர் பெருமக்களின் படைப்புக்களோடு அவர்களது அடையாளங்களும் அழிந்து கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் நிலை!...

ஆனால், நெஞ்சை நெகிழைச் செய்யும் அந்தக் காலத் தமிழ்த் திரைப்படப் பாடல்களையும் இந்தக்கால தமிழ்ப் திரைப்படப் பாடல்களையும், வழங்கிய, இன்னும் வழங்கிக் கொண்டிருக்கும் கவிஞர்கள் பலர், விளிம்பு நிலைக்குக் கீழேயும், கனவுலகில் பசியாறியபடியும் திரிசங்கு நிலையில் இருப்பதைக் காண நேரும் போது நெஞ்சம் கனக்கிறது.

அந்த நிலையைக் கண்ட ஒரு நல்மனம் அதற்காகக் துடித்தது...

அந்த நிலையைக் களைந்திட வேண்டுமென நினைத்தது...




அக்கவிஞர்களுக்குத் தோள் கொடுத்து அன்போடு அணைத்தது...

அந்த நல்லுள்ளத்துக்குச் சொந்தக்காரர்தான் கவிஞர் திரு. தமிழமுதன் அவர்கள்...

படைப்பாளி, பாடலாசிரியர், இலக்கியம் படைக்கும் இன்முகத்தார், இரங்கும் மனம் கொண்ட ஈகை மனத்தார் என்பது இவரை நெருக்கமாக அறிந்தவர்கள் உணர்கின்ற உண்மை!

தமிழ்த் திரைப்படத் துறையில் இயக்குநர்கள், நடிகர்கள், தயாரிப்பாளர்கள், தொழிலாளர்கள் எனப் பலரும் சங்கங்கள் கொண்டிருக்கையில், திரைப்படப் பாடலாசிரியர்களுக்கென ஒரு சங்கம் இல்லாதிருந்த பெருங்குறையைப் போக்கி, தமிழ்ப் பாடலாசிரியர்களுக்கென சங்கம் கண்டு



# கண்ட பாவலன்

அதனைத் திறம்பட நடத்தி வருகிறார் திரு. தமிழமுதன் அவர்கள். எப்படி இப்படியொரு சிந்தனை உதித்தது? இதன் பின்னணி என்ன? செயல்பாடுகள் என்ன? சங்கம் சாதித்தது என்ன? எதிர்காலத் திட்டங்கள் என்ன? என்ற வினாவுக்கெல்லாம் தெள்ளிய நீரோடை போல், அமைதியாய், அழகாக விளக்குகிறார் திரு. தமிழமுதன் அவர்கள்.

இனி அவரோடு...

"திரைப்படப் பாடலாசிரியர்களுக்கு ஒரு அமைப்பு வேண்டுமென விரும்பிய கவிஞர்

## கொற்றவன்

வாலி அவர்கள், அதற்கான முன்னெடுப்புகளில் இறங்கி கவிஞர் ஆலங்குடி சோமு, கவிஞர் அவிநாசி மணி போன்றோர்களிடம் ஆலோசனை நடத்தியிருக்கிறார். ஆனால் இந்தத் தகவல் சில திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு தெரிய வர, அவர்களின் எதிர்ப்பால் அது நடக்கவில்லை. ஆனால் வாலி அவர்களோ முயற்சியைக் கைவிடாமல், கவியரசர் கண்ணதாசன், கவிஞர்







மருதகாசி ஆகியோரிடம் கலந்து பேசி, கண்ணதாசனை சங்கத்தின் தலைவராக இருக்க வேண்டுகிறார். கவியரசரோ, 'நம்மில் மூத்தவர் மருதகாசிதான். அவரே தலைவராக இருக்கட்டும். நான் செயலாளராகவும், நீ பொருளாளராகவும் இருப்போம்.' என்கிறார். அன்று காலையில் தொடங்கி, மாலை வரை இதைப்பற்றி பேசியவர்களுக்குள் ஏதோ சிக்கல் வர, அதோடு மூடுவிழா படலமும் நடந்தேறியது. இதுகுறித்து வாலி அவர்கள், 'காலையில் ஆரம்பித்து சாயங்காலம் கலைந்த ஒரே சங்கம் பாடலாசிரியர் சங்கம்தான்' எனக் கிண்டலாகப் பதிவு செய்துள்ளார்.

முன்னாள் சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியம் அவர்கள், என்னைக் கவிஞர் வாலி அவர்களிடம், 'இவர்தான் பாடலாசிரியர் சங்கத்தின்

தலைவர்' என்று அறிமுகப்படுத்தியதும், 'என்னய்யா சொல்றே? பாடலாசிரியர் சங்கத் தலைவரா? சங்கம் ஆரம்பித்து எவ்வளவு நாளாகிறது?" என வியப்பாகிக் கேட்டார் அவர். 'ஆறு மாதமாகிறது' என்றேன்.



'இதிலேயே நீ ஜெயிச்சுட்டே! சரி, எவ்வளவு உறுப்பினர்கள் இருக்கிறார்கள்?' என்றார். 'இப்போதைக்கு 84 உறுப்பினர்கள்' என்றதும், 'ரொம்ப மகிழ்ச்சி! எப்படிய்யா இதை நடத்துறே?' என்றவர், தன் ஆதரவு சங்கத்துக்கு எப்போதும் உண்டு எனக் கூறி வாழ்த்தினார். ஆனால், அதன்பின் அவருக்கு உடநலம் ஒத்துழைக்காமல் போய்விட்டது. அவர் இறந்த போது, அவருக்கு எங்கள் சங்கம் சார்பாக, கவிஞர்கள் பலரும் திரண்டு, அவரது தகனம் வரை நடந்து சென்று இறுதி மரியாதையை செலுத்தினோம்." எனப் பாடலாசிரியர்களுக்கென ஒரு சங்கம் துவங்கப்பட இருந்த அந்தக்கால நிகழ்வினை நினைவு கூர்ந்தவர், அரை நூற்றாண்டுக்குப் பின் தற்போது 'பாடலாசிரியர்கள் சங்கம்' தோன்றிய ஆரம்ப நாட்களை விவரிக்கத் தொடங்கினார்.

"அமுதே' படத்திற்கு நான் பாடல் எழுதிபோது, இசையமைப்பாளர் திரு. எஸ்.ஏ.ராஜ்குமார் அவர்களுடன் இருந்தவர்களில், தெலுங்குப் படங்களுக்கு பாடல் எழுதும் திரு. இ.எஸ்.மூர்த்தி என்பவர், என்னுடைய 'அமுதே' பாடல் வெளிவந்தவுடன் 'நீங்கள் ஐ.பி.ஆர்.எஸ்.ல் பதிவு செய்யுங்கள்' எனக் கூறினார். அப்போதுதான் ஐ.பி.ஆர்.எஸ். என்கின்ற அமைப்பு இருப்பதே எனக்கு தெரியும்.

அதன்பின், என்னுடைய இன்னொரு நண்பர் ஆசான் அவர்களின் இசையில் 'செவ்வேள்' என்கிற படத்தில் நான் பாடல்கள் எழுதிய போது, அவர் மூலமாகத்தான் நான் ஐ.பிஆர்.எஸ். உறுப்பினரானேன். சேர்ந்த முதல் ஒரு வருடத்திற்குள்ளே எனக்கு 20,000 ரூபாய் ஐ.பி.ஆர்.எஸ். மூலம் ராயல்டி பெற்றேன். 2008—ல் நடந்தது.

அந்தச் சமயங்களில் புதிய பாடலாசிரியர்களுக்கு இசை வெளியீட்டின் போது எந்த முக்கியத்துவமும் தரமாட்டார்கள். மேடையேற்றவும் மாட்டார்கள். அதுதான் எனக்கும் நடந்தது. 'அமுதே' படப்பாடல் வெளியீட்டின் போது என்னை மேடைக்கு அழைக்கவில்லை. ஆனால் என் நண்பர்கள் அனைவரும் 'நீங்கள் மேடைக்குச் செல்லுங்கள்' என வற்புறுத்தியதால், நான் மேடைக்குச் சென்றேன். அழைக்காமல் சென்றதால், தயாரிப்பாளர் என்னை ஒருமாதிரியாகப் பார்த்தார்.

"நான் இந்தப் படத்தின் அனைத்து பாடல்களும் எழுதியிருக்கிறேன். முறையாகப் பார்த்தால் நீங்கள்தான் என்னை மேடைக்கு அழைத்திருக்க வேண்டும். அதனால்தான் நானே மேடைக்கு வந்தேன். இது என்னுடைய உரிமை தானே!" என்றேன்.

ஆனால், அந்தச் சம்பவத்துக்குப் பிறகு எனக்கு ஏற்பட்டது போன்ற நிலை, மற்ற கவிஞர்களுக்கும் வரக் கூடாதென நினைத்தேன். அதற்கான முயற்சியில் நானும் நண்பர்களும் இறங்கினோம். நிறைய பேசினோம். நிறைய பேரைச் சந்தித்தோம்.









அப்போதுதான் பல கவிஞர்கள் அவர்களுக்கான நியாயமான வெகுமதியைப் பெறாமலும், எழுதிய பாடல்களுக்கான தொகை கிடைக்காமலும், இன்னும் பலர் உணவுக்கே வழியில்லாமல் தவிக்கும் நிலையெல்லாம் தெரிய வந்தது. இவர்களுக்காகவாவது சங்கம் தோன்றியாக வேண்டும் என்ற எண்ணம் மேலும் திடம் பெற்றது.

இதனிடையே மாயாண்டி குடும்பத்தார், கோரிப்பாளையம், மிளகாய் போன்ற படங்களில் நான் எழுதிய பாடல்களும் மிகப்பெரிய வெற்றி பெற்றதில், ரேடியோ மிர்ச்சி, விஜய் டிவி, ஆனந்த விகடன் எனப் பலரும் என்னைப் பேட்டி கண்டனர். அதனால் நான் பலருக்கும் தெரிந்த கவிஞனானேன். 2012 ஜனவரி மாதம் 12—ஆம் தேதி ராமச்சந்திரா மருத்துவமனையில் நான் பார்த்து வந்த வேலையை விட்டுவிட்டு, முழு நேரமாகத் திரைத்துறைக்கு வந்து விட்டேன். அடுத்து வந்த சில தினங்களில் அதாவது, 2012 ஜனவரி 25—ஆம் தேதி இசையமைப்பாளர் ஆசான் அவர்களுடைய காவியாஸ்ரீ ஒளிப்பதிவுக் கூடத்தில்தான் பாடலாசிரியர் சங்கம் பிறந்தது. தலைவராக வேறு யாரையாவது நியமிக்கலாம் என்ற போது, நண்பர் பாலமுரளிவர்மன் அவர்கள், "நீதான் இந்தச் சங்கத்தை ஏற்படுத்தினாய். நீதான் தலைவராக வேண்டும்." என்றார். அதன்படி, சங்கத்திற்கு நான் தலைவராகவும், இளையகம்பன் செயலாளராகவும், கவிஞர் பச்சியப்பன் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டோம். அப்படி உருவான சங்கத்தை முறையாக, 2012 ஏப்ரலில் பதிவுசெய்தோம்.






எங்கள் சங்கத்தைப் பார்த்த கவிஞர் முத்துலிங்கம் அவர்கள், "இந்த சங்கம் கண்ணதாசன் கனவு கண்டதுய்யா. இதை அவராலேயே செய்ய முடியவில்லை. நீங்க செஞ்சிருக்கீங்க! உங்களுக்கு முழு ஆதரவு உண்டு!" என வாழ்த்தினார்.

என் மானசீகக் குருவான மகாகவி திரு. ஈரோடு தமிழன்பன் அவர்கள், "சங்கத்தால் நீ சங்கடங்களைச் சந்திக்கலம். இதற்கு முன்பே இப்படி எல்லாம் நடந்திருக்கிறது. ஆனாலும் நாங்கள் எல்லாம் இருக்கிறோம். கவலைப்படதே!" என்றார். அத்துடன் புலவர் புலமைப்பித்தன், கவிப்பேரரசு வைரமுத்து, கவிஞர் மு. மேத்தா, எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகத்தினுடைய வேந்தர் பாரிவேந்தர் போன்ற பலரும் சங்கத்தை வாழ்த்தினர். இப்படியாகப் பலரின் ஆதரவு நமக்குக் கிடைத்துள்ளது. நண்பர் ஆசான் அவர்கள் குடியிருந்த, தசரதபுரம் பெரியார் தெருவின் மணல் வெளியில் சங்கக் கூட்டம் நடக்கும். படிப்படியாகப் பாடலாசிரியர்கள் பலர் உறுப்பினராகச் சேர ஆரம்பித்தார்கள். நானும் பலரிடமும் இதுபற்றி நாளுக்கு நாள் விளக்கிக் கொண்டே இருந்தேன்.

கோட்டைக் குமார் என்கிற தயாரிப்பாளர், மாமதுரை என்கிற தனது படத்தில், 'மதுரை மதுரைதான் மணக்கும் மதுரைதான்' என்ற ஒரு பாட்டும் இளையராஜா இசையில் எழுதியிருக்கிறார். அவரது இரண்டாவது படமான, 'காதல் பொல்லாதது' படத்தில் நான் மூன்று பாடல்கள் எழுதினேன். அந்த நட்பில் சங்கம் பற்றிக் கேட்டறிந்தவர், "என் வீட்டின் மாடியில் சங்க அலுவலகத்தை நடத்துங்கள்." என்று மனமுவந்து கொடுத்ததை எப்போதும் மறக்க முடியாது. வாடகையே இல்லாமல் எங்களுக்குக் கிடைத்த அந்த அலுவலகத்தில் ஒவ்வொரு மாதமும் நாங்கள் கூட்டம் போட ஆரம்பித்தோம்." எனச் சங்கம் தோன்றிய வரலாற்றைத் தனக்கேயுரிய சாந்தப் புன்னகையுடன் விளக்கும் திரு. தமிழமுதன் அவர்கள், சங்கத்தின் சிறப்பான செயல்களை எடுத்தியம்பும் விதமே, மார்கழிப் பனிபோல் மனதை நிறைக்கிறது.

"படிப்படியாக சங்கத்தின் செயல்பாடுகளை மேம்படுத்திக் கொண்டே வந்தோம். ஒவ்வொரு இசை வெளியீட்டு விழாவிற்கும் செல்லும்போது, 'நாங்கள் பாடலாசிரியர்கள் சங்கத்திலிருந்து, உங்கள் படத்தின் பாடலாசிரியரை கௌரவப்படுத்தப் வந்திருக்கிறோம். அவரை மேடைக்கு கூப்பிடுங்கள்' என அந்தப் பாடலாசிரியர்களை அழைத்து சங்கம் சார்பில் சிறப்பு செய்யத் தொடங்கினோம்.

அதுபோலவே, இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட புதிய கவிஞர்கள் பலபேரின் கவிதை நூல்களையும், பல தனிப்பாடல் தொகுப்புக்களையும் வெளியிட்டு அவர்களைப் பெருமைப்படுத்தி இருக்கிறோம்.

ஒவ்வொரு ஆண்டும், சங்கத்தில் உறுப்பினராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் புதிய

பாடலாசிரியரிராக அறிமுகம் ஆகியவர்களைச் சிறப்பிக்கும் வகையில், அவர்களுக்கு 'இளந்தளிர்' என்கின்ற விருதும், மூத்த கவிஞர்கள் என்றால், 'வாழ்நாள் சாதனையாளர்' என்கின்ற விருதும் வழங்கிச் சிறப்பிகின்றோம்.

கவிஞர்கள் ஓரிரு பாடல் எழுதியிருந்தாலுமே அவர்களை ஐ.பி.ஆர்.எஸ்.—சில் உறுப்பினராக்கி அவர்களை விடுவோம். பணமில்லாவிட்டாலும் அந்த உறுப்பினருக்கான பணத்தை நானே கொடுத்ததும் கூடப் பலரை உறுப்பினராக்கி இருக்கிறேன்.

ஐ.பி.ஆர்.எஸ். தமிழ்நாட்டில் ஆறு நபர்களைச் செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுத்தபோது, இசையமைப்பாளர் தினா, பாடலாசிரியர் விவேகா, இசையமைப்பாளர் தட்சிணாமூர்த்தி, ஆடியோ புரடியூசர் தட்சிணாமூர்த்தி, போன்றோருடன் நானும் ஒருவனாக இருந்து பணியாற்றி வருகிறோம்.

ஒருநாள் புலவர் புலமைப்பித்தன் அவர்கள், "எனக்கு ஐ.பி.ஆர்.எஸ்—ல் இருந்து பணம் வரவில்லை, நீ அதைக் கொஞ்சம் எனக்காகப் பார்க்கிறாயா?" எனக் கூற, நான் ஐ.பி.ஆர்.எஸ்.ல் திரு. சசிபூஷன் அவர்களிடம் பேசி அதற்கான ஆவணங்கள் எல்லாம் தந்து புலமைப்பித்தன் அவர்களுக்கு விடுபட்ட தொகை முழுவதும் கிடைக்கச் செய்தேன். அதுபோல, கவிஞர் மு. மேத்தா அவர்களுக்கும், கவிஞர் முத்துலிங்கம் அவர்களுக்கும் பணம் வரவில்லை என்ற செய்தி கேட்டு, அவர்களுக்கும் ஆவணங்களை எல்லாம் சேகரித்து, ஐ.பி.ஆர்.எஸ்.ல் கொடுத்து சேரவேண்டிய தொகையினைப் பெற்றுக் கொடுத்தேன்.






நானும், கவிஞர் வாசனும் 'இரட்டை ஜடை வயசில்' படத்தில் பாடல்கள் எழுதினோம். அவர் இறந்து 12 வருடங்கள் ஆனாலும், அவரது குடும்பத்திற்கு ராயல்டி வாங்கி கொடுக்கவேண்டுமென வாசன் பிறந்த ஊரான தஞ்சைக்குச் சென்று, அவருடைய குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்து, அவர்களை சென்னைக்கு அழைத்து வந்து ஐ.பி.ஆர்.எஸ்—ல் சேர்த்து அவர்கள் ராயல்டி பெற வகை செய்தேன்.

புதிதாகப் பாடல் எழுத வருகிறவர்களுக்கென நான் 'ஐ மியூசிக் இன்டர்நேஷனல்' எனும் இசை கம்பெனியை உருவாக்கி அதை முறையாகப் பதிவு செய்துள்ளேன். அதில் புதியவர்களின் பாடல்களைச் சேர்த்து அவர்களுக்கு சேரவேண்டிய உரிமைத் தொகையைப் பெற்றும் தருகிறேன். அந்த வகையில் பாடலாசிரியர்கள் பலருக்கும் பல வகையிலும் சங்கம் உதவிக்கரம் நீட்டியிருக்கிறது.

சங்கத்தின் முதலாம் ஆண்டு விழாவிற்கு கவிஞர் புலமைப்பித்தன், கவிஞர் முத்துலிங்கம், ஐ.பி.ஆர்.எஸ் மண்டல மேலாளர் ராஜசேகர் போன்றோர் வந்து சிறப்பித்த அந்த அரங்கத்தில், புலமைப்பித்தன் அவர்கள் உள்ளே நுழைந்த போது அனைவரும் எழுந்து நின்றார்கள். அவர் மேடைக்குச் சென்று அமர்ந்த பின்புதான் எல்லோரும் அமர்ந்தார்கள். அதைப் பார்த்து புலமைப்பித்தன் நெகிழ்ந்து போனார். அவர் தலைமை உரையாற்றிவிட்டு விடைபெறும்போது, 'இதுவரை இப்படியான மரியாதையை நான் எங்குமே பார்த்ததில்லை! தமிழமுதா! நீ என் பிள்ளை மாதிரி." எனக் கண்கள் கலங்கி என் கைகளைப் பிடித்தபடி கூறினார்.

அவ்விழாவில், கவிஞர் புலமைப்பித்தன் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் என்கின்ற விருது வழங்கினோம். அவரது தலைமையில் முதுபெரும் பாடலாசிரியர் ஆத்மநாதன் அவர்களின் குடும்பத்தினரை அழைத்து அவர்களுக்கு மரியாதை செய்து, அவர்களுக்கு உடைகளுடன் பணமுடிப்பும் வழங்கினோம். மேலும், கவிஞர் முத்துலிங்கம், மு.மேத்தா, நா.காமராசன், கவியரசர் இளந்தேவன் போன்றோர்க்கு வாழ்நாள் 'சாதனையாளர் விருதும்' கவிஞர் யுகபாரதி, பழனி பாரதிக்கு 'கவியரசு கண்ணதாசன்' விருதும் வழங்கிச் சிறப்பித்திருக்கிறோம்.

எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத்தின் நிறுவனத் தலைவர் பாரிவேந்தர் அவர்கள், ஒவ்வொரு ஆண்டும் விழா நடத்துவதற்கு அரங்கமும் விருதுத்

தொகையான ரூ. 60,000 கொடுத்தும் சங்கத்திற்கு தூணாக நின்று தாங்கிப் பிடிக்கிறார்.” எனச் சங்கத்தின் செயல்பாடுகளை நினைவு கூர்ந்தவர், கொரோனா காலகட்டத்தில் சங்கம் செய்த அளப்பரிய சேவைகளைக் கூட அடக்கமாகவே முன்வைக்கிறார்.




“கொரோனா சமயத்தில், தமிழக அரசே ஆயிரம் ரூபாய் மட்டும் கொடுத்த நிலையில், ஐ.பி.ஆர். எஸ் மூலம் சங்க உறுப்பினர்களுக்கு, முதல் தவணையாக ரூ.7500, அடுத்தடுத்து ரூ.5000, ரூ.7500 என வழங்கி, அந்த நெருக்கடி நிலையில், ஐ.பி.ஆர்.எஸ் மூலம் அரிசியை வாங்கிப் போட்டு கொரோனாவை விரட்டி அடித்தோம்.

கோயம்பேடு பழக்கடையில் வேலை செய்யும் சுப்பிரமணி என்ற கவிஞருக்கு தேவையான ராயல்டி வாங்கிக் கொடுத்த போது, அவர் மூலம் தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்ட கவிஞர் பரதன் அவர்கள், தான் எந்தவித ஆதரவுமின்றித் தவிப்பதையும், ‘எருக்கஞ் செடி ஓரம் இறுக்கி அணைச்ச..’ என்ற வெற்றிப் பாடல் தன்னுடையது என்றும் அறிமுகப்படுத்திக் கொண்டார். அவருக்குத் தேவையான உணவு, இருப்பிட வசதிகளைச் செய்து கொடுத்து, இவரோடு பாடலாசிரியர் முத்து விஜயனையும் தங்க வைத்துப் பராமரித்தோம்.

‘துள்ளாத மனமும் துள்ளும்’ என்ற படத்தில் இயக்குநர் எழில் அவர்கள்தான் முத்து விஜயனை அறிமுகப்படுத்தினார். ‘மேகமாய் வந்து போகிறேன்’ பாடலை எழுதியவர் முத்து விஜயன். இந்த மெட்டிற்கு வைரமுத்து எழுதிய பாடல், நடிகர் விஜய்க்கு பிடிக்காமல் போனது. ‘முதலில் எழுதிய பாடலே சிறப்பாக இருந்தது. அதையே வைத்துக் கொள்ளுங்கள்.’ என்று விஜய் சொல்ல, அந்தப் பாடல் மூலமாக முத்து விஜயன் அறிமுகமாகி வெற்றி பெற்றார்.

ஆனாலும், பின்னாளில் மிகவும் கஷ்டப்பட்ட கவிஞர் முத்து விஜயனுக்கு என் வீட்டில் இருந்தோ, இல்லையெனில் உணவகத்திலோ சாப்பாடு கொடுப்பேன். அவருக்கு உடல்நிலை மோசமாகிய சமயம், நானும், நண்பர் சீர்காழி சிற்பி, பாலி ஸ்ரீரங்கம் ஆகிய மூவரும் அவரை பார்ப்பதற்குச் செல்லும் போதே அவர் இறந்து விட்டார் என்ற ஒரு தகவல் வருகிறது. அவர் உடலை அடக்கம் செய்வதற்கு நாங்கள் பட்ட பாட்டை விவரிக்க விரும்பவில்லை. காரணம் அதைப் பற்றி ஒரு படமே எடுக்கலாம் எனும் அளவுக்கு செய்திகள் அதில் கிடக்கின்றன. இடுகாட்டில் அவர் உடலைத் தொடக்கூட மாட்டேன் என்றார்கள். நான்தான் இறுதிச் சடங்குகள் அனைத்தையும் செய்தேன்.

அந்த வகையில், இந்தச் சங்கம் என்னைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு கவிஞர்களின் உணர்வுகளுடன் மட்டுமல்ல, அவர்களின் வாழ்வுடன் இரண்டறக் கலந்து இயங்குகிறது என்பதை நான் மிகவும் அனுபவப்பூர்வமாக உணர்ந்திருக்கிறேன். ‘சங்கத் தலைவன்’ என்ற பெயரில் இருந்து கொண்டு சேவை செய்யும் நான் உள்ளபடி ஒரு தொண்டன்தான் என்பதையும் உணர்ந்திருக்கிறேன். அதையே இங்குள்ள பல கவிஞர்களும் உணர்ந்து வருகிறார்கள் என்பதுதான் இந்தச் சங்கத்தின் உயிர்ப்பும் உயர்வும்!” என முத்தாய்ப்பாக முடிக்கிறார் திரு. தமிழமுதன் அவர்கள்.




‘படைப்பதனால் என் பேர் இறைவன்’ என மார்தட்டிச் சொன்னார் கவியரசர்!

படைப்பாளிகளின் அடையாளங்களையும் வாழ்வாதாரங்களையும் காத்து நிற்கும் பணியினைச் செய்வதன் மூலம் இந்தப் ‘பாடலாசிரியர் சங்கம்’ செய்யும் பெருமைமிகு செயல்களுக்குத் எந்தக் கவிஞனும் தலைவணங்கியே தீரவேண்டும்!

‘தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!’ என்ற தமிழ் மூதாட்டியின் வார்த்தைகளின் மறுவடிவமாய் வலம் வரும் ‘சங்கம் கண்ட இந்தப் பாவலரின்’ பெருமையும்... சொல்லவும் பெரிதே!



# தமிழே

## இலங்கையில் இராமாயணச் சுவடுகள்

ஆசியாவில் சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் நாடுகளில் இலங்கை முக்கிய இடத்தை வகிக்கின்றது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு, இயற்கை அழகுடன் காணப்படும் நாடு இலங்கை.

வெப்ப பிரதேசம், குளிர் பிரதேசம், நடுநிலையான பருவநிலையை கொண்ட பிரதேசம் என அனைத்து விதமான பருவநிலைகளையும் கொண்டமைந்த நாடு இலங்கையாகும். ஒரு பருவநிலையிலிருந்து இன்னுமொரு பருவநிலையை கொண்ட பிரதேசத்திற்கு வெறுமனே 2 மணிநேரத்தில் செல்லக்கூடிய வகையில் சூழல் அமைந்துள்ளது.

கடல், மலைகள், ஆறுகள், குளங்கள், காடுகள், நீர்வீழ்ச்சிகள் என இயற்கை அழகுகளை கொண்டமைந்துள்ள இலங்கையில், யானைகள், சிறுத்தைகள் உள்ளிட்ட மேலும் பல்வேறு அரிய வகை மிருகங்களையும் இலகுவாகப் பார்க்கக்கூடியதாகவுள்ளது. இயற்கையான சூழல் கட்டமைப்பு மாத்திரமன்றி, வரலாற்று ரீதியில் சிறப்புமிக்க இடங்களையும் சுற்றுலா பயணிகளினால் பார்க்க முடியும்.

இந்தியாவில் ராமர் என்ற பெயரில் அநேகமான கோயில்கள் காணப் பட்டாலும், இலங்கையில் சீதா எலிய கோயிலைத் தவிர உலகில் வேறு எந்த இடத்திலும் சீதை என்ற பெயரில் கோயில்கள் இல்லை சீதா அம்மன் ஆலயம் நுவரெலியாவிலிருந்து பதுளை வீதியில் 3.6 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இராவணனால் மறைத்து வைக்கப்பட்டிருந்த சீதையை சூரிய ஒளியை பார்ப்பதற்காக அந்த இடத்திற்கு அழைத்து வரப்பட்டதாகவும், சீதையை தேடி வந்த இந்த இடத்தில் தான் அனுமனால் சீதையை முதன்முதலாக பார்க்க முடிந்ததாகவும் சிலரால்








ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அது தொடர்பான சில அடையாளங்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

‘ஸ்ரீராமாயணச் சுவடுகள்’ **(Sri Ramayana Trails)**

மேற்குறிப்பிட்ட புராணக்கதையுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் இலங்கையின் *9* வரலாற்று இடங்களை மேம்படுத்தும் திட்டமான ‘ஸ்ரீராமாயணச் சுவடுகள்’ (ஷிகூஷீவீ ஸிணீனீணீஹ்ணீஸீணீ ஜிக்ஷீணீவீறீஷ) கொழும்பில் கடந்த ஏப்ரல் மாதம் *21*ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்திய—இலங்கை சமய மற்றும் கலாசார தொடர்பை மேம்படுத்தி, நாட்டில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கத்துடன், அதிநவீன தொழில்நுட்ப மற்றும் சுற்றுலா முறையை பின்பற்றும் ‘ஸ்ரீராமாயணச் சுவடுகள்’ திட்டம், அங்கு அதிகாரப்பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

ரஞ்சன் அருண் பிரசாத்

இந்தியாவின் அயோத்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஸ்ரீராமர் ஆலயத்தின் பிரதம பொருளாளர் கோவிந்த் தேவகிரி மகாராஜ் சுவாமிகள் மற்றும் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் தலைமை அதிகாரியுமான சாகல ரத்னாயக்க ஆகியோர் பிரதம அதிதியாக கலந்துகொண்டதன் மூலம் இந்த நிகழ்ச்சி ஆரம்பமானது.

இது *50* மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு என்று






கூறப்படுகிறது. ஸ்ரீ ராமாயண சுவடுகள் என்று அழைக்கப்படும் இந்த திட்டம், இலங்கையில் ராமர்—சீதையின் கதையுடன் தொடர்புடையதாக அங்கீகரிக்கப்பட்ட 9 இடங்களை மேம்படுத்தும் திட்டம் ஆகும்.

அந்த 9 இடங்கள் பின்வருமாறு.

1. ஆதாமின் பாலம் மன்னார் படுகையில் இருப்பதாக கூறப்படுகிறது. (ஒற்றுமை மற்றும் வலிமையைக் குறிக்கும் ராமரின் படையால் கட்டப்பட்ட பழம்பெரும் பாலம்)

2. சீதா எலிய (சீதா தேவியை ராவணனால் சிறைபிடிக்கப்பட்ட இடம் என்று கூறப்படும் பசுமையான மற்றும் அமைதியான சூழலில்) இடம்)

5. காலி ரூமஸ்ஸல (சன்ஜீவனி மூலிகை காணப்பட்டதாக கூறப்படுகின்றது)

6. திருகோணமலை கோணேஸ்வரம் ஆலயம் (சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த பழமையான கோயிலின் கட்டிடக்கலை முக்கியத்துவம் மற்றும் ஆன்மீக முக்கியத்துவம்)

7. சிலாபம்— மாணவரி கோயில் (அருள் மற்றும் பக்தியின் சின்னமான ராமரால் நிறுவப்பட்ட கோயில்)

8. எல்ல ஸ்ரீ ராவணன் குகை (சீதையை மறைத்து வைத்ததாகக் கூறப்படும் இடம்)






3. வெலிமடை, திவுரும்பொல (சீதா தேவியின் அக்னி சோதனை)

4. உஸ்ஸங்கொட தேசிய பூங்கா (இராமர் முதலில் இலங்கையில் இறங்கிய

9. கதிர்காமம் அல்லது தெற்கு கைலாசம்.

இதற்கிடையில், இந்த திட்டத்தின் ஒரு சிறப்பு என்னவென்றால், ராமர்—சீதை புராணத்துடன் தொடர்புடைய வரலாற்றுக் கதையானது செயற்கை நுண்ணறிவு **(AI), Augmented reality** மற்றும் **virtual Reality** போன்ற அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி காட்சிப்படுத்துவது ஆகும்.

சிகிரியா

யுனேஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்ட உலக பாரம்பரிய தலமாக சிகிரியா உள்ளது. மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ளையை



அண்மித்து இது அமைந்துள்ளது. இலங்கையை ஐந்தாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த காசியப்பம் மன்னாரினால் இந்த சிகிரியா வடிவமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. சிங்கத்தை போன்ற பாரிய கற்பாறையில் இது அமைந்துள்ளது.

இந்த கோட்டையானது, பாரம்பரிய ஓவியங்களினால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. குறிப்பாக மெழுகு பயன்படுத்தி உருவாக்கப்பட்ட அழகிய ஓவியங்கள் இங்கு காணப்படுகின்றன. வித்தியாசமான பெண்களின் ஓவியங்களே, அனைவரது கவனத்தையும் இங்கு ஈர்க்கின்றன.

1144 அடி உயரமான இந்த குன்று முழுவமும் காணப்படும் ஓவியங்களே, அதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நின்கின்றன. குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால், இலங்கையின் அடையாளங்களில் சிகிரியா மிக முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. சிகிரிய கோட்டையானது, இராவணனின் கோட்டை எனவும் சிலர் இன்றும் நம்பி வருகின்றனர்.

இராமாயண இதிகாசம் சொல்லும் சுற்றுலாத் தலங்கள்

இலங்கையில் இராமாயண இதிகாசத்தைப் பிரதிபலிக்கும் பல சுற்றுலாத் தலங்கள் காணப்படுகின்றன. இலங்கையின் தமிழர்கள் அதிகம் செறிந்து வாழும் வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், மலையகம் என நாட்டில் பெரும்பாலான இடங்களில் இராமர் — இராவணன் ஆகியோரின் பெயர் சொல்லும் அடையாளங்கள் காணப்படுகின்றன. இராமாணயத்தின்படி இராவண மன்னன், சீதையை இலங்கைக்கு கடத்தி வந்ததை அடுத்து, சீதை இலங்கையில் சிறை வைத்ததாகக் கூறப்படும் அசோக வனம் அமைந்துள்ள இடமாக நுவரெலியா கருதப்படுகின்றது.






நுவரெலியா நகரிலிருந்து பதுளை நோக்கி செல்லும் பாதையில் இந்த இடம் அமைந்துள்ளது. நுவரெலியா நகரிலிருந்து சுமார் 5 கிலோமீட்டர் தொலைவில் இந்தப் பகுதி அமையப் பெற்றுள்ளது. சீதையை மறைத்து வைத்ததாகக் கூறப்படும் இடத்திற்கு வருகைத் தந்த அனுமான், இந்த இடத்திலேயே சீதையை கண்டு தரிசித்ததாகப் கூறப்படுகிறது.

உலகில் சீதைக்காக ஆலயம் அமையப் பெற்ற இடமாக இந்த இடம் வரலாற்றில் இடம் பிடித்துள்ளது. இந்த ஆலயத்தை சூழ அசோக மரங்களைக் காண முடிகின்றது. சீதை அமர்ந்திருந்ததாக கூறப்படும் அசோக மரமொன்றிற்கு இன்றும் பூஜைகள் நடத்தப்பட்டு வருகின்றன.



அதேநேரம், சீதை ஆலயத்திற்கு அருகிலுள்ள கற்பாறையில் ஒரு கால் தடம் காணப்படுகின்றது. அது அனுமானின் கால் தடம் என சிலர் நம்புகின்றனர். அதேநேரம் அது இராவணனின் கால் தடம் என இன்னும் சிலர் நம்புகின்றனர். இலங்கையின் ஊவா மாகாணத்தில் இராவணா எல்லை நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. எல்லை — வெல்லவாய பிரதான சாலையின் இடையில் இந்த இராவணா எல்லை அமைந்துள்ளதுடன், பிரதான வீதியில் இருந்தவாறே இதனைப் பார்வையிட முடிகின்றது.

இந்த நீர்வீழ்ச்சியானது, இராமாயணத்துடன் நேரடியாகவே தொடர்புப்படுத்தப்படுகிறது. சீதையை கடத்தி வந்த இராவண மன்னன், அவரை இந்த நீர்வீழ்ச்சிக்கு பின்னால் உள்ள குகையொன்றிலேயே மறைத்து வைத்திருந்ததாகவும் கூறப்படுகின்றது. இந்த நீர்வீழ்ச்சியானது, இலங்கையின் சுற்றுலாத் தலங்களில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.

அதேபோன்று, இராவணனின் நிலத்துக்கு கீழ் அமைந்துள்ள கோட்டையும் இங்கு அமைந்துள்ளதாக கூறப்படுகின்றது. அதேபோன்று, திருகோணமலை மாவட்டத்தின் திருகோணமலை நகரில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரம் ஆலயம்,இராமாயணத்துடன் நேரடியாக தொடர்புப்படுகின்றது. மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருக்க, நடுவில் பாரிய மலை குன்றொன்று அமைந்துள்ளது. இந்த மலை குன்றிலேயே இந்த திருக்கோணேஸ்வரம் ஆலயம் அமைந்துள்ளது.

இலங்கையை ஆட்சி செய்த இராவணன், இந்த ஆலயத்துடன் நேரடியாக தொடர்புப்பட்டுள்ளார் என்கின்றனர். அதேநேரம், சீதையை கடத்தி வருவதற்காக பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் புஸ்பக விமானத்தை இலங்கையில் தரையிறக்கியதாக சொல்லப்படும் சில இடங்களும் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக கருதப்படுகின்றது. குறிப்பாக மலையகத்திலும் அவ்வாறான இடங்கள் காணப்படுவதுடன், தென் பகுதியிலும் அவ்வாறான இடங்கள் காணப்படுகின்றன.

இலங்கையின் வலிமைமிக்க அரசனாக ஆட்சி செய்த இராவணனின் வரலாற்றை கூறும் வகையிலான சுமார் 50—ற்கும் மேற்பட்ட இடங்கள் பாதுகாக்கப்பட்டு வருவதாக இலங்கை சுற்றுலா அதிகார சபையின் தரவுகள் குறிப்பிடுகின்றன.






சோழரின் வரலாற்று சின்னங்கள்



சோழர்களின் ஆட்சி இலங்கையிலும் தொடர்ந்தமைக்கான வரலாற்று சின்னங்கள், இன்று இலங்கையின் மிக முக்கிய சுற்றுலாத் தலங்களாக மாறியுள்ளன. குறிப்பாக அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய பகுதிகளில் சோழர்களின் ஆட்சி அடையாளங்களை காண முடிகின்றது.

குறிப்பாக சோழர்களினால் நிர்மாணிக்கப்பட்ட சிவன் ஆலயங்கள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. அதேபோன்று, பௌத்த விகாரைகளும், கட்டடங்களும் இலங்கையில் அடையாளங்களாக இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள், சோழர்களின் ஆட்சியை அறிந்துக்கொள்வதற்காக பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளுக்கு செல்வது பெரும்பாலும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கை மீது படையெடுத்த சோழர்கள், அநுராதபுரத்துடனான ஆட்சியைக் கைப்பற்றி, அவர்களின் ஆட்சியில் பொலன்னறுவையை தலைநகரமாக மாற்றியதாக வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாறான வரலாற்றுச் சான்றுகள் இன்றும் தொல்பொருள் திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட்டு சுற்றுலாத்தலமாக அறிவிக்கப்பட்டுள்ளன.



இதைத் தவிர, மிருகங்களின் சரணாலயங்கள், சுற்றுலாத்துறையின் மிக முக்கிய இடத்தை பிடிக்கின்றன. குறிப்பாக சஃபாரி வாகனங்களின் உதவியுடன் சரணாலயங் களுக்குள் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு, யானைகளை மிக மிக அருகிலேயே காண முடிகின்றது. அத்துடன், இலங்கைக்கே உரித்தான அரிய வகை சிறுத்தைகளையும் இங்கு காண முடிகின்றது.




தமிழர்களின் அடையாளங்களை பிரதிபலிக்கும் இன்னும் பல சுற்றுலாத்தலங்கள், இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பகுதிகளில் இருப்பதை கூற முடியும். தமிழர் பகுதிகளை தாண்டியும் சில தமிழர்களின் வரலாற்று சான்றுகள் இருக்கின்றமை விசேட அம்சமாகும்.

இலங்கையின் சுற்றுலாத்துறை பயங்கரவாதத் தாக்குதல்கள், கொரோனா போன்ற எதிர்பாரா தருணங்களில் பூஜ்ஜியம் என்ற நிலைக்கு வீழ்ச்சி கண்டாலும், அடுத்த ஒரு சில மாதங்களிலேயே மீண்டும் தலைதூக்கி நிற்கின்றது.

பொருளாதார வீழ்ச்சியில் நாடு பின் நோக்கிச் சென்றிருந்த நிலையில், இன்று பழைய நிலைமையை நோக்கி நகர்ந்துள்ளது என்றால், அதற்கு சுற்றுலாத்துறை பெரும் பங்களிப்பை செய்துள்ளது.

# மலையருவி

மலையுச்சிக்குச் சென்றடைவது குறித்து
மலைப்பாக மனதளவில் தோன்றியதேயில்லை!
மலையுச்சியைச் சென்றடைந்த பின்
மலையின் மறுபக்கம் இருப்பதான
மலையருவி குறித்த உண்மையறியும் முனைப்புடன்
மலையில் முன்பேறியவர்களின் நினைவூட்டல்களுடன்
மலையேறத் தொடங்கி நாட்கள் உருண்டோடிவிட்டன!
மலையின் அப்பக்கமும் இப்பக்கம் போலவேயெனும்
மலையின் மறுபக்க உண்மை புரிந்தாலும்
மலையருவி காணும் முனைப்புடன் ஏறத் தொடங்கி
மலையடிவாரத்தைச் சுற்றி வருகின்ற கால்கள்
மலையின் மீதும் நடப்பது மறுப்பதற்கில்லைதான்!
மலைமேல் விழுகின்ற மழைத்துளிதான்
மலையருவியின் தொடக்கம் என்பது புரிந்தும்
மலைப்பாதையில் மழை வெயில் குளிர் தாண்டியும்
மலைப்பதையில் கால்கள் பயணித்தவாறே இருக்கின்றன
மலையுச்சியில் நின்று தரையைக் காணவும்...
மலையின் மறுபக்கத்து மலையருவியைக் காணவும்...

**கொற்றவன்**




அன்பு பெருக...
மகிழ்ச்சி என்றும் தங்க...
செல்வம் நிலைக்க...
நோய் நீங்க...
முயற்சி பெருக...
வெற்றி என்றும்
உங்கள் வசமாக...
இனிய
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
VARSHA™
VARSHA
2026
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு



சரித்திரத் தொடர்

# சேரமான் கனவு

**பாகம் - 2** **அத்தியாயம் 12**

## 12. பொறையாற்றில் புகுந்த சூறைக்காற்று!

**கொற்றவன்**

சோழ மண்டலத்தின் புகார்த் துறைமுகத்தை அடுத்துள்ள பொறையாற்றுத் துறைமுகத்தில் இருந்து சில நாழிகை நடையில்தான் இருந்தது அம்மாளிகை.

ஆனால் அப்படியொரு மாளிகை இருப்பதற்கான முகாந்திரங்கள் எவருக்கும் தெரியாதவாறு, தாழைப் புதர்கள் மண்டிக் கிடந்த சதுப்பு நிலத்தையொட்டி, உயர்ந்த தேக்கும் வாகையும் அடர்ந்திருந்த அப்பகுதியில் அமைந்திருந்தது.

அம்மாளிகையின் மேல்தளத்து அறையொன்றின் மஞ்சத்தில், வீசியெறியப்பட்ட மஞ்சள் கொத்தெனத் துவண்டுக் கிடந்தாள் கயல்விழி.

வானத்தில் அரைவட்ட வெள்ளிக் கிண்ணமாகத் தெரிந்த வெண்ணிலவின் தண்ணொளி, அந்த அறையின் சாளரத்தின் வழியே ஊடுருவி மஞ்சத்தில் கிடந்தவளின் மீதும் ஒளியோவியமாய் படர்ந்திருந்தது.




கடற்கரையை ஒட்டிய மாளிகை என்பதனால் கடற்காற்றின் வேகமும் சில்லிப்பும் கூடியே இருந்தது. அக்காற்று தாழைப்புதர்களைக் கடந்து மாளிகைக்குள் நுழைந்ததால், காற்றில் கலந்த தாழம்பூவின் மணம் மாளிகை முழுதும் வியாபித்திருந்தது.

அந்தச் சாளரத்திலிருந்து சற்றுத் தூரத்தில் உருண்டு திரண்டு பெருத்திருந்த வாகை மரத்தில் வந்து தஞ்சமடைந்திருந்த பறவைகள் கீச்சிட்டும், கிளுகிளுத்தும் கொண்டிருந்தன.

இயற்கையின் இந்த விளையாட்டுக்களில் மனதைக் கொடுக்கவியலாதவளாய், கனத்த சிந்தனையுடன் மல்லாந்திருந்தவளின் விழிகள் விட்டத்தை வெறித்த வண்ணம் இருந்தது.

அசைவற்றுக் கிடந்தவளுக்குள் அசைந்த எண்ணங்கள் ஒவ்வொன்றும் அடுத்தடுத்து காட்சிகளை ஓட்டிக் கொண்டே இருந்தது.

கயல்விழியின் வாழ்வில், அவளுக்கு நினைவு தெரிந்த நாள் முதல் நிகழ்ந்த வரலாற்றுத் தருணங்கள் காட்சிகளாய் தொடங்கி பலவும் சடசடவென மாறிமாறி, வேகவேகமாய் ஓடின.




இன்பத்திலும் துன்பத்திலும் ஆட்டுவிக்கப்படும் மனதின் நிலை, தடுமாற்றத்தின் உச்சமாக மாறும்போது, அதனால் விளையும் செயல்களும் அந்தச் செயலின் விளைவுகளும் வேடிக்கை ஆவதுண்டு! சமயங்களில் விபரீதமாகவும் ஆவதுண்டு!

அப்படியான வேடிக்கையொன்று கயல்விழிக்கு அக்கணத்தில் அவ்வப்போது நிகழ்ந்தவாறே இருந்தது.

அது என்னவெனில், தன் பால்யப் பருவம் முதல் ஓடிய வாழ்க்கைக் காட்சிகளினூடே சட்டென சம்பந்தமே இல்லாமல், விட்டத்தின் மேல்



வளவத்திரையன் முகம் பேருருவாகத் தெரிவதும், சட்டென அந்த மஞ்சத்தில் தன்னருகில் அவன் வந்தமர்ந்திருப்பதான பிரமையும் பீடித்ததில் அவள் தடுமாறினாள்.

இடையிடையே ரகசியக் குரலில் ‘கயல்விழி’ என அவன் தன் பெயரைச் சொல்லி அழைக்கும் குரலோசையும் கேட்டுத் தடுமாறினாள்.

ஆனால் எல்லாமும் தன் நினைவலைகள் செய்யும் மாயம் என்பதாக எண்ணி மீண்டும் ஓடும் தன் வாழ்க்கைக் காட்சிகளைக் காணத் தொடங்கியிருந்தாள்.

கரிகாற் பெருவளத்தாரின் மறைவிற்குப் பிறகு ஏற்பட்ட பெருங்குழப்பத்தில் சோழ மண்டலம் தாயாதிச் சண்டையில் சிக்கிச் சிதறுண்டுப் போகும் தருவாயில், சேரமான் செங்குட்டுவர் நேரிவாயிலில் நின்று போர்புரிந்து ஒன்பது வேளிர்களை அடக்கித் தன் மைத்துனனான கிள்ளிவளவரிடத்தில் நாட்டை ஒப்புவித்த பின்னரே, அமைதி நிலவத் தொடங்கியது.

ஆனாலும், அதன் பின்னும் ஆங்காங்கே தாயாதிச் சண்டைகள் கிளம்புவதும், சோழ மண்டலத்தின் சிறுசிறு பகுதிகளுக்கு உரிமை கோரியவாறு சிலர் கிளர்ந்தெழுந்து போர் தொடுப்பதும், அவற்றைக் கிள்ளிவளவன் அடக்குவதும் தொடர்கதையாகவே இருந்து வந்தது.

இந்தச் சூழலில்தான், பொறையாற்று மண்ணின் வேளிர் குலத்தின் ஒற்றை வாரிசாய் பிறந்தாள் கயல்விழி.

கயல்விழியின் ஐந்தாறு




வயதுக்குள்ளாகவே தாயாதிப் பகைவர்களின் தொடர் தாக்குதலில் அவளது பெற்றோர்கள் மாளவே, இந்த மாளிகையும் இதைச் சூழ்ந்த பகுதிகளும் அவர்கள் வசம் போனது. கயல்விழி வளர்ந்ததும், மணமுடித்து அரசுரிமையைத் தனதாக்கிக் கொள்ளும் முனைப்புடன் இருந்த வஞ்சகனான நெடுமுடியான் என்பவனின் எண்ணத்தை அறிந்த கயல்விழியின் பாட்டனார், அவளைத் தன்னுடன் அழைத்து வந்துவிட்டார்.

அவ்வப்போது கிள்ளிவளவனுக்குப் போக்குக் காட்டியபடி புகார் நகருக்குள் நுழைந்து தொல்லையும் கொடுத்து வந்த நெடுமுடியான், கயல்விழியையும் தேடி வந்தான்.

எப்படியும் அவன் தன்னையும் கொன்று கயல்விழியையும் அபகரிப்பான் என்பதனால்,

சோழ நாட்டில் இருந்து வெளியேறிய பெரியவர், பொதிகை மலைக் காடுகளில் வைத்து கயல்விழியை வளர்த்து வந்தார்.

உரிய காலம் வரும்வரை காத்திருந்து, பின்னர் கிள்ளிவளவனின் துணையுடன் தகுந்த ஒருவனுக்கு அவளை மணமுடித்து, பொறையாற்றுக் கோட்டையையும் மாளிகையையும் மீண்டும் தங்கள் வசம் கொண்டுவர நினைத்திருந்தார் பெரியவர்.

அப்போதுதான் அந்தக் கானகத்துக்கு வந்து சேர்ந்த வளவத்திரையன், பெரியவரின் நம்பிக்கைக்கும், கயல்விழியின் காதலுக்கும் பாத்திரமானான். ஏனோ இனம்புரியாத அன்பு அவன் மீது கயல்விழிக்கும் பாட்டனாருக்கும் ஒருசேரத் தோன்றியது.

அவன் மூலம் பெரியவருக்கு சேரப் பேரரசர் செங்குட்டுவரின் உதவியையும் நாட முடிந்தது. சிலகாலம் அவரது அரண்மனையில் இருந்தபோது, சோழ நாட்டில் நெடுமுடியான் தொல்லைக்கு முடிவு கட்டும் எண்ணத்துடன் கிளம்பி பொறையாற்றுக்கு வந்தார் பெரியவர்.

ஆனால், தாம் நினைத்ததற்கு மாறாக இன்னமும் தன்னைப் பலப்படுத்திக் கொண்டிருந்த வஞ்சக நரியான நெடுமுடியானின் கைக்குள் எதிர்பாராத விதமாய் சிக்கிக் கொண்டார்.

நெடுமுடியானுக்கும் பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையாக, தான் தேடியலைந்த கயல்விழி தானாய் வந்து கிடைத்ததில், அவளை மணமுடிக்கும் எண்ணத்துடன் அதற்கான வேலைகளில் மும்முரமானான்.




ஆனால் அவனது எண்ணத்துக்கு இணங்காத கயல்விழியைத் திருமணம் முடியும் வரை, அம்மாளிகைக்குள்ளேயே கூண்டுக் கிளியாக வைத்து விட்டான்.

இதெல்லாம் மின்னல் வேகத்தில் நடந்தாற்போல நாட்கள் ஓடிவிட்டது.

அந்தக் காட்சிகள் எல்லாம் ஓடும்போதே, கயல்விழி காணாத காட்சி ஒன்றும் விட்டத்தில் விரிந்தது.

அது...

தாலியாவும் வளவத்திரையனும் கடற்கரை மணல்வெளியில் அமர்ந்து மகிழ்வுடன் உரையாடிக் கொண்டிருப்பது போன்றும், அவன் தோளில் தாலியா சாய்வது போன்றும் தோன்றவே, கலங்கிய கயல்விழியிடம் இருந்து "அம்மா!..." என சங்கடமானக் குரல் ஈனத்தொனியில் வெளிப்பட்டது.



அதேநேரம், அதைத் தொடர்ந்து அங்கே ஏதோ ஓசையும் கேட்டது.

அவள் கண்களில் கண்ணீர் தரையிட்டது

காலமெல்லாம் தன் கரம் பற்றிக் கிடப்பான் என நினைத்தது, கானல் நீராகப் போய் விட்டதே! தன் வாழ்வில் என்றுமே அவல நிலை தொடர்கதைதானோ என நினைத்தவளின் உள்ளம் குமுறியதால், கண்கள் ஆறாய்ப் பெருக்கெடுத்தது.



மீண்டும் அவள் விழிகள் விட்டத்தில் நிலைத்தபோது, வளவத்திரையனின் எழில் வதனம் தோன்றியது. அதைத் தொடர்ந்தாற்போல் ‘தேவி...’ என அவனது குரலும் ஒலித்தது.

அதன் காரணமாய் அவள் இன்பத்தில் திடுக்கிட்டாலும், விட்டத்தில் தெரிந்த முகத்தில் புன்னகை அரும்பியதை இமைக்காமல் பார்த்தபடியே இருந்தாள்.

மீண்டும் அங்கே குரல் ஒலித்தது.

‘கயல்விழி...’

ஒலித்த அந்தக் குரல் தந்த பிரமிப்பின் விளைவாய், வாடிய அவள் முகத்தில் மின்னலாய் ஒளிக்கற்றைப் பாய்ந்தாற்போல் பொலிந்தது. அவளது உள்ளத்திலோ இன்பமேகம் திரண்டது. காதல் மழை பொழிந்தது. தன் கரங்களை விட்டத்தை நோக்கி நீட்டினாள்.

“என்னை மறக்கவில்லையே தாங்கள்?” என்ற வார்த்தைகளையும் உதிர்த்தவளின் முகம் மேலும் மலர்ந்தே விரிந்தது.

அதற்குக் காரணம், “ஒருபோதும் இல்லை!” என்ற வளவத்திரையனின் மலர் முகம் தந்த பதில்தான்!

மலர்ந்த முகத்தோடு நீட்டிய இரு கரங்களையும் தன் மார்போடு கட்டிக் கொண்டு கண்களை மூடி நீண்ட பெருமூச் சொன்றை வெளியிட்டாள்.




அவளுக்குள் ஏதோ எண்ணங்கள் ஓடியதன் விளைவாய், அசைவற்றுக் கிடந்த அவளது மேனி அசைந்தது. அவளது ஒவ்வொரு அசைவிலும் உணர்ச்சியாய் வளவத்திரையன் நிறைந்திருந்தான்.

உள்ளத்தில் உண்மைக் காதல் பிறந்து விட்டால் அது தெய்வீகமான நிலை அல்லவா? அந்த உன்னத நிலையில்தான் அப்போது கயல்விழியும் இருந்தாள்.

உன்னதங்கள் பல நேரங்களில் பெரிதாய் கண்களுக்கு எட்டுவதில்லை! அப்படி எட்டிவிட்டாலோ அங்கே சித்து விளையாட்டுக்கள் நிகழ்வதை உணரமுடியும். மனமெனும் மந்திரம் செய்யும் மாயைக்கு நிகராய் உலகில் வேறென்ன இருக்க முடியும்? அதனாலேயே அந்த மந்திரத்தில் திளைக்கும் நெஞ்சங்கள் மாயாவினோதம் காண்கின்றன.

அந்த நிலையில், கண்கள் மூடிய நிலையில், கயல்விழி தன் கன்னங்களை வருடியவாறே அவனோடு உரையாடினாள். அந்த அறையில் நிலவிய அமைதியைப் போலவே அவளது குரலும்

மெல்லியதாகவே ஒலித்தது.

"என்னைத் தாங்கள் முற்றாய் அறிந்தவர்தானே?"

"அப்படித்தான் நினைக்கிறேன்." வளவத்திரையனின் குரலும் அவள் செவிகளுக்கு மட்டும் கேட்கும் வண்ணம் ஒலித்தது.

"அப்படியானால் இங்கே இப்போதுள்ள நிலையையும் தாங்கள் அறிந்திருப்பீர்கள் தானே?"

"இந்த நிலை என்றால்?"

"இந்த இன்ப நிலை!"

"இந்த மாளிகைக்குள் சிறைப்பட்டிருக்கும் உங்களுக்கு இன்பமாகவா இருக்கிறது இது?"

"இது சிறையா?"

"பிறகென்ன?"

"இது சிறையல்ல! உங்களையும் என்னையும் இணைத்திருக்கும் பள்ளியறை!" என்றவளிடம் நாணம் குடிகொள்ள, இதழ்கள் இன்பமாய்ச் சுழிந்தன.

"அப்படியா? எத்தனை நாட்கள் இங்கே அப்படி நாம் மஞ்சம் கொண்டிருக்கிறோம்?"

"இதென்ன புதுக் கேள்வி? இங்கே நெடுமுடியான் அடைத்த நாள் முதல் மனதுக்குத் துணையாகவும், இந்த மஞ்சத்தில் துணையாகவும் இருப்பதை மறந்து விட்டீர்களா?"

"அதைத்தான் கேட்கிறேன்! எத்தனை நாட்களாக இப்படி?"

அந்தக் கேள்விக்கு மூடியிருந்த அந்த மலர்விழிகள், சற்றே யோசிப்பது போல இறுக்கம் காட்டின. பிறகு மெதுவாய் கண்கள் மூடிய நிலையிலேயே அவளிடமிருந்து பதில் வந்தது

"ம்ம்!... இன்றோடு சரியாகப் பத்து நாட்கள் ஆகின்றன."




"மன்னித்து விடுங்கள்!"

"எதற்கு திரையரே!"

"உங்களை இந்த நிலைக்கு வர விட்டிருக்கக் கூடாது!"

"ஒருபோதும் எதன் பொருட்டும் என்னிடம் தாங்கள் மன்னிப்பு கேட்க வேண்டாம்! அதை என்னால் தாங்க முடியாது!" என்றவள் கன்னங்களை வருடியபடி இருந்த தன் கரங்களை எடுத்து நெஞ்சத்தின் மேல் வைத்துக் கொண்டாள். அங்குதானே வளவத்திரையன் இருக்கிறான்!

ஆனால் இம்முறை வளவத்திரையனிடம் இருந்து பதில் வரவில்லை! அவளும் அமைதி காத்தாள். சில நொடிகள் செய்வதறியாமல் விழிமூடிக் கிடந்தவள் "ஏதாவது பேசுங்கள்!" என்றாள்.

அக்கணத்தில் பஞ்சணையில் கிடந்தவளின் மார்பின் மீதிருந்த வலக்கரம் மேலெழுந்து திடமாய் ஏதோ ஒன்றின் மீது பதிந்தது. அவ்விதம் பதிந்த இடம் துடித்தது.

அதை உணர்ந்தவள், சட்டெனக் கண்கள் திறந்தாள்.

தன் மஞ்சத்தின் அருகே ஓர் உருவம் அமர்ந்திருப்பது கண்டு பெருத்த அதிர்ச்சியுடன் வாய்திறந்து அலறப் பார்த்தவளின் அதரங்கள் அடுத்த நொடியே பொத்தப்பட்டன.

குபீரென முத்துக்கள் திரண்டாற்போல அவளது நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின.

சாளரத்தின் வழியே பாய்ந்த மஞ்சள்மதியின் பொன்னொளியில் கயல்விழியின் அங்கம் பொன்மேனியாய் பொலிந்ததாலும், அந்தப் பொற்சிலையை வாரிச் சுருட்டிக் கொண்டாடுவது போல, பொறையாற்றுக்குள் சூறைக்காற்று புகுந்து துவம்சம் செய்வது போன்ற பிரமையில் அந்த மாளிகையே அவள் கண்களுக்குச் சுழலத் தொடங்கியது.

என்ன நடக்கிறதென விளங்கிடவியலா நிலையில் பெரும் புதைகுழிக்குள் விழுந்தாற்போல உணர்ந்தவளின் உள்ளம் பெரும் திகிலில் ஆட்டம் கண்டது. அந்தத் திகிலின் காரணம் விளங்காத நிலயிலேயே கண்கள் இருள மயக்கம் கொண்டாள் கயல்விழி. அவள் நினைவிழப்பதற்கு முன்புகூட அவள் விழிகளில் தெரிந்தது வளவத்திரையன் முகமேயன்றி வேறொன்றும் உணராதாளாய் நினைவிழந்தாள்.

'பொறையாற்றில் சுழன்றடிக்கும் சூறைக்காற்றில் அகப்பட்டு அந்தரத்தில் மிதக்கின்றாய்!' —அதைத்தான் நினைவிழந்த நிலையிலும் அவள் மனம் ஓதிக் கொண்டிருந்தது.

அது உண்மைதான்!

அன்றிரவுப் பொழுதில் பொறையாற்றில் சூறைக்காற்றுதான் சுழன்றடித்துக் கொண்டிருந்தது!

(கனவு தொடரும்...)


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

# கிராமத்து பொங்கல்

ஆனந்த் சுப்ரமணியம்

விடிகாலை எழுந்திரிச்சு
சுத்தமான குளியல் போட்டு
புத்தாடை அணிந்து கொண்டு
புதுசாய் நாம் தெரிவோம்

பொங்கல் செய்ய அடுப்பின் மீது
பானை தனை வைத்துவிட்டு
அதனுள்ளே அனைத்தையுமே
அளவாக போட்டு விட்டு

நல்லா கொதித்தவுடன்
பாலையுமே சேர்த்துக் கொண்டு
அது பொங்கி ததும்பி வழிகையிலே
பொங்கலோ பொங்கலென்று

மகிழ்ச்சியோடு சத்தமிட்டு
வீட்டிலுள்ள அனைவருமே
குதூகல மனதுடனே
கும்மாளம் போட்டிடுவோம்

இறைவனுக்கு படைத்து விட்டு
பூஜையையும் செய்துவிட்டு
அம்மாவின் அன்பு கலந்த
அமுதமான பொங்கலையும்

ஆவலுடன் சாப்பிடவே
வரிசையாய் அமர்ந்து கொண்டு
சுவையோடு சாப்பிடுவோம்
இந்த இனிதான திருநாளில்

அந்த இனிப்பு மனதுடனே
அனைவரும் சொல்லிடுவோம்
பொங்கலோ பொங்கல்
பொங்கலோ பொங்கல் என்று




VARSHA™
உங்கள் வாழ்க்கை
மகிழ்ச்சி நிறைந்ததாகவும்,
மேலும் செழித்து வளரவும்
இனிய பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
புத்தாண்டு
வழ்த்துக்கள்



சிறுகதை

# அன்புள்ள அப்பா!

விஜி சம்பத்

ஜீப்பிலிருந்து இறங்கிய அரசு உயர் அதிகாரி செல்வராஜ், டிரைவர் வைத்த சல்யூட்டை தலையசைப்பிலேயே ஏற்றுகொண்டவராக வீட்டினுள் நுழைந்தார். வீடு அமைதியாக இருக்க அவர் மனைவி கனகா சமையல் அறையிலிருந்து ஒரு கையில் காஃபியோடும் இன்னொரு கையில் சில கடிதங்களோடும் வந்து, அவற்றை டீப்பாயில் வைத்து விட்டு, அமைதியாக சமையலறைக்குள் சென்று விட்டார்.

ஒரு கையால் காஃபியை குடித்தவாறே கடிதங்களைப் புரட்டினார். ஒன்று அவர் அப்பாவிடமிருந்து வந்த கடிதம். அதில், ‘அவர் என்ன எழுதியிருப்பார்’ என்று தெரியும் என்பதால் அதைப் பிரிக்காமலே வைத்துவிட்டார். ஒரு திருமண அழைப்பிதழ். அட! இதென்ன ஸ்டாம்ப் ஒட்டப்படாமல் ஒரு கடிதம் ? ஒரு வேளை கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு ஸ்டாம்புக்கான தொகையை வாங்கிச் சென்றிருப்பார் தபால்காரர் என்று எண்ணமிட்டவராக?




‘யாரது.. ஸ்டாம்ப் ஒட்டாமல் கடிதம் அனுப்பியது? தபால் முத்திரையும் இல்லை, அனுப்பியவர் விலாசமும் இல்லையே ! ம்ம்...’ என்று காஃபியை குடித்து விட்டுத் தபால் உறையைக் கிழித்து , உள்ளிருந்த தாளைப் பிரிக்க, முத்து முத்தான கையெழுத்தில் கடிதம் பேசிய வரிகளின் மீது அவர் விழிகள் பரபரவென்று ஓடின.

‘அன்புள்ள அப்பாவுக்கு! இல்லையில்லை..அன்பையே காட்டாத அப்பாவுக்கு,

உங்களை நேருக்கு நேர் பார்த்துப் பேசும் துணிச்சல் இல்லாத மகன் அரவிந்தனின் அடக்கி வைக்கப்பட்ட உள்ளத்து உணர்வுகள் கடிதமாக! ஒரே வீட்டில் இருந்துகொண்டு கடிதம் எழுத என்ன துணிச்சல் என்று உங்கள் புருவம் நெற்றிக்கு மேலே ஏறி இருக்கும். ஆமாம்ப்பா..! என்ன செய்வது? இன்னும் எத்தனை வருடங்கள் ஆனாலும் எனக்கு உங்கள் கண்களைப் பார்த்துப் பேசும் தைரியம் வரப் போவதில்லை. என்னைப் பொருத்தவரை நீங்கள் எப்போதும் டெர்ரராகவே இருந்திருக்கிறீர்கள்.



எனக்கு விவரம் தெரிந்த நாளில் இருந்து உங்களிடமிருந்து எனக்கு ஒரு பாராட்டு கூட கிடைத்ததில்லை. அத்தனை ஏன் ? என்னைப் பார்த்து நீங்கள் புன்னகை புரிந்ததாகக் கூட எனக்கு நினைவில் இல்லை. முதல் வகுப்பிலிருந்தே படிப்பில் நான் சராசரிக்கும் கீழான மாணவன்தான். அது எனக்கே தெரியும். ஆனால் அதை நீங்கள் தினமும் காலையில் எழுந்ததுமே எல்லோர் காதுகளிலும் விழும்படி பிரகடனப்படுத்துவது எனக்கு எத்தனை வேதனையைத் தரும் என்பதை நீங்கள் ஒரு நொடியாவது நினைத்துப் பார்த்ததுண்டா?

‘எங்கே அந்தத் தடிமாடு?’ , ‘இன்னும் படிக்க உக்காரலையா?’, ‘இதெல்லாம் மாடு மேய்க்கத்தான் லாயக்கு!’ (மாடே எப்படி மாடு மேய்க்கும்?) என்று நீங்கள் எனக்கு செய்யும் அர்ச்சனைகளைக் கேட்டு அண்ணனும், தங்கையும் நமட்டுச் சிரிப்பு சிரித்தவாறு என்னைப் பார்ப்பார்கள்.

அம்மாதான் எனக்கு ஆதரவாக இருப்பார்கள். ஆனால் அம்மாவுக்கும் உங்களிடம் பேசுவதற்கு பயம். என்னைப் போலவே ! அதற்கான காரணம் எனக்குத் தெரிய வந்தபோது, உங்களிடமிருந்து நான் இன்னும் சில அடிகள் விலகி வந்து விட்டதைப் போல உணர்ந்தேன்.

அம்மா அதிகம் படிக்கவில்லை என்பதற்காகத் திருமணம் செய்துகொள்ள மறுத்து விட்டீர்களாம். தாத்தா அவருடைய தங்கைக்கு .. அதுதான் அம்மாவின் அம்மாவுக்கு இறப்பதற்கு முன் வாக்கு கொடுத்துவிட்டார் என்பதற்காகக் கட்டாயப்படுத்தி, அம்மாவை உங்களுக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டார்களாமே!




படிப்பு மட்டுமே ஒருவரை எடை போடுவதற்கான தகுதி ஆகிவிடுமா அப்பா? அம்மா பள்ளியிறுதி தாண்டவில்லைதான். ஆனால் அம்மாவின் தனித்திறமைகள் பற்றி அறிந்துகொள்ள என்றாவது முயற்சி செய்திருக்கிறீர்களா? தன்னுடைய ஆசைகள், எண்ணங்களை வெளிக்காட்ட முடியாமல்,மனதுக்குள்ளே அடக்கி வைத்து... அடக்கி வைத்து அந்த மன அழுத்தத்தில்தான் அம்மாவுக்கு அடிக்கடி வீசிங் தொல்லை ஏற்படுகிறது.

எங்களுக்கு நல்ல அம்மாவாக, உங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் ஒரு அடிமை மனைவியாகத்தானே இருக்கிறார்கள்? அண்ணனோ, தங்கையோ அம்மாவுக்கு எந்த உதவியும் செய்வதில்லை. கேட்டால் எங்களுக்குப் படிக்கிற வேலையே நிறைய இருக்கு என நிர்த்தாட்சண்யமாய் மறுத்து விடுகிறார்கள். ஆனால் அம்மாவுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்து விட்டுத்தான் நான்

படிக்கவே உட்காருகிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?

என்ன செய்வது? அரசு உயர் அதிகாரியான நீங்கள்.. கஞ்சி போட்டு இஸ்திரி போட்ட உங்கள் உங்களது உடுப்பு போல் விறைத்துகொண்டுதான் இருப்பீர்கள் வீட்டிலும்.

தவறு செய்யும் அலுவலர்களைப் பார்க்கும் தோரணையில்தான் என்னையும் அம்மாவையும் பார்ப்பீர்கள். ஆனால் அண்ணனிடமும், தங்கையிடமும் நீங்கள் காட்டும் பாசமும் பரிவும் வேற லெவல்.

‘நீயும் அவங்களை மாதிரி நல்லாப் படிச்சா அப்பா உங்கிட்டயும் பாசமா இருப்பார்’ என்று அம்மா சொல்வதை என்னால் ஏற்றுகொள்ள முடியவில்லை. அப்பாவுக்கும் மகனுக்குமான பாசத்துக்குப் படிப்பு ஒரு தடைக்கல்லாக இருக்க முடியுமா என்ன? உங்களுக்கு வேண்டுமானால் படிப்பு வராத முட்டாள் மகனான என் மீது பாசம் இல்லாமல் இருக்கலாம்.

ஆனால் எனக்கு உங்கள் மடியில் அமர்ந்து, உங்கள் முறுக்கு மீசையைத் திருக வேண்டும், நீங்கள் என்னைக் கட்டி அணைத்துக் கொஞ்ச வேண்டும் என்ற ஆசைகள் எல்லாம் இருக்கும் என்பதை நீங்கள் எப்போதாவது நினைத்துப் பார்த்ததுண்டாப்பா? ஆனால் அவையெல்லாம் நிறைவேற வேண்டுமானால் நான் வகுப்பில் முதல் மாணவனாக வர வேண்டும். முடியவில்லையே. என்னால் முடிந்தளவுதானே என்னால் படிக்க முடியும்.

ஒவ்வொரு முறையும் என்னுடைய மார்க் ஷீட் வரும்போதெல்லாம் என் மேல் உள்ள கோபத்தில் அம்மாவை வசை பாடுவீர்கள். ‘எனக்கு செல்லம் கொடுத்து அம்மாதான் குட்டிச்சுவராக்கி விட்டார்கள்’ என்று திட்டுவீர்கள். ‘தாயைப் போல பிள்ளை, அம்மாவைப் போலவே படிப்பு வராத மரமண்டை’ என்று ஏளனம் செய்வீர்கள். உங்களுக்குத் தெரியுமா அப்பா?




அம்மாவுக்குப் படிப்பில் எவ்வளவு ஆர்வம் இருந்ததென்று? அம்மம்மாவுக்கு உடல்நலம் சரியில்லாமல் போனதாலதான் அம்மாவின் படிப்பை நிறுத்தி விட்டார்களாம். கல்யாணத்துக்குப் பிறகு அஞ்சல் வழியில் படிக்க ஆர்வமாக இருந்தார்களாம். ஆனால் நீங்கள்தான் அம்மா சொல்வதையே காதில் வாங்க மாட்டீர்களாமே! இதெல்லாம் அம்மாவின் ‘சொல்ல பயந்த கதை’.

அப்பா...! நான் எழுதியிருப்பதை தயவு செய்து கோபப்படாமல் படியுங்கள்.

நீங்கள் எப்போதும் என்னை தடிமாடு, மாடு மேய்க்கத்தான் லாயக்கு என்று சொல்லிக் கொண்டே இருந்ததாலோ என்னவோ தெரியவில்லை. எனக்கு மெய்யாகவே மாடுகள் மீது ஒரு ஈர்ப்பு. விடுமுறை நாள்களில் உங்களிடம் அடி வாங்கிக் கொண்டாவது தாத்தாவின் கிராமத்துக்கு ஓடுவேனே... அதற்கு கூட எனக்கு நம் மாட்டுப் பண்ணையில் இருக்கும் மாடுகள் மீதுள்ள அன்பும் பாசமும்தான் காரணம். தாத்தாவுக்குப் பிறகு நம்






பண்ணையைப் பொறுப்பாகப் பார்த்துக் கொள்ள யார் இருக்கிறார்கள்?

அந்தக் காலத்திலேயே.. மாட்டுச் சாணி நாறுது.. மூத்திர வீச்சம் குமட்டுதுன்னு.. ஹாஸ்டலில் இருந்து வீட்டுக்கு வரவே மறுத்து விடுவீர்களாமே!

உங்கள் ஆசைப்படி.. இல்லையில்லை கட்டாயத்தின்பேரில் அண்ணனை என்ஜினீயராக்கி விட்டீர்கள். ஆனால் அவனுடைய ஆசை என்ன தெரியுமா? ஆடிட்டராக வேண்டும் என்பதுதான்! தங்கையையும் டாக்டராக்கி விடுவீர்கள். பெரிய பாடகியாக வேண்டும் என்ற அவளுடைய இசை ஆர்வத்தைப் புரிந்து கொள்ளாமலே...!

ஐயோ அப்பா..நான் சொல்ல வந்ததை விட்டு எதையெதையோ எழுதிக் கொண்டிருக்கிறேன். நாளை பிளஸ் டூ ரிசல்ட். மதிப்பெண்களும் உடனே வந்து விடும்.

அண்ணாவின் பிளஸ் டூ மார்க்குகள் வந்தபோது



நம் வீட்டில் எத்தனை கோலாகலம்! ஸ்கூல் ஃபர்ஸ்ட்டாயிற்றே அவன்! அதே பள்ளியில் படித்தால் அவனுக்கும் உங்களுக்கும் கௌரவப் பிரச்னை என்றுதானே என்னை வேறு பள்ளியில் சேர்த்தீர்கள். அதுவும் நல்லதாகத்தான் போயிற்று. இல்லாவிட்டால் பள்ளியில் அண்ணனோடு ஒப்பிட்டுப் பேசிப் பேசியே என்னை ஒருவழியாக்கி இருப்பார்கள். ஆனால் கணிதப் பிரிவு வேண்டாம் என்று நான் எத்தனை அழுது அடம்பிடித்தும் கேட்காமல் என்னைக் கணிதப் பிரிவிலேயே சேர்த்தீர்கள்.

என்னோடு படிக்கும் தினேஷ் இருக்கிறானே! அவனுக்கும் இதே பிரச்னைதான். அவனுக்கு அக்ரி படித்து, நவீன முறைகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்யத்தான் ஆசையாம். ஆனால் விவசாயியான அவனுடைய அப்பாவோ, அவனைக் கண்டிப்பாக என்ஜினீயராக்கியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாராம்.

விவசாயி குடும்பம் என்னும் பெயர் மாறி என்ஜினீயர் குடும்பம் என்ற பெயர் வர வேண்டும் என்பது அவருடைய கனவாம். வயலை விற்றாவது அவனை என்சினீயராக்கி விடுவது என்ற முனைப்பில் இருக்கிறாராம். ஆனால் என்னைப் போலவே கணிதம் அவனுக்கும் கடினமாக இருக்கிறது. அரையாண்டுத் தேர்வில் கணிதத்தில் ஃபெயிலாகி விட்டான்.

'இந்த மார்க்கை அப்பாகிட்ட எப்பிடிடா காமிக்கிறது..? பேசாம செத்துரலாமான்னு தோணுது?' என்று என்னிடம் சொல்லி அழுதவன் ஒருநாள் திடீரென தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு விட்டான். நல்ல வேளையாகத் தக்க சமயத்தில் அவனைக் காப்பாற்ற முடிந்தது. இல்லாவிட்டால்




அவனை இழந்த வேதனையில் அவனுடைய பெற்றோர் துடித்துப் போயிருப்பார்கள். இதெல்லாம் என்னப்பா நியாயம்? எங்களால் முடிந்தவரை நாங்களும்தான் படிக்கிறோம். வகுப்பில் ஆசிரியர் நடத்தும்போது கணிதம் ஓரளவு புரிகிறது. ஆனால் திரும்பப் போடும்போது மறந்து விடுகிறது. மனப்பாடம் செய்து எழுதும் திறமையும் எங்களுக்கு இல்லை. நாங்களும் என்னதான் செய்வது?

'படிப்பே வராத உங்களால எங்க உயிர்தான் போகுது' என்று ஆசிரியர்களும் எங்கள் மேல் கடுஞ்சினத்தில் இருக்கிறார்கள். அவர்களும் என்ன செய்வார்கள் பாவம். நாங்கள் ஃபெயிலாகிவிட்டால் பள்ளியின் தேர்ச்சி நூறு சதவீதம் என்று பிரபலப்படுத்திக் கொள்ள முடியாதே !

மத்தளம் போல இரு பக்கமும் நாங்கள் அடி வாங்க வேண்டி இருக்கிறது. எங்கள் மனக்குமுறல்களை



நாங்கள் எடுத்துச் சொன்னாலும் காது கொடுத்துக் கேட்க யாரும் தயாராக இல்லை என்பதுதான் உச்சகட்ட சோகம். இந்த மாதிரியான கையறு நிலையில்தான் மனதிடமில்லாத சில மாணவர்கள் விபரீத முடிவுகளை எடுக்க நேரிடுகிறது.

எனக்கும் கூட உங்கள் கனலடிக்கும் பார்வையும் அனலடிக்கும் வார்த்தைகளும் மூச்சு முட்ட வைக்கிறது. அப்பாவென்று கூப்பிடக்கூட நாக்குழறுகிறது. எனக்குமே அவ்வப்போது தற்கொலை எண்ணம் தோன்றத்தான் செய்கிறது. ஆனால் அம்மாவின் அன்பு முகம் அந்த எண்ணத்தை மழுங்கடித்து விடுகிறது. என்னுடைய எதிர்காலம் என்பது கல்லூரியில் நான் சேர்ந்து படிக்கும் படிப்பின் மூலமாக மட்டுமே உருவாகும் என்று எனக்குத் தோன்றவில்லை. அதை நீங்கள் இப்போதாவது புரிந்து கொள்ளுங்கள் அப்பா.




நீங்கள் படிக்கும் காலத்தில் தாத்தா அக்ரி படிக்கச் சொன்னபோது அதை மறுத்து, உங்களுக்குப் பிடித்த பாடப் பிரிவைத்தான் எடுத்துப் படித்தீர்களாமே! சொல்லிக் காட்டுவதாக நினைத்துக் கொள்ளாதீர்கள். ஒரு நினைவூட்டல்தான்.

தயவு செய்து எங்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வெளியுலகத்தில் பெருமையும், கௌரவமும் கிடைக்க வேண்டுமென்பதற்காக எங்கள் வாழ்க்கையைப் பணயம் வைக்காதீர்கள். உங்களிடம் நிறைய பணம் இருக்கலாம். அதைக் கொண்டு என்ஜினீயரிங் கல்லூரியில் இடம் வாங்க முடியும். ஆனால்.

கட்டாயப்படுத்தி என்னை என்ஜினீயரிங் சேர்த்தால்..! கண்டிப்பாக என்னால் அங்கே பொருந்திப் படிக்க முடியாது அப்பா. எனக்கு விருப்பமான தொழிலைத் தாத்தாவுடன் சேர்ந்து செய்ய என்னை அனுமதியுங்கள். பால் பண்ணை தொழில் தொடர்பாக நிறைய விஷயங்களை நான் இணைய வாயிலாகவும், பத்திரிகைகளைப் படித்தும் தெரிந்து வைத்திருக்கிறேன். அதுதொடர்பான படிப்பில் என்னைச் சேர்த்து விட்டால் நான் கண்டிப்பாக ஆர்வமுடன் படிப்பேன்.

இந்தக் கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கும் போதே, கண்கள் சிவக்க, மீசை துடிக்க நீங்கள் வராண்டாவில் புலி போல நடை பழகிக் கொண்டிருப்பீர்கள். என்னை எதிர்பார்த்துக் கொண்டு ! மன்னித்துக் கொள்ளுங்கள் அப்பா. நீங்கள் என்னை எத்தனை அடித்தாலும், மிரட்டினாலும் என் நிலைப்பாடு இதுதான். நான் நம் வீட்டில் மொட்டை மாடியில்தான் இருக்கிறேன். நல்லதொரு முடிவை உங்களிடமிருந்து எதிர்பார்த்துகொண்டு !

உங்கள் அன்புக்காகவும் அரவணைப்புக்காகவும் ஏங்கும் உங்கள் மகன் அரவிந்த்.' என்று கடிதம் இருந்தது.

கல் மனது கரைய, கண்களில் எட்டிப் பார்த்த கண்ணீரை வெளியே வராமல் அணை போட்ட உயர்அலுவலர் செல்வராஜ், இல்லையில்லை.. அரவிந்தனின் அன்பான அப்பா செல்வராஜ் மொட்டை மாடிக்குச் செல்லும் படிகளில் வேகமாக ஏறினார்.


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

# உழவுப் பொங்கல்

பொங்குக பொங்கல் பொங்குகவே
புதுவளம் நிறைந்தறம் தங்குகவே!
எங்கணும் யாவரும் இன்பமுற
ஏர்த்தொழில் ஒன்றே தென்புதரும்.

உணவுப் பொருள்கள் இல்லாமல்
உயிரோ டிருப்பது செல்லாது;
பணமும் அதுதரும் நலனெல்லாம்
பயிர்கள் விளைப்பதன் பலனேயாம்.

உழவுத் தொழில்தான் உணவுதரும்
உடையும் அதனால் அணியவரும்
பழகும் மற்றுள தொழில் யாவும்
பயிர்த்தொழில் இன்றேல் விழலாகும்.

தங்கமும் வெள்ளியும் இருந்தாலும்
தானியம் ஒன்றே விருந்தாகும்
இங்கிதன் உண்மையை உணர்ந்திடுவோம்
ஏர்த்தொழில் மிகுந்திடத் துணிந்திடுவோம்.

உழவே செல்வம் உண்டுபண்ணும்
உழைப்பே இன்பம் கொண்டுவரும்
உழவைத் தொழுதிட வருநாளே
உற்றஇப் பொங்கல் திருநாளாம்.

ஏழையும் செல்வரும் இங்கிதமாய்
இசைந்துளம் களித்திடும் பொங்கல்இது
வாழிய பயிர்த்தொழில் வளம்பெருகி
வையகம் முழுவதும் வாழியவே.

**நாமக்கல் கவிஞர்**
**இராமலிங்கம் பிள்ளை**





பொங்கல் நல்வாழ்த்துக்கள்
தமிழினம் ஒன்றுபட
பொங்குக பொங்கல்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

ஜெயம் ரவியின் 34—வது படத்தை ஸ்கிரீன் சீன் மீடியா நிறுவனம் தயாரிக்க, ‘டாடா’ பட இயக்குநர் கணேஷ் கே. பாபு இயக்குகிறார். இந்தப் படத்தில் பிக் பாஸ் பிரபலம் பிரதீப் ஆண்டனி முக்கியக் கதாபாத்திரத்தில் நடிக்கிறார். வடசென்னையை மையமாக வைத்து உருவாகும் இப்படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார். ஜெயம் ரவிக்கு ஜோடியாக முக்கியப் புள்ளி ஒருவரின் மகள் நடிக்கிறார் என்பதை ரகசியமாக வைத்துள்ளனர்.

## உனக்கு 20!... எனக்கு 40!...



## இது என்ன புதுசு? ஆனாலும் மவுசுதான்!

## ஜெயம் ரவியின் நாயகி ரகசியம்!

## இதில் கூடவா சஸ்பென்ஸ்???

ஆர்.ஜே.பாலாஜி இயக்கத்தில் சூர்யா நடித்துள்ள ‘கருப்பு’ படத்தின் பணிகள் நிறைவடைந்து வெளியிடத் தயாராக உள்ள நிலையில், வெங்கி அட்லூரி இயக்கத்தில் நடிகர் சூர்யா தனது 46—வது படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படத்தில் கதாநாயகியாக மமிதா பைஜு நடித்துள்ளார். கோடை விடுமுறைக்கு வெளியாகும் இப்படத்தின் கதை குறித்து தயாரிப்பாளர் நாக வம்சி, ‘சூர்யா 46’ படத்தின் கதை, 45 வயது இளைஞனுக்கும் 20 வயது பெண்ணுக்கும் இடையிலான உறவைப் பற்றியது. படம் பலவிதமான உணர்ச்சிகளைக் கொண்டு இருக்கும்.’ என்று கூறியுள்ளது தற்போது இணையத்தில் வைரலாகிறது.

# அரை டஜன் படங்களுடன் கயாடு!



## கயாடு... அடிச்சு விளையாடு!

பிளாக்பஸ்டர் படமான ‘டிராகன்’ படத்தில் ஹீரோயினாக நடித்து கோலிவுட்டில் அறிமுகமான கயாடு லோஹர், அதன் பின் பல படங்களில் ஒப்பந்தமாகி, தற்போது அரை டஜன் படங்களுக்கும் மேல் நடித்து வரும் நிலையில், ஜி.வி.பிரகாஷ், கயாடு லோஹர் நடித்துள்ள ‘இம்மார்ட்டல்’ படத்தின் டீசர் வெளியாகியுள்ளது. அறிமுக இயக்குநர் மாரியப்பன் சின்னா இயக்க, அருண்குமார் தனசேகரன் தயாரித்துள்ள இப்படத்தில் காதல் காட்சிகளாக சற்றே தூக்கலாக தொடங்கி, இறுதியில் அமானுஷ்ய காட்சிகளுடன் டீசர் முடிகிறது. படத்தை விரைவில் வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. கயாடு... அடிச்சு விளையாடு!

# காமெடியில் கைகோர்க்கும் கார்த்தி!



## கலக்கட்டும் இந்த வெற்றிக் கூட்டணி!

நகைச்சுவை திரைப்படங்களில் ஆர்வம் கொண்ட நடிகர் கார்த்தியும், இயக்குநர் சுந்தர்.சி.யும் ஒரு ஜனரஞ்சகமான வெற்றியைப் பதிவு செய்ய ஆவலுடன் கூட்டணி அமைத்திருக்கிறார்கள். முன்பு கார்த்தி நடிப்பில் வெளியான ‘ஆல் இன் ஆல் அழகுராஜா’ காமெடி திரைப்படம், எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. எனவே, காமெடி படங்களுக்கு கியாரண்டி அளிக்கும் சுந்தர் சி.யுடன் கார்த்தி இணைவது ரசிகர்களுக்கு ஒரு முழுமையான விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது படப்பிடிப்புக்கு செல்ல தயாராகி வருகிறது படக்குழு.

# தல வலம்

## திருக்கண்ணபுரம்

### சௌரிராஜப் பெருமாள்

புவனகிரி செயபாலன்

108 திவ்ய தேசங்களில் 17—வது தலம். திருவாரூர் மாவட்டம் திருப்புகலூருக்கு அருகே வடக்கே திருமலைராயனாறு, தெற்கே வெட்டாறு. இரண்டுக்கும் இடையே திருக்கண்ணபுரம்.

மூலவர் — நீலமேகப் பெருமாள் (கிழக்கு நோக்கி நின்ற கோலம்)

உற்சவர் — சவுரிராஜப் பெருமாள்

தாயார் — கண்ணபுர நாயகி (கிழக்கு நோக்கி தனிச் சன்னதி) ஸ்ரீதேவி, பூதேவி, ஆண்டாள், பத்மினி.

விமானம் — உத்பல விமானம்







தீர்த்தம் — நித்திய புஷ்கரணி

தொன்மம் — 1500 முதல் 2000 ஆண்டுகள்

'சிலையிலங்கு பொன்னாழி திண்படைதண் டொண்சங்கம் என்கின் றாளால்,

மலையிலங்கு தோள்நான்கே மற்றவனுக் கெற்றேகாண் என்கின் றாளால்,

முலையிலங்கு பூம்பயலை முன்போட அன்போடி யிருக்கின் றாளால்,

கலையிலங்கு மொழியாளர் கண்ணபுரத் தம்மானைக் கண்டாள் கொல்லோ.' —திருமங்கை ஆழ்வாரின் 105 ஆவது பாசுரங்களில் முதல் பாசுரம்.

'இல்லையலல் எனக்கேல் இனியென்குறை
அல்லி மாதரமரும் திருமார்பினன்
கல்லிலேயந்த மதில்சூழ் திருக்கண்ணபுரம்
சொல்ல நாளும் துயர் பாடு சாரவே.'
—பெரியாழ்வார் பாசுரம்

பெயர்

கிருஷ்ணாரண்ய ஷேத்திரம், பஞ்சகிருஷ்ண ஷேத்திரம், சப்த புண்ணிய ஷேத்திரம் என்றும் அழைப்பர். பஞ்சகிருஷ்ண தலங்களுள் இதுவும் ஒன்று. மற்றவை திருக்கோவிலூர், திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, திரு கபிஸ்தலம்.




மகாமந்திர சித்தி ஷேத்திரம்

ஷேத்திரம், வனம், நதி, கடல், நகரம், தீர்த்தம், விமானம் என ஏழும் அமையப்பெற்ற தலம். இங்கு பெருமாள் எல்லா அட்சரங்களிலும் சாந்நித்யம் செய்கிறபடியால் இத்தலம், ஸ்ரீமதஷ்டார மகாமந்திர சித்தி ஷேத்திரம் என்றும் புராணங்களில் சொல்லப்படுகிறது.

திருவரங்கத்தை மேலே வீடு எனவும், இத்தலத்தை கீழே வீடு எனவும் கூறுவர்.

மங்களா சாசனம்

திருமங்கையாழ்வார் 105, நம்மாழ்வார் 11, குலசேகர ஆழ்வார் 11, பெரியாழ்வார் 1, ஆண்டாள் 1 என மங்களாசாசனம் செய்துள்ளனர். ஸ்ரீரங்கம், திருப்பதி இவற்றிற்கு அடுத்தபடியாக 123 பாசுரம் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருத்தலம்.

புராணம்

நீலவண்ணப் பெருமாள் — ஒரு காலத்தில் முனிவர்கள் இத்தலப் பெருமாளை வேண்டி, சாப்பாடு,தூக்கம் என எதையும் பொருட்படுத்தாமல் தவம் செய்து கொண்டிருந்தனர். அதனால்

அவர்கள் தேகம் மெலிந்து இருந்தனர். மகாவிஷ்ணுமிடம் அஷ்டாசர மந்திரம் கற்றறிந்திருந்த 'உபரி சிவரசு' என்னும் மன்னன் ஒரு சமயம் தன் படையுடன் இவ் வழிபாடு வழியாக திரும்பிக் கொண்டிருந்தான்.

அப்போது வீரர்களுக்கு பசி எடுக்கவே, தவம் செய்து கொண்டிருந்த முனிவர்களை நெற்கதிர்கள் என நினைத்து அவர்களை வாளால் வெட்டினர். முனிவர்களின் நிலையைக் கண்ட விஷ்ணு, சிறுவன் வடிவில் வந்து உபரி சிவரசுடன் போர் புரிந்தார். சிறுவனை வெல்ல முடியவில்லை என நினைத்து, தான் கற்றறிந்த அஷ்டாசர மந்திரத்தை சிறுவன் மீது ஏவினான். அம்மந்திரம் சிறுவன் பாதத்தில் சரணடைந்தது.

இதைக் கண்ட மன்னன், தன்னை எதிர்த்த சிறுவன் மகாவிஷ்ணு என தெரிந்து மன்னிப்பு கேட்டான். மகாவிஷ்ணு அவனை மன்னித்து நீலமேகப் பெருமாளாகக் காட்சி தந்தார். மன்னனது வேண்டுகோளுக்காக இங்கேயே எழுந்தருளினார். பின்னர் மன்னன் விஸ்வகர்மாவைக் கொண்டு இங்கு கோவில் எழுப்பினான்.



சௌரிராஜப் பெருமாள்

ஒரு சமயம் இக்கோயில் அர்ச்சகர் ஒருவர், பெருமாளுக்கு சாத்திய மாலையை தன் காதலிக்கு சூட்டி விட்டார். அந்த நேரத்தில் மன்னர் கோயிலுக்கு வந்துவிடவே. அவருக்கு மரியாதை செய்ய அச்சகரிடம் மாலை இல்லை. வேறு வழியின்றி தன் காதலிக்கு சூட்டிய மாலையை மன்னருக்குத் தெரியாமல் திரும்ப வாங்கி, மன்னருக்குப் போட்டு விட்டார்.

அதில் பெண்ணின் கூந்தல் முடி இருந்ததைக் கண்ட மன்னர், 'மாலையில் எப்படி முடி வந்தது?' என்று கேட்க, அது பெருமாளின் தலைமுடியில் ஒன்று என்று பொய்யைச் சொல்லி விட்டார். மன்னருக்கு சந்தேகம் வந்து, தான் பெருமாளின் தலைமுடியைப் பார்க்க வேண்டும் என்றதும், 'நாளை கோயிலுக்கு வந்தால் முடியை காட்டுகிறேன்' என அர்ச்சகர் கூறிவிட்டார். 'பெருமாளுக்கு முடி இல்லை என்றால் தண்டனைக்கு ஆளாக வேண்டும்.' என்று எச்சரித்து விட்டுச் சென்றார் மன்னர்.

அன்று இரவு அர்ச்சகர், சுவாமியை வணங்கித் தன்னை மன்னித்து காக்கும்படி வேண்டினார். மறுநாள் மன்னர் கோயிலுக்கு வந்தார். அர்ச்சகர் பயந்து கொண்டு சுவாமியின் தலையைக் காட்ட, பெருமாள் திருமுடியுடன் காட்சி தந்தார். எனவே இவருக்கு சௌரிராஜப் பெருமாள் என்ற பெயர் உண்டாகி, உற்சவப் பெருமாளாகத் தலைமுடியுடன் இருக்கிறார்.






அமாவாசைவன்று உலா வரும்போது மட்டுமே இவரின் திருமுடி தரிசனத்தைக் காண முடியும். சவுரி என்ற சொல்லுக்கு முடி என்றும் அழகு என்றும் பொருள்கள் உண்டு.

கோபுரம்

மேற்கு கிழக்கு மேற்காக 316 அடி நீளமும், வடக்கு தெற்காக 216 அடி அகலமும், 95 அடி உயரமுள்ள 7 நிலை கொண்ட கோபுரம்.

மூலவர்

அபய ஹஸ்தத்திற்கு பதிலாக, வரத ஹஸ்தத்துடன் காணப்படுகிறார். உற்சவர் கன்யகாதனம் வாங்க கையேந்தி நிலையில் சேவை சாற்றுகிறார்.

பத்மினி

இத்தலத் தாயாருக்கு பத்மினி என்ற பெயரும் உண்டு. அதற்கான காரணம், உபரிசரவசு மன்னன் புத்திரப்பேறு வேண்டி இத்தலத்தில் தவம் செய்து பத்மினி என்ற குழந்தைக்குத் தந்தையானான். பத்மினி வளர்ந்த நிலையில் இத்தலப் பெருமாளே தனக்குக் கணவனாக வரவேண்டும் என தவம் செய்ய தவத்திற்கு மகிழ்ந்து அந்த நங்கையைத் தன் நெஞ்சில் ஏற்றுக் கொண்டார் என்று பத்ம புராணம் கூறுகிறது.

நித்ய புஷ்கரணி

கோயிலுக்கு எதிரில் 450 அடி நீளமும் 415 அடி அகலமும் கொண்டது. சுற்றுச் சுவர்கள் அமைக்கப்பட்டு எப்பொழுதும் நீர் நிறைந்த படி இருக்கும். 9 படிகள் கொண்ட படித்துறையில் ஆஞ்சநேயருக்கு தனிச் சன்னிதி உள்ளது. தெப்ப உற்சவம் நடைபெறும். உத்தராயன காலத்தில் மூன்று நாட்கள் தீர்த்தத்தில் அனைத்து நதிகளும் நீராடி தங்கள் பாவத்தைப் போக்கிக் கொள்வதாக ஐதீகம்!

இந்திரன்

தோஷத்தால் பாதிக்கப்பட்ட இந்திரன், இங்கு வந்து நவக்கிரகப் பிரதிஷ்டை செய்து பெருமாளை வணங்கி தோஷம் நீங்கப் பெற்றான். இந்திரன் பிரதிஷ்டை செய்த நவக்கிரகம், கோபுரத்தின் மதிற்சுவர் அடியில் மேற்கு பார்த்தபடி இருக்கிறது. இதைச் சுற்றி 12 ராசிகள் இருப்பது விசேஷம்!




சொர்க்கவாசல்

இத்தலம் பூலோக வைகுந்தம் என்று போற்றப்படுவதால் இங்கு தனியாக சொர்க்கவாசல் இல்லை!

விபீஷணன்

பெருமாளிடம் 'நீ கிடந்த அழகைத் திருவரங்கத்தில் கண்டேன். நீ நடையழகையும் காண வேண்டும் என வேண்ட, 'கண்ணபுரத்தில் காட்டுவோம் வா.' என்று கூறி ஒரு அமாவாசை நாளில் பெருமாள் நடந்து தன் அழகைக் காட்டி அருள் செய்தார்.

முனையதரையன்

முனையதரையன் என்பவன் பெருமாள் பக்தன். சோழ மன்னனுக்கு கப்பம் வசூல் செய்து கொடுக்கும் பணியில் இருந்தான். ஒரு

சமயம் தெய்வ ஆராதனை (பூஜை) செய்ய முடியாத அளவுக்கு நாட்டில் பஞ்சம். முனையதரையின் வசூல் செய்த பணத்தை எடுத்து தெய்வ ஆராதனைக்கு செலவழித்து விட்டான். இவன் பணத்தைக் கையாடல் செய்து விட்டதாக நினைத்து அவனை மன்னர் சிறையில் அடைக்க உத்தரவிட்டதன் பேரில் சிறையில் அடைக்கப்பட்டான். சிறையில் இருந்த போதும் பெருமாளின் திருநாமத்தையே உச்சரித்து கொண்டிருந்தான். அவன் மனைவியோ சவுரிராஜப் பெருமாளிடம் கணவரை காப்பாற்றும் படி மனம் உருகி வேண்டி வந்தாள்.

மன்னன் கனவில் பெருமாள் தோன்றி, ‘முனையதரையன் வசூல் செய்த பணத்தை தெய்வ ஆராதனைக்கு மட்டுமே செலவு செய்தான். அவனை சிறையில் இருந்து விடுவிக்கும்படி’ சொல்ல, பெருமாளின் சொல்படி முனையதரனை விடுவித்தான்.

அவன் விடுதலையாகி இல்லம் வர மாலையாகிவிட்டது. கணவர் வீடு திரும்பியதும், பெருமாளுக்கு அவர் மனைவி 5 பங்கு பச்சரிசி, 3 பங்கு பச்சைப் பயிறு, 2 பங்கு நெய் இவற்றைக் கொண்டு பொங்கல் செய்து சவுரிராஜப் பெருமாளை மனதில் நிறுத்தி மானசீகமாக நைவேத்தியம் செய்தாள்.

மறுநாள் காலை வழக்கம் போல, கோயிலை சார்ந்த பட்டர், பெருமாள் மேனி முழுவதும் பொங்கலும் நெய்யுமாக இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். இந்தச் செய்தியைப் பலருக்கும் தெரிய வந்தது. அன்று முதல் அர்த்தஜாம பூஜையின் போது ஐந்து, மூன்று, இரண்டு பங்கு எனப் பச்சரிசி, பச்சைப் பயிறு, நெய் எனச் சேர்த்து பொங்கல் செய்து நைவேத்தியம் செய்கிறார்கள்.

முனையத்தரையன் பொங்கல் என்பது மருவி, பேச்சு வழக்கில் முனையதரயன் மற்றும் முனியோதரன் பொங்கல் என்றும் வழங்கப்படுகிறது. கோயிலில் 5 நாழி (1 நாழி = 50 கிராம்) பச்சரிசி, 3 நாழி பச்சை பயிறு, இரண்டு நாழி நெய் சேர்த்து பொங்கல் செய்து, நாள்தோறும் அர்த்தஜாம பூஜை சமயத்தில் நைவேத்தியம் செய்யப்படுகிறது.

ஓம் நமோ நாராயண மந்திரத்தின் முடிவு நிகழ்ந்த தலம். வீகடாஷன் என்னும் அசுரனைப் பெருமாள் வதம் செய்த இடம். கருட தண்டக மகரிஷிக்குப் பெருமாள் காட்சி கொடுத்த தலம்.

பிரம்மோற்சவம் — மும்மூர்த்தி

வைகாசி பிரம்மோற்சவத்தின் போது, பெருமாள் அதிகாலையில் சிவனாகவும், மாலையில் பிரம்மாவாகவும், இரவில் விஷ்ணுவாகவும் மும்மூர்த்திகளாகக் காட்சி தருகிறார். மும்மூர்த்தி தரிசனம் விசேஷ பலனைத் தரக்கூடியது.

பரிகாரம்

தினமும் சந்திக்கும் பிரச்சனைகளிடமிருந்து





விலகவும், மந்திர, தந்திரங்களால் துன்பப்படுபவர்கள், அதிலிருந்து விலக இத்தலத்திற்கு வந்து புஷ்கரணியில் நீராடிப் பெருமாளைச் சேவித்து முனையதரையன் பொங்கலை நைவேத்தியம் செய்தால், இடர்பாடுகள் நீங்கி வாழ்க்கையில் அனைத்து சௌபாக்கியங்களும் பெறுவார்கள்.

நேர்த்திக்கடன்

பெருமாளுக்குத் திருமஞ்சனம் செய்வதும், முடி காணிக்கை செலுத்தியும், நேர்த்திக் கடன் செய்வார்.

இத்தலப் பெருமாளை இராமனாக நினைத்து, 'தாலேலே...' ராமனைத் தூங்க வைக்கும் பாசுரத்தைப் பாடினார். தமிழ்க் குடும்பங்கள் இத்தலத்திற்கு வந்து குழந்தையைத் தொட்டிலில் இட்டு தாலாட்டு பாடுவார்கள். குலசேகர ஆழ்வார் பாடிய தாலாட்டைத் தான் பாடுவார்கள்.

திருவிழா

வைகாசி மாதத்தில் பிரம்மோற்சவம் கொண்டாடப்படுகிறது. மாசி மாத பௌர்ணமியில் 15 கி.மீ. தூரத்தில் உள்ள திருமலைராயன் பட்டினக் கடற்கரையில் பெருமாளைத் தங்க கருட வாகனத்தில் எழுந்தருளச் செய்து தீர்த்தவாரி நடத்தப்படுகிறது. மாதப் பிறப்பு ஏகாதசி மாதத்தின் இரண்டு நாட்களிலும் திருமஞ்சன உற்சவமும், புறப்பாடும் நடக்கும்.




பூஜை

தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது.

கோயில் திறக்கும் நேரம்

தினமும் காலை 7 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை 4:30 லிருந்து இரவு 8.30 மணி வரை திறந்திருக்கும்.

இருப்பிடம்

நாகப்பட்டினத்தில் இருந்து சுமார் 25 கி.மீ. தூரத்திலும், கும்பகோணத்திலிருந்து 43 கி.மீ. தொலைவிலும், திருவாரூரிலிருந்து 19 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

மயிலாடுதுறை திருப்புகலூர் சென்று அங்குள்ள ஆற்றைக் கடந்தால் ஒன்றரை கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது

தொடர்புக்கு:

14366—270557; 270718; 9942656580.

(தொடரும் வலம்.....)

# பொங்கல் தினப் புளகாங்கிதம்

"தை" என்னும் தாய்
ஓரெழுத்து ஒருமொழியில்
சிக்கனம் ஆனாள்
ஏராளமான அறுவடையில்
தாராள வருவாய் ஆனாள்.

இவள்
தானே சிக்கனமும் ஆகித்
தாராள வருவாயும் ஆகிச்
சிக்கனமும்
சிறந்த வருமானமும்
ஒன்றே எனும்
வாழ்க்கைச் சித்தாந்தத்தை
வடிவமைத்து விட்டாளே!

சிக்கனத்—தைத் தன்னிலும்
தாராளத்—தை மண்ணிலும் வைத்த
தைத்தாயின்
நாகரிக வித்தகம்
தலைசிறந்த
ராஜரிகத் தத்துவம்.

இத்தைத் திருநாளில்
ஒரு தர்மயுத்த சூளுரை:
வர்க்க பேதம் இல்லாத
ஒரு சொர்க்கத்தைச் சமைத்து
வருமானப் பகிர்மானம்
வகையாக நடத்த
வெங்கலத்தில் சங்கொலித்து
வெற்றி வாகை சூடுவோம்.
இதோ மணக்கும் பால் பொங்கல்
இனிக்கும் கரும்புச்சாறு
வாருங்கள்

சாதி பேதமில்லாமல்
சந்தோசமாய்க் கூடிப்
புசிப்போம், குடிப்போம்
ஆடிப்பாடிக் களைத்த பின்
அயர்ந்துறங்க
ஆனந்தமாய்த் தலை சாய்ப்போம்
இதுவே
பொங்கல் தினப் புளகாங்கிதம்!

**ச.பாண்டியன்**






# தமிழ்

**நற்றமிழரின் நாடித்துடிப்பு**

VARSHA™

ஆளுமை

# அறிவோம் தமிழர்

## இரா. நல்லகண்ணு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான இரா.நல்லகண்ணுவுக்கு டிசம்பர் 26 அன்று நூறாவது பிறந்தநாள். அவர் சார்ந்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இது நூற்றாண்டு தொடக்க விழா. தன்னுடைய பிறந்தநாள் குறித்து எதுவும் பேசாமல் கட்சி மற்றும் அதன் எதிர்காலம் குறித்தே அவர் அதிகம் பேசியதாகக் கூறுகிறார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த லெனின்.

சிறையும், போராட்டங்களும் நிறைந்த வாழ்க்கை

இந்திய சுதந்திர போராட்டம், விவசாயிகள் போராட்டம், தீண்டாமைக்கு எதிரான போராட்டம், கனிமவளக் கொள்ளைக்கு எதிரான போராட்டம் எனத் தனது வாழ்நாளில் குறிப்பிட்ட பகுதியை போராட்டம், சிறை வாழ்க்கை என வாழ்ந்தவர் நல்லகண்ணு. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் மட்டுமன்றி இதர கட்சிகளின் தலைவர்களும் 'தோழர் ஆர்.என்.கே' என்ற அடைமொழியோடு அவரை அழைக்கின்றனர். அவரது நூற்றாண்டு விழாவை சென்னையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் அக்கட்சியினர் கொண்டாடியுள்ளனர்.




ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டத்தில் விவசாயக் குடும்பத்தில் 1925 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதி ராமசாமி—கருப்பாயி தம்பதியின் மூன்றாவது மகனாக நல்லகண்ணு பிறந்தார்.ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள காரனேஷன் உயர்நிலைப் பள்ளியில் படித்த நல்லகண்ணுவுக்கு பொதுவுடைமைக் கருத்துகளை பள்ளி ஆசிரியராக இருந்த பலவேசம் அறிமுகம் செய்து வைத்துள்ளார். பாரதியார், திரு.வி.கல்யாணசுந்தரம், விவேகானந்தர் ஆகியோரது படைப்புகளும் ஆசிரியர் பலவேசம் மூலமாகவே நல்லகண்ணுவுக்கு அறிமுகம்





# பெருமை

விஜயானந்த் ஆறுமுகம்

ஆகியுள்ளது. பாரதியாரின் பாடல்களும் திரு.வி.கவின் எழுத்துகளும் தன்னை மாற்றியதாகக் கடந்த 2016ஆம் ஆண்டில் அவருடன் நான் கலந்துரையாடியபோது கூறினார். “சாதிக் கட்டமைப்பை உடைப்பதும் சுரண்டல் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதுவும்தான் தன்னுடைய லட்சியமாக இருந்தது” என்றும் அப்போது அவர் தெரிவித்தார்.கடந்த 1943ஆம் ஆண்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்த நல்லகண்ணு, இன்றுவரை அதே கட்சியில் 80 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருகிறார்.



அதுகுறித்து நினைவுகூர்ந்த நல்லகண்ணு, “என்னுடைய 16 வயதில் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர முயன்றேன். அவர்கள் என்னைச் சேர்க்கவில்லை. ‘18 வயது ஆகட்டும், சேர்த்துக் கொள்கிறோம்‘ என்றனர். 18 வயது வந்ததும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இணைந்தேன்” என்றார். 1958ஆம் ஆண்டு நடந்தது. இதே காலகட்டத்தில் மாநிலம் முழுவதும் நிலச்சுவான்தார்களின் கைகளில் நிலம் இருந்துள்ளது. அன்றைய காலகட்டத்தில் தலித் மக்கள் வீடுகளையோ நிலங்களையோ வைத்துக்கொள்ள முடியாத நிலை இருந்துள்ளது. நிலையான வீடு இல்லாததால் தலித் மக்களை ‘ஓடும் குடிகள்’ என அழைத்தனர். இதற்கு எதிராக தலித் மக்களைத் திரட்டிப் போராடி அவர்கள் குடியிருப்பதற்கான மனை உரிமையை நல்லகண்ணு பெற்றுத் தந்தார்.

நல்லகண்ணுவின் அரசியல் பயணத்தில்




விவசாய சங்கத்தின் பணிகளே பிரதானமாக இருந்துள்ளது. 1970 ஆம் ஆண்டில் நடந்த நில மீட்சிப் போராட்டத்தில் ஒரு சிலரின் கைகளில் இருந்த நிலங்களை மீட்பதற்காக இந்தியா முழுவதும் போராட்டம் நடந்தது. அப்போது தமிழ்நாட்டில் மடங்களின் கட்டுப்பாட்டில் இருந்த நிலங்கள் தொடர்பான விவரங்களைத் தொகுத்து சிறிய நூல் ஒன்றை நல்லகண்ணு வெளியிட்டார்.

மதுரையில் பாப்பாபட்டி, கீரிப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் தலித் ஊராட்சித் தலைவர்கள் பதவியேற்க முடியாத சூழல் நிலவியது. இதை எதிர்த்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளராக இருந்த நல்லகண்ணு, சுமார் நான்காயிரம் பேரைத் திரட்டி மாபெரும்

உண்ணாவிரதம் இருந்தார். இந்தப் போராட்டம் மிகப்பெரிய விளைவை ஏற்படுத்தியது. 2006ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த கருணாநிதி தலைமையிலான அரசு, தேர்தலை நடத்தியே தீருவது என முடிவெடுத்து தேர்தலை நடத்தியது.

தமிழ்நாட்டுக்கும் தமிழின் வளர்ச்சிக்கும் பாடுபட்டதாகக் கூறி கடந்த 2022ஆம் ஆண்டு தகைசால் தமிழர் விருதை, முதலமைச்சர் ஸ்டாலின் வழங்கினார். இதற்காகத் தனக்குக் கொடுக்கப்பட்ட 10 லட்ச ரூபாய் பரிசுத் தொகையுடன் தன்னுடைய பணமான 5,000 ரூபாயையும் சேர்த்து முதலமைச்சரின் நிவாரண நிதிக்கே நல்லகண்ணு வழங்கினார். தன்னுடைய பிறந்தநாளுடன், தான் அங்கம் வகிக்கும் கட்சிக்கும் நூற்றாண்டு என்பதால் அதுகுறித்து நல்லகண்ணு பேசியுள்ளார்.

“நூறாண்டு என்பது அரசியல் கட்சிக்கு ஒரு வயதல்ல. வைரம் பாய்ந்த அனுபவம் செறிந்த ஓர் அமைப்பு இது. ஒடுக்கப்பட்ட, உழைக்கும் மக்களுக்காகத் தொடர்ந்து போராட வேண்டும். வகுப்புவாத அபாயத்தை உணர்ந்து கவனமாகச் செயலாற்ற வேண்டும்“ என்றார் நல்லகண்ணு.# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலம் அது. நல்லகண்ணு உட்பட கட்சியின் தோழர்கள் அத்தனை பேரும் தலைமறைவாக இருந்தார்கள். கிராமம் கிராமமாக பதுங்கி நடந்து நடந்தே விரல்கள் கொள்ளா மைல்களை கடப்பார்கள். நிலப்பிரபுக்களாக இருந்த பண்ணையார்களின் அடியாட்கள், எதிர்க்கட்சிகளின் குண்டர்கள், காவல்துறை என யார் கண்ணிலும் சிக்கக் கூடாது.

தற்காப்புக்கு பையில் வெடிகுண்டுகளையும் வைத்திருப்பார்கள். 1949 டிசம்பர் 20, நள்ளிரவில் விழிப்புணர்வு பிரசாரக் கூட்டங்களை யெல்லாம் முடித்துவிட்டு கட்சித் தோழர் ஒருவரின் வீட்டில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக் கிறார் நல்லகண்ணு. காவல்துறைக்கு துப்பு கிடைக்கிறது. நெல்லையின் அந்த புலியூர் குறிச்சி கிராமத்துக்குள் காவலர்கள் சடசடவென இறங்குகிறார்கள். நல்லகண்ணு கைது செய்யப்படுகிறார்.




சொல்லொனா துயரத்துக்கு ஆளாகிறார். அதிகாரத்தின் பூட்ஸ் கால்கள் நல்லகண்ணுவின் நெஞ்சில் ஏறி மிதித்தன. அதிகாரி ஒருவர் சிகரெட்டை பற்ற வைத்து நல்லகண்ணுவின் மீசையை கருக்கினார். உதட்டின் மேல் பகுதியிலும் சூடு வைத்து உயிர்போகும் வலியை கொடுக்கிறார்.

நல்லகண்ணு அப்போதும் மனம் தளரவில்லை. தீர்க்கமான நெஞ்சத்தோடு தன்னுடைய தோழர்களை பற்றி எந்தத் தகவலையும் அவர் காவல்துறையிடம் சொல்லவில்லை. விளைவாக, நல்லகண்ணு மதுரை சிறையில் அடைக்கப்பட்டார். அங்கும் சித்ரவதைகள் தொடர்ந்தது. ‘நெல்லை சதி’ என்ற பெயரில் அதிகாரத்துக்கு எதிராக போராடிய 109 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது. விசாரணையின் முடிவில் 16 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டது. அதில், நல்லகண்ணு உட்பட ப.மாணிக்கம், ஐ.மாயாண்டி, பாரதி, பொன்னு ஆர்.கிருஷ்ணன், கே.ப.எஸ்.மணி, அழகுமுத்து, அ.வேலாயுதம், ஆர்.பழனிசாமி என 9 பேருக்கு ஆயுள்தண்டனை வழங்கப்பட்டது.நல்லகண்ணு சிறையிலிருந்த நாட்களிலும் நிறைய கொடூரங்கள் நடந்திருந்தது. மில் தொழிலாளர்களுக்காகவும் விவசாயிகளுக்காகவும் போராடிய உசிலம்பட்டி பாலு, ஒரு காவலர் கொலையுண்ட வழக்கில் சிறையிலடைக்கப்பட்டிருந்தார். அவருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. பாலு தூக்குமேடை ஏறிய சமயத்தில், தூக்குத் தண்டனைக்கு எதிராக மதுரை சிறையிலிருந்து கண்டன முழக்கங்களை எழுப்பிக் கொண்டிருந்தார் நல்லகண்ணு.

‘நெஞ்சுரமூட்டிய சிறை!’

அதேமாதிரி, நல்லகண்ணுவுடன் ஆயுள்தண்டனை பெற்றிருந்த அ.வேலாயுதமும் தண்டனைக் காலத்திலேயே காச நோயினால் அவதிப்பட்டு உயிரிழந்தார். வேலாயுதம் ஏழ்மை குடிகொண்ட குடும்பத்தவர். நல்லகண்ணுவுடன் வேலாயுதம் சிறையிலிருந்த போதுதான் அவருக்கு மகன் பிறந்திருந்தான். குடும்பச்சூழல், மகனை காண முடியாத துயரம் என வேலாயுதத்தின் மனவேதனைகள் அத்தனையையும் அருகிலிருந்து பார்த்து நொந்துப்போனார் நல்லகண்ணு. சிறை ஒரு மனிதனை உலுக்கிவிடும். மனச்சத்து அத்தனையையும் உருக்குலைத்துவிடும். அதுவும் நல்லகண்ணு சிறையிலிருந்த காலத்தில் அவரின் மன உறுதியை உடைக்கும் வகையில்தான் அத்தனை சம்பவங்களும் நடந்திருந்தது. ஆனாலும் அவர் அசரவில்லை. மக்களுக்கு முன் நிற்கும் போராளி இதையெல்லாம் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும் என்கிற பக்குவமும் முதிர்ச்சியும் அவரிடம் இருந்தது. இவ்வளவு நெஞ்சுரத்தை அவர் பெறக் காரணம், அவர் மாணவப் பருவத்திலிருந்தே தன்னை மக்கள் பணியில் ஈடுபடுத்திக் கொள்ள




தொடங்கிவிட்டார். காந்தி, மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு என அப்போது தேசியளவில் முன் நின்ற தலைவர்கள் மீது பெரும் ஈர்ப்பைக் கொண்டிருந்தார். ஆங்கிலேயர்களுக்கு எதிரான போராட்டங் களிலும் மாணவராக பங்கேற்றிருந் தார். தேசியவாத எண்ணம் கொண்ட காங்கிரஸின் மீதான நல்லகண்ணுவின் ஈர்ப்பை அவரின் ஆசிரியர் பலவேசம்தான் மார்க்சிய தத்துவங்களின் மீது திருப்பிவிடுகிறார்.

பலவேசம்தான் 'சோவியத் ருஷ்யா' 'கார்ல்மார்க்ஸ் வரலாறு' போன்ற நூல்களை வாசிக்கக் கொடுத்திருக்கிறார். அதிலிருந்துதான் கம்யூனிச சித்தாந்தத்தின் மீது நல்லகண்ணுவுக்கு ஈர்ப்பு ஏற்படுகிறது. மாணவ இயக்கங்கள் நடத்தும் கூட்டங்களில் மைக் கட்டுவது, சேர்களை ஒழுங்குப்படுத்துவது போன்ற ஒத்தாசைகளை செய்துகொண்டே அவர்கள் பேசும் கருத்துகளையும் உள்வாங்கிக் கொண்டார். தோழர் பாலனும்



தோழர் ஜீவாவும்தான் நல்லகண்ணுவின் ஆஸ்தானங்கள். அவர்களிடமிருந்துதான் எளிமையையும் கொள்கைப்பிடிப்பையும் அவர் கற்றுக்கொண்டார்.

இரண்டாம் உலகப்போர் காலத்தில் பஞ்சம் நிலவிய சமயத்தில், நிலப்பிரபுக்கள் நெல்லை பதுக்கி வைக்கத் தொடங்கினர். ஆங்கிலேய அரசும் ஏழை மக்களுக்கு உளுத்துப்போன அரிசியையும் சோளத்தையும் கொடுத்தனர். இதற்கெதிராக ஸ்ரீவைகுண்டத்தில் பாலன் தலைமையில் 'உளுத்த சோள எதிர்ப்புத் தினம்' என பொதுக்கூட்டம் நடத்தினர். அந்தப் பொதுக்கூட்டத்தில் ஓடியாடி அத்தனை வேலைகளையும் நல்லகண்ணுவே செய்திருந்தார். பாலனின் உரைகளை கேட்பது நல்லகண்ணுவுக்கு அவ்வளவு பிடிக்கும். அவரின் உரைகள்தான் நல்லகண்ணுவை செதுக்கின. நெல்லை பதுக்கி வைத்திருந்தவர்களை தேடித் தேடிப் பிடித்து பதுக்கி வைத்திருந்த பல்லாயிரக்கணக்கான நெல் மூட்டைகளை வெளியே கொண்டு வந்த பாலனின் தீரம் நல்லகண்ணுவுக்கு நெஞ்சுரத்தை கொடுத்தது.

தோழர் ஜீவா நல்லகண்ணுவை ஜனசக்தியில் பணியாற்றுமாறு சென்னைக்கு அழைத்துக் கொண்டார். ஆனால், சென்னை பிடிக்காமல் நல்லகண்ணு நெல்லைக்கே திரும்பினார். அங்கு உடனிருந்த தோழர்களுடன் சேர்ந்து விவசாய சங்கங்களை கட்டியெழுப்பினார். விவசாயத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக போராடினார்.

1960 களின் தொடக்கத்தில் நில உச்சவரம்பு மசோதாவில் திருத்தம் கொண்டுவரக் கோரி இடதுசாரிகள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அந்தப் போராட்டத்திற்காக சீனிவாசராவ் நெல்லை வருகிறார். போராடுகிறவர்களுக்கு எதிராக காவல்துறையினர் நிகழ்த்தும் அடக்குமுறைகளுக்கு




எதிராகவும் விவசாயிகளுக்கான உரிமைகளைக் கோரியும் உடல் நலிவுற்றிந்த சமயத்திலும் வீரியமாக உரையாற்றுகிறார். அந்த சமயத்தில் அவருக்கு தீவிர ஆஸ்துமா. நெல்லையில் போராட்டத்தை முடித்துவிட்டு அவர் தஞ்சைக்கு செல்ல வேண்டும்.

சீனிவாசராவை வழியனுப்ப சில தோழர்களுடன் நல்லகண்ணுவும் செல்கிறார். உடல் நலிவுற்றிருப்பதால் இரண்டாம் வகுப்பில் பயணம் செய்யுமாறு நல்லகண்ணு கூறுகிறார். சீனிவாசராவ் மறுக்கிறார். மீண்டும் அழுத்தி கூறுகிறார். சீனிவாசராவ் ஏற்றுக்கொள்ளவே இல்லை. துண்டை விரித்துக் கொள்கிற இடம் எனக்கு போதும் மூன்றாம் வகுப்பிலேயே பயணம் செய்துகொள்கிறேன் என விடாப்பிடியாக பேசிவிட்டு கிளம்பியிருக்கிறார். கடைசி மூச்சு வரை மக்களுக்காக போராடியே ஓய்ந்தார் சீனிவாசராவ்.



'பெண் கொடுத்த தோழர்!'

நல்லகண்ணு பிறந்தது வசதியான குடும்பமாக இருக்கலாம். ஆனால், அவர் பார்த்து வளர்ந்து உடன் ஆளுயர மாலை போட திட்டமிட்டிருந்தனர். அதையும் வேண்டாமென கறாராக கூறிவிட்டார். பின்னர் நிர்வாகிகளை அழைத்து, 'நாட்டோட நிலைமையை இந்த மாலையும் லைட்டுமா எடுத்து சொல்லப்போகுது? இந்த செலவையெல்லாம் கட்சிக்கு நிதியா கொடுத்திருந்தா ஒரு கம்யூனிஸ்ட்டு நாடாளுமன்றம் போயி மக்கள் பிரச்னைகளை பேச உதவியா இருந்திருக்குமே..' என அறிவுரையும் கூறியிருக்கிறார்.

80—வது பிறந்தநாளில் கட்சி திரட்டிக் கொடுத்த நிதி மொத்தத்தையும் அப்படியே கட்சிக்கே மட்டும் நிதியாக திருப்பிக் கொடுத்தார். அவருக்கு வெகுமதியாக வந்த எல்லாமே கட்சிக்குதான். படோபடம் மட்டுமே ஒரே மொழியாகக் கொண்ட அரசியலில் இவ்வளவு எளிமையாக சிந்தித்ததால்தான் என்னவோ தேர்தல் அரசியலில் ஒரு முறை கூட அவரால் வெல்ல முடியாமல் போனது. 1990—களில் நெல்லையில் கொடூரமான சாதியக் கலவரங்கள் நடந்துகொண்டிருந்தது. இரு வேறு சமூகங்களுக்கிடையே தொடர் மோதல், தொடர் கொலைகள். சாதி ஒழிப்புக்காக தீவிரமாக போராடிய நல்லகண்ணுவின் மாமனார் அன்னசாமியை வீடு புகுந்து வெட்டினர். அந்த சமயத்தில் நல்லகண்ணு மாநிலச் செயலாளர். அவரால் விஷயத்தை பெரிதுப்படுத்தியிருக்க முடியும். ஆனால், தனிமனிதன் ஒருவனின் துயரமும் ஆக்ரோஷமும் சமூகத்தில் பதற்றத்தை உண்டாக்கிவிடக் கூடாது என்பதற்காக நல்லகண்ணு அமைதி காத்தார். ஒவ்வொரு இழப்புமே நல்லகண்ணுவிற்குள் இருக்கும் போராளிக்கு இன்னும் உரத்தையே ஏற்றியது. மாமனார் கொல்லப்பட்ட அடுத்த சில நாட்களிலேயே சாதியக் கலவரங்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டி கூட்டங்களை நடத்தத் தொடங் கினார். 'என் நாடு, என் மக்கள்..' என்பதுதான் நல்லகண்ணு வின் மார்க்சியம். அந்தக் கருத்திலும் கொள்கைப் பிடிப்பிலும் கடைசி வரைக்குமே சமரசம் செய்துகொள்ளாமல்தான் இருந்தார்.



ஒரு பேட்டியில் தோழர் நல்லகண்ணுவின் மனைவி கூறியது— 'மாநிலச் செயலாளர் பொறுப்பிலிருந்து தோழர் விடுபட்டதும் நான் ரொம்பவே மகிழ்ந்தேன். இனி போதுமான அளவுக்கு ஓய்வெடுப்பார் என எண்ணினேன். ஆனால், மீண்டும் முன்பை விட வேகமாக அலைந்துகொண்டுதான் இருக்கிறார். குடும்பத்தில் வளர்ந்ததை விட அதிகம் கட்சியில்தான் வளர்ந்தார். உறவினர்களோடு இருப்பதை விட கட்சித் தோழர்களோடும் மக்களோடும் இருப்பதைத்தான் விரும்புவார். அதுதான் அவருடைய உடல்நிலைக்கும் ஒத்ததாக இருக்கிறது. அதை நிறுத்தினால் அவருடைய உடம்பு ஒத்துக்கொள்ளாது.' தோழர் நல்லகண்ணுவின் நூற்றாண்டு வாழ்வை இதைவிட ஆகச்சிறப்பான வார்த்தைகளில் கோர்க்க முடியாது.

அதிகாரம் கோரமானது. அதிகாரம் எளிய மக்களை தங்களின் இஷ்டத்துக்கு ஆட்டிப்படைக்கும். தங்களுக்கு எதிராக நிற்பவர்களை கடித்து குதறி விரட்டியடிக்கும். தோழர் நல்லகண்ணுவை அப்படி எத்தனையோ முறை விரட்டியடிக்க முயன்றிருக்கிறது. அது தோல்வியில் முடிந்தது. அதற்கு பிறகான அத்தனை முயற்சிகளுக்கும் அதே முடிவுதான். ஏனெனில், நல்லகண்ணு எப்போதும் உழைக்கும் மக்களின் பக்கமும் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களின் பக்கம் மட்டுமே நின்றார். நீதியின் குரல் தோழருக்குள் ஒரு அணையாத செந்தீயை மூட்டியது.

'இருட்டறையில் மெழுகுவத்தியை கொளுத்தி வைக்கிறோம். எரிந்து வெளிச்சம் கொடுக்கிறது. ஆனால், மெழுகுவத்தியும் எரிந்து உருகிவிடுகிறது. ஒளிகொடுத்து தன்னை அழித்துக்கொள்ளும் மெழுகுவத்தியைப் போல ஒரு சில லட்சிய வீரர்களின் வாழ்க்கையும் அமைந்துவிடுகிறது.' சீனிவாசராவுக்கு நல்லகண்ணு எழுதிய இரங்கல் குறிப்பு இது. நல்லகண்ணுவும் இந்த தமிழ்ச் சமூகத்தின் பாட்டாளி வர்க்கத்துக்காக இன்றைக்கும் தன்னைக் கரைத்துக் கொண்டிருக்கும் உன்னத ஒளியே!




# மழையும் வெயிலும்

## தொகுப்பாசிரியர்: *மணிமாறன்*

*(சிறுகதைகள்)*

**விலை : ரூ. 150**




**வெளியீடு:**

**சரஸ்வதி பப்ளிகேஷன்ஸ்,**

**சாத்தூர்–626 203**

**தொடர்புக்கு: 94432 44633.**

எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவாக நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டிகளுக்கு வந்த சிறுகதைகளைத் தேர்ந்தெடுத்து ஒரு தொகுப்பாக வெளியிட்டு இருக்கிறார் தொகுப்பாசிரியர். இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கதைகள் அனைத்தும் புதிதாக எழுத வந்தவர்கள் எழுதிய சிறுகதைகள்போல் தெரியவில்லை. அனைத்து சிறுகதைகளுமே தேர்ந்த எழுத்தாளர்களின் கைவண்ணத்தில் எழுதப்பட்டவை போன்று உள்ளன.

சமூக நீதி, ஒழுக்கம், பல்லுயிர் ஓம்புதல், குழந்தைகளின் உலகம், கிராமக் கோயில் திருவிழா என நமக்கு பல்வேறு விதமான சூழலையும், மண்வாசனையையும், வட்டார மொழியையும் வெளிப்படுத்தும் விதத்தில் சிறந்த சிறுகதைகளைத் தொகுத்திருக்கும் தொகுப்பாசிரியர், புதிதாக சிறுகதை எழுதுபவர்களுக்கும், சிறுகதை வாசிப்பில் ஆர்வம் உள்ளவர்களுக்குமாகச் செய்திருக்கும் இந்த இலக்கியப் பணி மிகவும் முக்கியமான முன்னெடுப்பு.



# சிவகாமியின்

## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## மகேந்திரர் கோரிக்கை 56

மாமல்லர், பரஞ்சோதி முதலியவர்கள் காஞ்சிக்குத் திரும்பி வந்த போது, மகேந்திர பல்லவரின் தேகநிலை முன்னை விட மோசமாகியிருந்தது. அவர்கள் சிவகாமியை அழைத்து வரவில்லையென்று தெரிந்த பிற்பாடு, அவருடைய உடம்பு மேலும் நலிவடைந்தது.

திருவெண்காட்டு நமசிவாய வைத்தியர் எவ்வளவோ திறமையாக வைத்தியம் செய்தும், தேக நிலைமையில் அபிவிருத்தி ஏற்படவில்லை.

மகேந்திர பல்லவர் ஒருநாள் தம் புதல்வர் மாமல்லரையும் மந்திரி மண்டலத்தாரையும், படைத் தலைவர்களையும், கோட்டத் தலைவர்களையும் அழைத்து வரச் செய்தார். படுக்கையில் படுத்தபடியே சுற்றிலும் சூழ்ந்து நின்றவர்களைச் சக்கரவர்த்தி பார்த்தார். எல்லாருடைய கண்களிலும் கண்ணீர் கசிந்திருப்பதையும், எல்லாருடைய முகத்திலும் பக்தி விசுவாசம் ததும்பிக் கொண்டிருப்பதையும் கவனித்தார். மகேந்திர பல்லவரின் பழைய சிம்ம கர்ஜனைக் குரலைக் கேட்டிருந்தவர்கள், இப்போது அவருடைய மெலிந்த ஈனஸ்வரமான குரலைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். தங்களுடைய உணர்ச்சியை வெளிக்காட்டாமல் தடுத்துக் கொள்ள முயன்றார்கள்.

மகேந்திர பல்லவர் சொன்னார்: “நான் இந்தப் புகழ்பெற்ற பல்லவ சிம்மாசனத்தில் ஏறி, இன்றைக்கு இருபத்தைந்து வருஷம் ஆகிறது. இவ்வளவு காலமும் நீங்கள் காட்டிய பக்தியும் விசுவாசமும் இணையற்றவை. காஞ்சியின் புகழ் பாரத நாடெங்கும் ஓங்கி நின்ற காலத்தில், நீங்கள் என்னிடம் பக்தி விசுவாசத்துடன் நடந்து கொண்டீர்கள். என்னுடைய விருப்பமே கட்டளையாகவும் என்னுடைய வார்த்தையே சட்டமாகவும் பாவித்து வந்தீர்கள். அது பெரிய காரியமல்ல. நான் தவறுக்கு மேல் தவறாகச் செய்து வந்த காலத்திலும் காஞ்சியின் புகழ் மங்கி வந்த நாளிலும் படையெடுத்து வந்த பகைவர்களை முன்னேற விட்டுப் பின்வாங்கி வந்த காலத்திலும், காஞ்சிக் கோட்டைக்குள் நாம் மறைந்திருக்க வேண்டி வந்த காலத்திலும் என்னிடம் இடைவிடாத விசுவாசம் காட்டி வந்தீர்கள். மாறாத பக்தி செலுத்தி வந்தீர்கள். சளுக்க மன்னன் புலிகேசியை உங்களுடைய விருப்பத்திற்கு மாறாக நான் விருந்துக்கு அழைத்ததையும் அதனால் விளைந்த விபரீதங்களையும் நீங்கள் பொறுத்துக் கொண்டிருந்தீர்கள். எனக்கு அந்திய






# 56 சபதம்

## கல்கி

காலம் நெருங்கியிருக்கும் இந்தச் சமயத்தில் உங்களுக்கெல்லாம் என் மனத்தில் பொங்கிக் கொண்டிருக்கும் எல்லையற்ற நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் செய்த தவறுகளுக்காகவும் என்னால் உங்களுக்கெல்லாம் நேர்ந்த கஷ்டங்களுக்காகவும் மன்னிக்கும்படியாக ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன்…"

இவ்விதம் மகேந்திர பல்லவர் பேசிய போது, சபையிலே சிலர் விம்மி அழுதார்கள். முதன் மந்திரி ஓர் அடி முன்னால் வந்து "பிரபு! இப்படியெல்லாம் பேசக் கூடாது என்று பிரார்த்திக்கிறேன். எங்களிடம் தாங்கள் மன்னிப்புக் கேட்பது எங்களைத் தண்டிப்பதேயாகும். தங்கள் மேல் இல்லாத குற்றங்களையெல்லாம் சுமத்திக் கொண்டு, எங்களை வேதனைக்கு ஆளாக்குகிறீர்கள். நடந்ததெல்லாம் விதிவசத்தினால் நடந்தது. சென்று போன காரியங்களைப் பற்றிச் சிந்திப்பதில் பயனில்லை!" என்றார்.

மகேந்திர சக்கரவர்த்தி மேலும் கூறினார்: "சாரங்கதேவ பட்டரின் மொழிகள் என்னை மேலும் உங்களிடம் நன்றிக்கடன் பட்டவனாகச் செய்கின்றன. இன்று உங்களையெல்லாம் நான் அழைத்ததன் காரணத்தைச் சொல்கிறேன். என் வாழ்நாளின் இறுதி நெருங்கி விட்டது. இன்னும் சில நாளைக்கெல்லாம் இந்த மெலிந்து நைந்த தேகத்திலிருந்து என் ஆவி பிரிந்து போய் விடும். என் அருமைக் குமாரன் நரசிம்மன் வேத விதிப்படி இறந்து போன தந்தைக்குச் செய்ய வேண்டிய உத்தரக் கிரியைகளைச் செய்வான்…" என்று சக்கரவர்த்தி சொன்னபோது, மாமல்லர் தாங்க முடியாத துக்கமும் ஆத்திரமும் பொங்க, "அப்பா! அப்பா!" என்று அலறினார்.

மகேந்திர பல்லவர் அருகில் நின்ற மகனை அன்புடன் தழுவிக் கொண்டு, உச்சி முகந்து, "குழந்தாய்! நான் சொல்ல வேண்டியதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். உனக்குக் கேட்பதற்குக் கஷ்டமாயிருந்தால் சற்று வெளியே போய் இருந்து விட்டு அப்புறம் வா!"



என்றார். ஆனால் அவ்விதம் மாமல்லர் வெளியேறவில்லை. மறுபடியும் மந்திரி பிரதானிகளைப் பார்த்துச் சக்கரவர்த்தி கூறினார்: "என் அருமை மகன் எனக்குரிய உத்திரக் கிரியைகளைச் செய்வான். நீங்களும் காலம் சென்ற சக்கரவர்த்திக் குரிய மரியாதைகளைச் செய்வீர்கள். ஆனால், இதனாலெல்லாம் என் ஆத்மா சாந்தி அடையவே அடையாது. இப்போது நான் உங்களிடம் கேட்டுக் கொள்ளப் போகும் கோரிக்கையை நிறைவேற்றி வைத்தால் என் ஆத்மா சாந்தி அடையும். இல்லாவிட்டால் சொர்க்கத்திலே இருந்தாலும் என் ஆவி நிம்மதி அடையாது."



"பிரபு! சொல்லுங்கள். தங்களுடைய ஆக்ஞை எதுவானாலும், அதை நிறைவேற்றி வைப்பதாக இங்குள்ளவர் அனைவரும் சபதம் செய்ய ஆயத்தமாயிருக்கிறோம்!" என்று முதல் அமைச்சர் கூறினார்.

"என்னுடைய அஜாக்கிரதையினாலும் சளுக்க மன்னனின் வஞ்சகத்தினாலும் பல்லவ வம்சத்துக்குப் பெரிய அவமானம் நேர்ந்து விட்டதை நீங்கள் அறிவீர்கள். அறுநூறு வருஷத்து வீரப் புகழுக்கு என் காலத்தில் பங்கம் நேர்ந்துவிட்டது. அந்த அவமானத்தை என்னாலே துடைக்க முடியவில்லை. இழந்து விட்ட பல்லவ வம்சத்துப் புகழை நிலைநாட்டாமலே நான் உங்களிடம் விடைபெற்றுக் கொள்கிறேன். நான் செய்ய முடியாமற் போன காரியத்தை நீங்கள் நிறைவேற்றி வைக்க வேண்டும். பல்லவ சைனியம் படையெடுத்துச் சென்று, சளுக்கரை வென்று, புலிகேசியைக் கொன்று, வாதாபி நகரை அழித்து, தீ வைத்து எரிக்க வேண்டும். வாதாபி நகரம் இருந்த இடத்தில் பல்லவ ஜயஸ்தம்பம் கம்பீரமாக வானளாவி நிற்க வேண்டும். அப்போது தான் பல்லவ வம்சத்துக்கும் தமிழகத்தின் வீரத்துக்கும் நேர்ந்துள்ள களங்கம் நிவர்த்தி யாகும். இதுவே என் கோரிக்கை, என்ன சொல்கிறீர்கள்? நிறைவேற்றுவீர்களா?"




"நிறைவேற்றுகிறோம்", நிறைவேற்றுகிறோம்" என்று ஏக காலத்தில் பல குரல்கள் ஒலித்தன.

"மகேந்திர பல்லவேந்திரர் வாழ்க! வீர மாமல்லர் வாழ்க!" என்ற ஜயகோஷங்களும் முழங்கின.

மகேந்திர பல்லவர் இன்னொரு தடவை எல்லாரையும் பார்த்து, "மறுமுறையும் உங்களுக்கு என் இருதயத்தில் பொங்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

அப்போது முதல் அமைச்சர், "பிரபு ஒரு விஷயம், தங்கள் கோரிக்கையை வெளியிட்ட போது, இங்குள்ள நாங்கள் அனைவரும் அதை நிறைவேற்றி வைப்பதாக ஒப்புக் கொண்டு கோஷித்தோம். ஆனால், முக்கியமாகத் தங்கள் கோரிக்கையை நிறைவேற்றி வைக்க வேண்டிய இருவரும் சும்மா இருந்தார்கள். குமார சக்கரவர்த்தியையும் சேனாபதி பரஞ்சோதியையுந்தான் சொல்கிறேன். அவர்கள் மௌனமாயிருந்தது எங்களுக்கு அர்த்தமாகவில்லை" என்றார்.

"மாமல்லனும் பரஞ்சோதியும் ஏற்கெனவே எனக்கு அவ்வாறு வாக்களித்துச் சபதம் கூறியிருக்கிறார்கள். அதனாலேதான் இப்போது சும்மா இருந்தார்கள். அவர்கள் செய்த சபதத்தை நிறைவேற்றி வைக்க நீங்கள் அவர்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டும். சபையோர்களே! நான் மாமல்லனோடு ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டியிருக்கிறது. அதனுடைய முடிவை உங்களுக்கும் நான் தெரிவித்தாக வேண்டும். சற்று எங்களுக்கு அவகாசம் கொடுப்பீர்களா?" என்று கேட்டார்.

(சபதம் தொடரும்)


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
இனிய
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
VARSHA™
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
பொங்கலோ பொங்கல்
VARSHA™



# தாங்கும்

## வெனிஸ் நகரம்–காப்பாற்றி வரும் மரத்தூண்கள்

வெனிஸ் மக்களுக்கு, தங்கள் நகரம் தலைகீழாக இருக்கும் காடு என்பது நன்கு தெரியும். இந்த நகரம் 1604 ஆண்டுகள் பழமையானது. கீழ்நோக்கி நிலத்தில் அடித்துப் பதிக்கப்பட்ட லட்சக்கணக்கான மரத் துண்டுகளால் உருவாக்கப்பட்ட அடித்தளத்தின் மீது இது கட்டப்பட்டுள்ளது.

இந்த மரங்கள், 3.5 மீட்டர் (11.5 அடி) முதல் 1 மீட்டருக்கும் (3 அடி) குறைவான நீளம் வரையுள்ள லார்ச், ஓக், ஆல்டர், பைன், ஸ்ப்ரூஸ் மற்றும் எல்ம் ஆகியவையாகும். இவை, இயற்பியல் மற்றும் இயற்கையின் சக்திகளைத் திறமையாகப் பயன்படுத்திய ஓர் உண்மையான பொறியியல் அதிசயமாகப் பல நூற்றாண்டுகளாகக் கல் அரண்மனைகளையும் உயரமான கோபுரங்களையும் தாங்கி நிற்கின்றன.

பெரும்பாலான நவீன கட்டடங்களில், பல நூற்றாண்டுகளாக இந்தத் தலைகீழ் காடு செய்து வரும் பணியை எஃகு மற்றும் வலுப்படுத்தப்பட்ட கான்கிரீட் மேற்கொள்கின்றன. ஆனால், அவை வலிமையாக இருந்தாலும், இன்றைய காலத்தில் அமைக்கப் படும் மிகச் சில அடித்தளங்களே, வெனிஸ் நகரின் அடித்தளங்கள் நீடித்திருப்பது போல் இவ்வளவு காலம் நிலைத்திருக்க முடியும்.

“இன்றைய காலகட்டத்தில், கான்கிரீட் அல்லது எஃகு கம்பிகள் 50 ஆண்டுகள் நீடிக்கும் என்ற உத்தரவுடன் வடிவமைக்கப்படுகின்றன” என்று சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரிலுள்ள இ.டி.ஹெச் **(ETH)** பல்கலைக் கழகத்தின் புவி இயந்திரவியல் மற்றும் புவி அமைப்பு பொறியியல் பேராசிரியர் அலெக்சாண்டர் புஸ்ரின் கூறுகிறார். “நிச்சயமாக அவை அதற்கும் மேலாக நீடிக்கலாம். ஆனால்









# தூண்கள்

வீடுகள் மற்றும் தொழிற்துறை கட்டடங்களை நாம் கட்டும்போது, வழக்கமான அளவுகோல் 50 ஆண்டுகள் ஆயுள் என்பதே" என்கிறார் அவர்.

வெனீசிய மரத்தூண்கள் **(piles)** பயன்படுத்தும் இந்த நுட்பம், அதன் வடிவியல் அமைப்பு, நூற்றாண்டுகளாக நீடிக்கும் வலிமை, மற்றும் அதன் அதிர்ச்சியூட்டும் அளவு ஆகியவை பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றன.

நகரத்தின் அடியில் எத்தனை மில்லியன் மரத்தூண்கள் உள்ளன என்பது துல்லியமாக யாருக்கும் தெரியவில்லை. ஆனால் ரியால்டோ பாலத்தின் அடித்தளத்தில் மட்டும் மிக நெருக்கமாகச் சேர்த்து அடிக்கப்பட்ட 14,000 மரத்தூண்கள் உள்ளன. மேலும், கி.பி. 832ஆம் ஆண்டு கட்டப்பட்ட சான் மார்கோ பேராலயத்தின் கீழே 10,000 ஓக் மரத்தூண்கள் பதித்து வைக்கப்பட்டுள்ளன.

## ஆன்னா பிரெஸ்ஸனின்

வெனிஸ் நகரின் மரத்தூண் அடித்தளம் எப்படி சாத்தியமானது?

கட்டமைப்பின் வெளிப்புற விளிம்பிலிருந்து தொடங்கி, அடித்தளத்தின் மையப் பகுதிக்கு நகர்ந்து, முடிந்தவரை ஆழமாக இந்த மரக் கம்பங்கள் பதிக்கப்பட்டன. பொதுவாக ஒரு சதுர மீட்டருக்கு ஒன்பது கம்பங்கள்






வீதம், சுருள் வடிவத்தில் அவை அடிக்கப்பட்டன.

கடல் மட்டத்திற்குக் கீழே இருக்கும், வழக்கமான மேற்பரப்பைப் பெற அந்த மரங்களின் தலைப்பகுதிகள் வெட்டப்பட்டன. ஜாட்டெரோனி (பலகைகள்) அல்லது மடியேரி (பீம்கள்) போன்ற குறுக்கு மரக் கட்டமைப்புகள் மேலே வைக்கப்பட்டன.இந்த மர அடித்தளத்தின் மேலே, தொழிலாளர்கள் கட்டடத்தின் கல்லை வைப்பார்கள். கட்டுமானத்திற்கும், கப்பல்களுக்கும் போதுமான மரங்களை வழங்குவதற்காக, வெனிஸ் குடியரசு விரைவில் அதன் காடுகளைப் பாதுகாக்கத் தொடங்கியது.

அதற்காக, “வெனிஸ், சில்விகல்ச்சரை **(sylviculture)** கண்டுபிடித்தது,” என்று இத்தாலியின் தேசிய ஆராய்ச்சி கவுன்சிலில் உள்ள உயிரியல் பொருளாதாரத்திற்கான நிறுவனத்தின் ஆராய்ச்சி இயக்குநர் நிக்கோலா மச்சியோனி கூறுகிறார். அவர், மரங்களை வளர்க்கும் நடைமுறையைக் குறிப்பிடுகிறார். வெனிஸ் மட்டுமே, அஸ்திவாரங்களுக்கு மரக் குவியல்களைச் சார்ந்திருக்கும் ஒரே நகரம் இல்லை. ஆனால், அதைப் பிறவற்றிடம் இருந்து தனித்துவமாக்கும் முக்கிய வேறுபாடுகள் உள்ளன.

ஆம்ஸ்டர்டாம், ஓரளவு மரக் குவியல்களால் கட்டப்பட்ட மற்றொரு நகரம். இங்கும் பல வடக்கு ஐரோப்பிய நகரங்களிலும், அவை பாறையை அடையும் வரை கீழே சென்று, நீண்ட கம்பம் அல்லது மேசையின் கால்கள் போல வேலை செய்கின்றன. இல்லினாய் பல்கலைக்கழக கட்டடக்கலை பேராசிரியரான தாமஸ் லெஸ்லி, “பாறை மேற்பரப்புக்கு அருகில் இருந்தால் இது நல்லது” என்கிறார். அமெரிக்காவிலுள்ள மிச்சிகன் ஏரியின் கரையில், லெஸ்லி அமைந்துள்ள இடத்தில், அடிப்பாறையானது மேற்பரப்பிற்கு கீழே 100 அடியில் (30 மீ) இருக்கலாம்.

“அந்த அளவுக்குப் பெரிய மரங்களைக் கண்டுபிடிப்பது கடினம் இல்லையா? 1880களில் சிகாகோவில் நடந்த கதைகள் இருந்தன; அதில், அவர்கள் ஒரு மரத்தின் தண்டு ஒன்றை மற்றொன்றின் மேல் ஒட்ட முயன்றனர். நீங்கள் யூகிப்பதுபோல, அது வேலை செய்யவில்லை. இறுதியாக, மண்ணின் உராய்வை அதற்கு நம்பலாம் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்” என்றும் லெஸ்லி கூறினார்.

அதிகமான தூண்களை மண்ணில் நெருக்கி நுழைத்தால், தூண்களுக்கும் மண்ணுக்கும் இடையிலான உராய்வு **(friction)** அதிகமாகி, அதனால் மண் வலுப்பெறும் என்ற யோசனையின் அடிப்படையில் அந்தக் கோட்பாடு அமைந்துள்ளது. இதற்கான தொழில்நுட்பச் சொல் ‘ஹைட்ரோஸ்டேடிக் பிரஷர்’ **(Hydrostatic Pressure).** அதாவது பல குவியல்கள் ஓரிடத்தில் அடர்த்தியாகச் செருகப்பட்டால், மண் அந்தக்






வெனிஸ் குவியல்கள் இந்த வழியில்தான் வேலை செய்கின்றன. அவை பாறையை அடைய முடியாத அளவுக்குக் குட்டையானவை. அதேநேரம், உராய்வின் காரணமாகக் கட்டடங்களைப் பிடித்து நிற்க வைக்கின்றன. ஆனால் இந்தக் கட்டுமான முறையின் வரலாறு இன்னும் பழமையானது.இந்த நுட்பத்தை முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானிய பொறியாளரும் கட்டடக் கலைஞருமான விட்ருவியஸ் குறிப்பிட்டுள்ளார். ரோமானியர்கள் மூழ்கிய குவியல்களைப் பயன்படுத்திப் பாலங்களைக் கட்டினார்கள். அவை தண்ணீருக்கு அருகிலேயே இருக்கும்.

"சீனாவில் உள்ள நீர் வாயில்களும் உராய்வு குவியல்களைப் பயன்படுத்திக் கட்டப்பட்டன. ஸ்பானியர்கள் வந்து பழங்கால நகரத்தை இடித்துத் தள்ளிவிட்டு, அதன் மேல் தங்கள் கத்தோலிக்க தேவாலயத்தை கட்டும் வரை, ஆஸ்டெக்குகள் (கிக்ஷுமீ மீநீவ) மெக்ஸிகோ நகரத்தில் அவற்றைப் பயன்படுத்தினர்" என்று புஸ்ரின் குறிப்பிடுகிறார்.

"ஆஸ்டெக் மக்கள் தங்கள் சூழலில் எப்படிச் சிறப்பாகக் கட்ட வேண்டும் என்பதைப் பிற்கால ஸ்பானியர்களைவிட நன்கு அறிந்திருந்தனர். அந்த ஸ்பானியர்கள் இப்போது சீரற்ற முறையில் மூழ்கிக் கொண்டிருக்கும் தரையைக் கொண்ட இந்தத் திருச்சபைப் பெருநகரில் பெரும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்." புஸ்ரின் இ.டி.ஹெச் பல்கலைக் கழகத்தில் புகழ்பெற்ற புவி தொழில்நுட்ப தோல்விகள் குறித்து ஆராயும் ஒரு பட்டப்படிப்பு வகுப்பை நடத்துகிறார். "இது அந்தத் தோல்விகளில் ஒன்று" என்கிறார் அவர். "இந்த மெக்ஸிகோ நகர தேவாலயமும், ஒரு வகையில் மெக்ஸிகோ நகரமும், அஸ்திவாரங்களில் என்னவெல்லாம் தவறாக நடக்க முடியும் என்பதற்கான திறந்தவெளி அருங்காட்சியகமாக இருக்கின்றன" என்று அவர் கூறுகிறார்.




மரம் ஏன் அழுகவில்லை?

தண்ணீரில் 1,500 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்தபோதிலும், வெனிஸ் அஸ்திவாரங்கள் குறிப்பிடத்தக்க அளவில் மீள்திறன் கொண்டவை என்பதை நிரூபித்துள்ளன. இருப்பினும், அவை சேதத்திற்கு ஆளாகாதவை அல்ல.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு, படோவா மற்றும் வெனிஸ் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த வனவியல், பொறியியல் மற்றும் கலாசார பாரம்பரியம் வரையிலான பல துறைகள் அடங்கிய ஒரு குழு, 1440ஆம் ஆண்டில் ஆல்டர் மரக் குவியல்கள் மீது கட்டப்பட்ட ஃப்ராரி தேவாலயத்தின் மணிக்கோபுரத்தில் தொடங்கி, நகரின் அஸ்திவாரங்களுடைய நிலையை ஆய்வு செய்தது.ஃப்ராரி மணிக்கோபுரம் கட்டப்பட்டதில் இருந்து ஆண்டுக்கு 1 மிமீ (0.04 அங்குலம்) வீதம், மொத்தமாக 60 செமீ (சுமார் 24 அங்குலம்) வரை புதைந்து வருகிறது.

தேவாலயங்கள் மற்றும் கட்டடங்களுடன் ஒப்பிடும்போது, மணிக்கோபுரங்கள் ஒரு சிறிய

பரப்பளவில் அதிக எடையைக் கொண்டுள்ளன. இதனால் அவை ஆழமாகவும் விரைவாகவும் மூழ்கி விடுகின்றன. ஆய்வு செய்த கட்டமைப்புகள் முழுவதிலும் மரம் சேதமடைந்து இருப்பதைக் குழு கண்டறிந்தது. ஆனால் நீர், மண் மற்றும் மரம் அடங்கிய அந்த அமைப்பு அனைத்தையும் ஒன்றாகப் பிடித்து வைத்திருந்தது.

நகரத்தின் அடியிலுள்ள மரம், ஆக்சிஜன் இல்லாத அல்லது காற்றில்லா நிலையில் இருப்பதால் சிதைவதில்லை என்று பொதுவாக நம்பப்பட்டு வந்த நம்பிக்கையை அவர்கள் முறியடித் தனர். ஏனெனில், ஆக்சிஜன் இல்லாத நிலையிலும் கூட பாக்டீரியாக் கள் மரத்தைத் தாக்குகின்றன.ஆனால் பாக்டீரியாவின் செயல்பாடு, ஆக்சிஜன் இருப்பின்போது செயல்படும் பூஞ்சை மற்றும் பூச்சிகளின் செயல்பாட்டைவிட மிக மெதுவானது. மேலும், பாக்டீரியாவால் காலியாக்கப்படும் செல்களில் நீர் நிரம்புவதால், மரக் குவியல்கள் அவற்றின் வடிவத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடிகிறது.

இதில், கவலைப்படுதற்கு ஏதேனும் இருக்கிறதா என்றால், “ஆம் மற்றும் இல்லை. ஆனால், நாம் இந்த வகையான ஆராய்ச்சியைத் தொடர்வது பற்றி இன்னும் சிந்திக்க வேண்டும்“ என்கிறார் இஸோ. பத்து ஆண்டுகளுக்கு முன்பு மாதிரிகள் சேகரிக்கப்பட்டதில் இருந்து, அவர்கள் புதியவற்றைச் சேகரிக்கவில்லை. இந்த அடித்தளங்கள் இன்னும் எத்தனை நூற்றாண்டுகளுக்கு நீடிக்கும் என்பது தெரியவில்லை என்கிறார் நகரின் அஸ்திவாரங்களை ஆய்வு செய்த குழுவைச் சேர்ந்தவரான மக்கியோனி.

“இருப்பினும், சுற்றுச்சூழல் அப்படியே இருக்கும் வரை அது நீடிக்கும். அடித்தள அமைப்பு மரம், மண் மற்றும் நீரால் ஆனதால் அது வேலை செய்வதாகவும்“ அவர் குறிப்பிட்டார்.

மண் ஆக்ஸிஜன் இல்லாத சூழலை உருவாக்குகிறது. நீர் அதற்குப் பங்களிப்பு பேதாடு செல்களின் வடிவத்தையும் தக்கவைக்கிறது. மரம் உராய்வை வழங்குகிறது. ‘அசாதாரண மான அழகு’ கடந்த 19






மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளில், அடித்தள கட்டுமானத்தில் மரம் முற்றிலுமாக சிமெண்ட்டால் மாற்றப்பட்டது. இருப்பினும், சமீபத்திய ஆண்டுகளில் மரத்தால் ஆன வானளாவிய கட்டடங்களின் எழுச்சி உள்பட, மரத்தால் கட்டப்படும் புதிய போக்கு அதிக ஆர்வத்தைப் பெற்றுள்ளது.

மரம், கரிமம் நிறைந்தது. அது இயற்கையாகவே சிதையக் கூடியது. மேலும், அதன் வளைந்து கொடுக்கும் தன்மை காரணமாக, நிலநடுக்கத்தை சமாளிக்கும் பொருட்களில் ஒன்றாகவும் அது கருதப்படுகிறது.

வெனிஸ் மட்டுமே மரத்தால் ஆன அடித்தளங்களைக் கொண்ட நகரம் அல்ல. ஆனால், “இன்றுவரை உயிர் பிழைத்திருக்கும், மிகவும் அழகாகவும் இருக்கும் ஒரே ஒரு நகரம் (உராய்வு நுட்பம் பயன்படுத்தப்பட்ட நகரங்களில்) இதுதான்” என்று கூறுகிறார் புஸ்ரின்.“மண் இயக்கவியல் மற்றும் புவி தொழில்நுட்ப பொறியியல் படிக்காதவர்கள் அங்கே இருந்தனர். இருந்தாலும்கூட, இவ்வளவு காலம் நீடித்த, நாம் உருவாக்குவது பற்றிக் கனவு மட்டுமே காணக்கூடிய ஒன்றை அவர்கள் உருவாக்கினார்கள்” என்றும் அவர் கூறினார்.

கவிதை

# பொங்கலோ பொங்கல்!

காலைக் கதிரவன் கண்விழித்து
கதிர்களை பூமிதனில் உடுத்தி
மங்கலமாய் பூமியை மின்னச் செய்து
எட்டிப் பார்த்த விழியில் ஏமாற்றமில்லை!

நாட்காட்டி அறிவுறுத்திய நல்ல நேரம்
மதம் கொண்ட சாஸ்திரங்கள்
விழி அறிந்த கடவுளாய் கதிரவன்
ஒடுங்கிக் கொண்ட பகுத்தறிவுகள்!

ஆங்காங்கே சிறுவர்கள் ஓட்டம்
வேரிழந்த தித்திக்கும் கரும்புகள்
நினைவிழந்த மஞ்சள் செடிகள்
உயிர் கொண்ட அதிசயங்கள்!

எங்கும் தேடியும் கிடைக்கவில்லை
காணவில்லை அறிவிப்பு கொடுக்கலாமா?
எங்கே சென்று தேடுவேன் ?
எளிதாய் தென்படும் பொங்கல் செடியை!
இணையதள தேடல்
பயன் அளிக்கவில்லை!

சகல வித காய் கறிகள்
வானம் நோக்கி வாய் பிளந்த தேங்காய்
புகை பரப்பி நிலை மறக்கும் பத்திகள்
சாணத்திற்கும் இடம் உண்டு
அடைக்கலம் கொடுத்த வாழை இழை!

மூன்று கல் நாற்காலியில்
அமர்ந்து விட்ட மண் பானை
ஓய்வு அறியா கரங்களால்
ஓய்ந்து விடாத தீ சுவலைகள்!

உழைத்து விட்ட இரு கரங்கள்
அதன் பலனாய் அதனுள் அரிசிகள்
வேண்டுமென்றே கரம் கவிழ
தடுமாறி விழுந்தன அரிசிகள்!

சுட்டு விடும் தீயிலும் மவுனமாய்
மண்பானை
கொதிக்கும் நீரில் துள்ளிய அரிசிகள்
தூண்டில் போட்ட அகப் பையில்
நழுவுகின்ற அரிசிகள்!

இன்னும் சற்று நேரம் தான்
பொங்கல் பொங்கி விடும்
வானிலை போன்ற பொங்கல் நிலை
கணிப்பு சொன்ன இரு வரி இதழ்கள் !

வானிலை பலித்தாயிற்று
இல்லை இல்லை — பொங்கிய நுரையில்
பொங்கல் நிலை பலித்தாயிற்று
கனத்த உச்சரிப்புடன்
கற்பனை
இல்லா
கவிதையும்
இதழ் வழியே
வந்தாயிற்று!
பொங்கலோ
பொங்கல் !




அனைவருக்கும் இனிய பொங்கல் நல்
வாழ்த்துக்கள்

**பழனி ராஜன்**



# மருத்துவத்

## பூண்டு நம் ஆரோக்கியத்திற்கு சிறந்ததா?

பூண்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அதன் தனித்துவமான சுவை மற்றும் மருத்துவ குணங்களுக்காக மதிக்கப்படுகிறது. இது நுண்ணுயிரிகளையும் வைரஸ்களையும் எதிர்க்கும் திறன் கொண்டதால், சமையலிலும் பாரம்பரிய மருத்துவத்திலும் முக்கிய இடம் பிடித்துள்ளது.

மத்திய ஆசியாவில் தோன்றிய பூண்டு, மக்கள் இடம்பெயர்ந்தபோது ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் பரவியது. இன்று, உலகில் அதிக அளவில் பூண்டை உற்பத்தி செய்கிற நாடாக சீனா உள்ளது. பின்னர், துருக்கிய தொழிலாளர்கள் டென்மார்க்கிற்கு வந்தபோது, பூண்டு சேர்த்த உணவு பரவலானது.

பூண்டு உலகெங்கிலும் உள்ள பல உணவு வகைகளில் முக்கியப் பங்கு வகிக்கிறது. வடமேற்கு பிரான்ஸில் உள்ள தனது பிரெஞ்சு சமையல் பள்ளியில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் மற்றும் ஆசியாவைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்பிக்கும் டேனிஷ் சமையல் கலைஞரான பவுல் எரிக் ஜென்சன், ‘பூண்டைப் பற்றித் தெரியாத மாணவரை நான் சந்தித்ததே இல்லை’ என்கிறார். பூண்டு உணவின் சுவையைப் பெரிதும் உயர்த்துவதாக அவர் நம்புகிறார். ‘பூண்டு இல்லாமல் பிரெஞ்சு உணவு எப்படி இருக்கும்?’ என்று அவர் ஆச்சரியப்படுகிறார்.

“பிரெஞ்சுக்காரர்களால் பூண்டு இல்லாத உணவை கற்பனை கூட செய்ய முடியாது என நான் நினைக் கிறேன்,” குழம்பு முதல் சூப் வரை, காய்கறி அல்லது இறைச்சி உணவுகள் வரை, எல்லாவற்றிலும் ஒரு பல் பூண்டு கண்டிப்பாக இருக்கும். பூண்டு இல்லாமல் சமைப்பதை கற்பனை செய்யவே முடியாது.” என்று ஜென்சன் கூறுகிறார்.

ஆனால் 1970களின் தொடக்கத்தில் டென்மார்க்கின் கிராமப்புறத்தில் வளர்ந்தபோது, பூண்டு அவருக்கு புதிதாக இருந்தது. அதன் கடுமையான மணத்தின் காரணமாக மக்கள் அதை அப்போது பயன்படுத்தவில்லை. பின்னர், துருக்கிய தொழிலாளர்கள் டென்மார்க்கிற்கு வந்தபோது, பூண்டு சேர்த்த உணவு பரவலானது. இத்தாலிய பீட்சாக்கள் மூலமாகவும் ஜென்சன் பூண்டை ரசிக்கத் தொடங்கினார். இப்போது,










மருத்துவர்

எம். முத்துமாரி


குளிர்காலத்தில் ஆரோக்கியத்திற்காகவும் பூண்டைப் பயன்படுத்துகிறார். "நானும் என் துணைவியும், காலையில் ஒரு கப் சூப் குடிப்போம். அதில் ஒவ்வொருவரும் ஒரு முழு பூண்டு பல்லைப் பிழிந்து சேர்ப்போம். இதனால் எங்களுக்கு சளி, காய்ச்சல் எதுவும் வருவதில்லை. அதற்கு காரணம் பூண்டு தான் என நான் நிச்சயமாக நம்புகிறேன்." என்று அவர் குறிப்பிடுகிறார்.

ஒரு நீண்ட பயணம்

பண்டைய கிரேக்க மருத்துவரும் தத்துவஞானியுமான ஹிப்போகிரட்டீஸ் தனது மருத்துவ சிகிச்சைகளில் பூண்டைப் பயன்படுத்தியதாக செர்ரி குறிப்பிடுகிறார். பூண்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கலாசார மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் பெற்றுள்ளது. பண்டைய கிரேக்கர்கள், சூனியம் மற்றும் வீடுகளின் பாதுகாவலரான ஹெகேட்டுக்கு காணிக்கையாக சாலைச் சந்திப்புகளில் பூண்டை வைத்தனர்.

எகிப்தில், புகழ்பெற்ற துட்டன்காமூனின் கல்லறையில் பூண்டு கிடைத்தது, அவரைப் பாதுகாக்கும் சக்தி பூண்டுக்கு உண்டு என்றும் அவர்கள் நம்பினர்.







அதேபோல், சீன மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டுப்புறக் கதைகளில், காட்டேரிகளை விரட்ட பூண்டு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

"உலகின் பழமையான சமையல் செய்முறை ஒரு மெசபடோமிய குழம்பு. அது 3,500 ஆண்டுகள் பழமையானது. அதில் இரண்டு பூண்டு பற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன" என 'கார்லிக்: எடிபில் பயோகிராபி'என்ற **('Garlic: An Edible Biography')** புத்தகத்தின் ஆசிரியரான ராபின் செர்ரி கூறுகிறார்.

“பூண்டு குறித்து உள்ள மிகப் பழமையான மருத்துவ குறிப்பும் சுமார் 3,500 ஆண்டுகள் பழமையானது. ‘எபர்ஸ் பாப்பிரஸ்’ என்று அழைக்கப்படும் அந்த ஆவணத்தில், உடல்நலக்குறைவு முதல் உடலிலுள்ள ஒட்டுண்ணிகள், இதயம் மற்றும் சுவாசக் கோளாறுகள் வரை பல பிரச்னைகளுக்கு பூண்டை எப்படி பயன்படுத்துவது என்பது பற்றிய பல குறிப்புகள் இருந்தன,” என்றும் அவர் கூறுகிறார்.

பண்டைய கிரேக்க மருத்துவரும் தத்துவஞானியுமான ஹிப்போகிரட்டீஸ் தனது மருத்துவ சிகிச்சைகளில் பூண்டைப் பயன்படுத் தியதாக செர்ரி குறிப்பிடு கிறார். அரிஸ்டாட்டில், அரிஸ்டோபேன்ஸ் போன்ற பல சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களும் பூண்டின் மருத்துவ பயன்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளனர்.

அடிமைகளின் உணவில் இருந்து அரச குடும்பத்தின் உணவு வரை

பூண்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அதன் தனித்துவமான சுவை மற்றும் மருத்துவ குணங்களுக்காக மதிக்கப்படுகிறது. பண்டைய மெசபடோமியா, எகிப்து, கிரீஸ், ரோம், சீனா, இந்தியா போன்ற பல நாகரிகங்களில் பூண்டு மிகவும் பிரபலமாக இருந்தது.

ரோமானிய வீரர்கள் பூண்டு தங்களுக்கு தைரியமும் வலிமையும் தருவதாக நம்பினர். அவர்கள் யுத்தங்களில் வெற்றி பெற்று புதிய பகுதிகளைக் கைப்பற்றிய போது, பூண்டை ஐரோப்பா முழுவதும் பரவலாக்கினர். பூண்டு உணவாகவும் மருந்தாகவும் பயன்பட்டாலும், ஒரு காலத்தில் சமையலில் அது ஏழைகளால் மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

“அது ஏழைகள் உண்ணும் உணவாகவே கருதப்பட்டது.” என்று கூறிய ராபின் செர்ரி, “எகிப்தில் பிரமிடுகள் கட்டிய அடிமைகளுக்கும், ரோமானிய மாலுமிகளுக்கும் வலிமை தருவதற்காக பூண்டு கொடுத்தனர். அது மலிவானது மட்டும் அல்லாமல், கெட்டுப் போன உணவின் சுவையையும் மறைக்கக்கூடும். அதனால் அது ஏழைகள் சாப்பிடும் உணவாகவே நீண்ட காலம் பார்க்கப்பட்டது.” என்றும் விளக்குகிறார்.

ஆனால் 14 முதல் 16—ஆம் நூற்றாண்டு வரையிலான மறுமலர்ச்சி காலத்தில் பூண்டின் மதிப்பு மாறியது. அது, ஐரோப்பாவில் கலை, அறிவியல் வளர்ந்த காலம்.“பிரான்சின் நான்காம் ஹென்றி பூண்டால் ஞானஸ்நானம் செய்யப்பட்டு, அதை அதிகம் உண்டார். இது பூண்டை பிரபலப்படுத்தியது. 19—ஆம் நூற்றாண்டில் பிரிட்டனிலும் பூண்டு பிரபலமானது,” என்கிறார் செர்ரி. 1950—60—களில் குடியேறியவர்கள் மூலம் பூண்டு அமெரிக்காவுக்கு வந்தது. இது எதிர்மறையான கருத்துகளை மாற்ற உதவியது. “யூதர்கள், இத்தாலியர்கள், கொரியர்கள் ஆகியோரை ‘பூண்டு சாப்பிடுபவர்கள்’ என்று அவமானகரமாக அழைத்தனர். இதற்கு மோசமான அர்த்தம் இருந்தது,” என்றார் செர்ரி.

மருந்தாகப் பயன்படுத்தப்படும் பூண்டு

மத்திய ஆசியாவில் தோன்றிய பூண்டு, மக்கள் இடம்பெயர்ந்தபோது ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் பரவியது. இன்று, உலகில்









அதிக அளவில் பூண்டை உற்பத்தி செய்கிற நாடாக சீனா உள்ளது. உலகில் தற்போது 600—க்கும் மேற்பட்ட பூண்டு வகைகள் உள்ளன. உஸ்பெகிஸ்தான், ஜார்ஜியா போன்ற இடங்களில் விளையும் சில வகைகள் சமீபத்தில் தான் உலக சந்தையில் கிடைக்கத் தொடங்கியுள்ளன.




சமையலில் முக்கியப் பங்கு வகிப்பதைத் தாண்டி, பூண்டு சளியின் அறிகுறிகளைக் குறைக்கவும் பயன்படுகிறது. ரத்த அழுத்தம், கொழுப்பு, புற்றுநோய் ஆகியவற்றில் பூண்டின் தாக்கத்தை ஆய்வு செய்ய பல மருத்துவப் பரிசோதனைகள் நடந்துள்ளன. ஆனால் அதில் வெளியான முடிவுகள் மாறுபட்டதாக உள்ளன.

உதாரணமாக, இரானில் நடந்த சிறிய ஆய்வு, பூண்டு மற்றும் எலுமிச்சை சாறு ஆறு வாரங்களில் கொழுப்பையும் ரத்த அழுத்தத்தையும் குறைத்ததாகக் கூறுகிறது. ஆனால், ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் 200 நபர்களிடம் ஆறு மாதங்களுக்கு நடந்த ஆய்வில் கொழுப்பு குறைவதற்கான குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் காணப்படவில்லை.

மத்திய ஆசியாவில் தோன்றிய பூண்டு, மக்கள் இடம்பெயர்ந்தபோது ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் பரவியது. இன்று, உலகில் அதிக அளவில் பூண்டை உற்பத்தி செய்கிற நாடாக சீனா உள்ளது. 2014—இல் ஆஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வு, பூண்டு வலுவான நுண்ணுயிர், வைரஸ் மற்றும் பூஞ்சை எதிர்ப்பு பண்புகளைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தியது.

“பூண்டில் அதிக அளவு பொட்டாசியம், பாஸ்பரஸ், துத்தநாகம், கந்தகம் ஆகியவை இருக்கின்றன. மெக்னீசியம், மாங்கனீசு, இரும்பு போன்றவை மிதமான அளவில் உள்ளன. உண்மையில் இது ஒரு அதிசய காய்கறி,” என்கிறார் பிரிட்டிஷ் டயட்டெடிக் அசோசியேஷனின் செய்தித் தொடர்பாளரும் குழந்தை மருத்துவ உணவியல் நிபுணருமான பஹீ வான் டி போர்.

“பூண்டில் ‘அல்லிசின்’ என்ற கந்தகம் கூட்டு பொருள் உள்ளது. இதில், நம் குடல் மிகவும் விரும்பும் ப்ரீபயாடிக் நார்ச்சத்து நிறைந்துள்ளது. அதனால் குடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. அதில் நுண்ணுயிர் எதிர்ப்புத் தன்மையும் உள்ளது.” என்றார்.




அதேபோல் பூண்டின் நார்ச்சத்து குடல் பாக்டீரியாவை வளர்க்க உதவுகிறது, மலச்சிக்கல், வயிறு வீக்கம் ஆகியவற்றையும் குறைக்கலாம் என்றும் அவர் கூறுகிறார்.

தினமும் ஒன்று அல்லது இரண்டு பூண்டு பற்களை பச்சையாக சாப்பிடுவது பாதுகாப்பானது. ஆனால் அமெரிக்கன் ஃபேமிலி ஃபிசிஷியன் **(American Family Physician)** என்ற மருத்துவ இதழில் வெளியாகியுள்ள அறிக்கையின்படி, பூண்டை அதிகமாக, குறிப்பாக வெறும் வயிற்றில் சாப்பிட்டால், வயிற்றுப் பிரச்னைகள், வாயு பிரச்னை மற்றும் குடலில் உள்ள நல்ல பாக்டீரியாவில் மாற்றம் ஏற்படலாம்.

பொறுப்பு துறப்பு: இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். அய்தமிழ் இந்த தகவல்களுக்கு பொறுப்பேற்காது.)



# வேரறியா

## மண் மணம் தேடும் மனம்!

**வி**மானத்தை மிகச் சாதாரணமாகவும், வண்ணத்துப்பூச்சியை வியப்பாகவும் பார்க்கிறோம் என்று ஆதங்கப்பட்டுள்ளார் ஒருவர். சுடும் உண்மை இது. ஆகாய விமானம் பறந்தால் வாய் பிளந்து அண்ணாந்து பார்த்தது அந்தக் காலம். சில குழந்தைகள் பிறந்த உடனேயே விமானப் பயணம் செய்கின்றன. அவர்களுக்கு விமானம் எந்தவித வியப்பையும் ஏற்படுத்துவதில்லை. நகரத்துப் பிள்ளைகளுக்கு வண்ணத்துப்பூச்சி, தேனீ, தேன்சிட்டு, வயல்வெளி, ஆறு, தென்னந்தோப்பு இவையெல்லாம்தான் அதிசயங்கள்.

பள்ளியில் படிக்கும் போது 'கிராம வாழ்க்கை சிறந்ததா?' 'நகர வாழ்க்கை சிறந்ததா?' என்ற பட்டிமன்றத் தலைப்பில் பேசியதும் உண்டு. அரை நூற்றாண்டுக்கு முன்பு கிராமங்கள் மண் மணம் மாறாமல் இருந்தன. கூரை மற்றும் சிறிய ஓட்டு வீடுகள், பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற வயல்கள், ஏற்றம் இறைக்கும் கிணறுகள், மாசில்லாத சுற்றுச்சூழல், இயற்கை எழில் கொஞ்சும் கிராமம் என்றெல்லாம் பேசி, நகர வாழ்க்கை நரகம் என அடித்துச் சொல்லி, கிராம வாழ்க்கையே சிறந்தது என்று நடுவரை தீர்ப்பு சொல்ல வைத்தது நினைவுக்கு வருகிறது. அப்படிப் பேசியவர்கள் அனைவரும் நகரத்துக்கு வந்து விட்டதுதான் முரண்.

தற்போது நகரத்தில் படித்து, வேலை பார்க்கும் அனைவரும் சேர்ந்தாற்போல் விடுமுறை கிடைத்தால், பண்டிகை என்றால், ஊரில் திருவிழா என்றால், சொந்த கிராமத்துக்குப் போகத் துடிக்கிறார்கள். முன்பதிவு செய்ய முடியாதவர்கள், கூட்டநெரிசலில், முட்டி, மோதி பேருந்து மற்றும் ரயிலில் ஏறிப் பயணிக்கிறார்கள். அவர்களுக்குச் சொந்த கிராமமே சொர்க்கம்.

நகரத்தின் இரைச்சல், நெரிசல், அவதி, வேகம் போன்றவற்றால் மன உளைச்சலுக்கு உள்ளாகிக் கிடப்பவர்களுக்கு அந்த விடுப்பு நாள்கள்









# மொட்டுகள்

பாலைவனச் சோலை ஆகும். கொஞ்சம் தங்களை ஆசுவாசப்படுத்திக் கொள்ளவும், மீண்டும் காலில் சக்கரம் கட்டிக்கொண்டு ஓடவும், இளைப்பாறவும் அந்தப் பயணங்கள் அவசியமாகின்றன.

கூரை வீடுகளில் இருந்து வரும் அடர்த்தியான புகை வாசமும், மாட்டுத் தொழுவத்தில் இருந்து வரும் சாணத்தின் வாசமும், வயல்வெளிகள் மீது தவழும் மெல்லிய பனி மூட்டமும், தலையாட்டிச் சிரிக்கும் நெற்கதிர்களும், ஏரியைச் சுற்றி ஓங்கி வளர்ந்த பனைமரங்களும், விழுதுகள் தொங்கும் குளக்கரையும், அங்கோர் பிள்ளையாரும், செம்மண் சாலைகளும், கப்பி சாலைகளும், ஊர்ச் சாவடியில் கதை பேசிக்கொண்டு பெரியவர்களும் இருந்தது அந்தக் கால கிராமம்.

பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய சிறிய கோயில்கள் பழைமையின் சான்றுகளாக நின்றன. கிராமத்தின் பழைமை என்பது சிதைந்து போன கட்டடங்களில் மட்டுமல்ல; அது பல தலைமுறைகளாகப் பேசப்படும் அந்த மக்களின்

## வெ. இன்சுவை

பாரம்பரியப் பழக்கவழக்கங்களிலும், தொன்மை வாய்ந்த கோயில்களிலும் உள்ளது. ஒவ்வோர் ஊருக்கும் ஒரு கதை இருக்கும். தற்போது திரைப்படங்கள்தான் கிராமங்களை இன்னமும் விடாமல் பிடித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, தற்கால நகரத்துப் பிள்ளைகளுக்குக் கிராமம் பற்றிய நேரடி அனுபவம் இல்லை.

ஒரு நெல் மணியை உற்பத்தி செய்ய ஒரு விவசாயி எவ்வளவு கடுமையாக உழைக்கிறார் என்பதை






அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அது தெரிந்தால் சாப்பிட அடம் பிடிக்க மாட்டார்கள். குறிப்பிட்ட எந்த உணவையும் பிடிக்கவில்லை என ஒதுக்க மாட்டார்கள்; உணவை வீணடிக்க மாட்டார்கள்.

நம் விழாக்களிலும் விருந்துகளிலும் வீணடிக்கப்படும் உணவுப் பண்டங்கள் ஏராளம். அதைப் பார்த்தால் விவசாயிக்கு கண்களில் ரத்தக் கண்ணீர் வரும். ஆகவே, மாணவர்களை கிராமங்களுக்கு அழைத்துச் சென்று விவசாயம் குறித்த நேரடி அனுபவம் கிடைக்கச் செய்ய வேண்டும். உணவுப் பண்டத்தை வீணடிப்பது ஒரு தேசியக் குற்றம் என்பதை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

அசௌகரியத்தையும் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. இவர்களை கிராமத்திலுள்ள வீடுகளுக்கு அழைத்துப் போய்க் காட்ட வேண்டும். கிராம வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதையும் உணர்த்த வேண்டும்.

விவசாயம் செய்வது எவ்வளவு சிரமமான ஒன்று என்று பள்ளிப் பருவத்திலேயே பிள்ளைகள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

ஜப்பானில் தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளி அளவில், பாடத்திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் மூலம் விவசாயத்தைக் கற்றுக் கொடுக்கிறார்கள். உள்ளூர் விவசாயிகளுடன் கூட்டுறவின் மூலம் அல்லது பள்ளித் தோட்டங்கள்




வளரிளம் பருவப் பிள்ளைகள் தங்களுக்குத் தனி அறை வேண்டும் என்று கேட்கிறார்கள். அதிலும் குளிர் சாதன வசதி அவசியம் இருக்க வேண்டும். எத்தகைய சிறிய




மற்றும் பண்ணைகளில் நெல், காய்கள், பிற பயிர்களை நடவும், அறுவடை செய்யவும் கற்பிக்கிறார்கள். மாணவர்கள் நெல் நாற்றுகள், காய்கறிகளை அறுவடை செய்தல் மற்றும் முழு உணவுச் சங்கிலியைப் பற்றியும் அறிந்து கொள் கிறார்கள். பள்ளிகள் பெரும்பாலும் தங்கள் நிலத்தைப் பண்ணைத் திட்டங் களுக்குப் பயன்படுத்த, அருகில் உள்ள விவசாயி களுடன் ஒத்துழைக்கின்றன. கைவிடப்பட்ட நிலங்களையும் எடுத்துக் கொள்கிறார்கள். செயல்முறை அனுபவத்தின் மூலம் தங்கள் உணவு எங்கிருந்து வருகிறது என்பதைப் பிள்ளைகள் அறிந்து கொள்கிறார்கள். விவசாயிகளின் உழைப்பைப் புரிந்து கொள்கிறார்கள். அறுவடை செய்யப்பட்ட

உணவை அவர்களே சமைத்து உண்ணுகிறார்கள். உள்ளூர் பாரம்பரிய உணவுகளையும் கூட இத்திட்டம் உள்ளடக்குகிறது.




இந்தியாவில் சில தனிப்பட்ட பள்ளிகள் பல்வேறு திட்டங்களின் மூலம் அதை ஒருங்கிணைக்கின்றன. அனைத்துப் பள்ளிகளிலும் இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கணினி அறிவியல் மட்டுமே முழுமையான கல்வி ஆகாது. கழனி குறித்த அறிவு மிகவும் அவசியம். நம் பாடத்திட்டங்களில் வேளாண்மை கல்வி சேர்க்கப்பட வேண்டும். அருகில் உள்ள வயல்களுக்குப் பிள்ளைகளை அழைத்துப் போக வேண்டும். நம் கலாசாரம், தொன்மை மற்றும் விவசாயம் குறித்து அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

பள்ளிகளுக்கு அருகிலேயே மாதிரி கிராமங்கள் அமைக்கப்பட வேண்டும். தற்போது நம் நாட்டில் மாதிரி கிராமங்கள் அதிகம் இல்லை. எந்த வளர்ச்சியும் கூடாது, கூரை வீடுகள் அப்படியே இருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போலவே அப்படியே பராமரிக்க வேண்டுமென்று எவரையும் வற்புறுத்த முடியாது; அதற்குச் சட்டத்தில் இடமில்லை. ஒரு குடியிருப்பை அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளவோ, தங்கள் நிலங்களை விற்கவோ, பயிர் செய்யாமல் தரிசாகப் போட்டு விடவோ அவரவருக்கு உரிமை உண்டு.

அதேசமயம் பிரிட்டனில் பழைமை மாறாத கிராமங்களை அப்படியே அவர்கள் பாதுகாத்து வருகிறார்கள். நான் பார்த்த பௌர்டன்—ஆன்—தி—வாட்டர் என்னும் கிராமத்தில் பழங்காலத்து வீடுகள் இன்றும் அடுத்தடுத்த தலைமுறையினரால் பாதுகாக்கப்படுகிறது. அவர்கள் எதையும் மாற்றவில்லை. எத்தகைய புதுமையும் புகுத்தவில்லை. பழைய வீடுகள், புல்வெளிகள், அருகே ஓடும் ஆறு, அந்த மரப் பாலம், பழைய தேவாலயம் எல்லாம் அப்படியே இருக்கின்றன. மண் வாசனையோடு அவர்கள் வாழ்கிறார்கள். அருகில் கடைகளோ, அங்காடிகளோ இல்லை. கொஞ்சம் இருட்டிய பின் போனால் அழுது வடிந்து கொண்டிருக்கிறது ஊர். அதுவே ஓர் அழகு. ஏதோ அக்காலத்தில் இருப்பதைப் போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்துகிறது.

அந்த இயற்கை அழகைக் காண சுற்றுலாப் பயணிகள் குவிகிறார்கள். மேலும், பௌர்டன்—ஆன் — தி — வாட்டர் மாதிரி கிராமம் என்பது இந்த கிராமத்தின் மையப் பகுதியை 1:9 என்ற சரியான விகிதத்தில் தத்ரூபமாக உருவாக்கப்பட்டுள்ள ஒரு 'மினியேச்சர்' நகலாகும். இது 1930—களில் உள்ளூர் கைவினைஞர்களால் கட்டப்பட்டது மற்றும் 1937—இல் திறக்கப்பட்டது. உண்மையான கிராமத்தைக் கட்டப் பயன்படுத்திய அதே தேனிறக் கற்கள் மற்றும் பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி இது கட்டப்பட்டுள்ளது. துல்லியமான விவரங்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இது பிரிட்டனின் கிரேடு இரண்டு பட்டியலில் இடம்பெற்ற 'ஒரே மாதிரி கிராமம்' என்ற தனித்துவத்தைப் பெற்றுள்ளது.



இந்த 'மினியேச்சர்' கிராமத்தில் விண்ட்ரஷ் நதி, ஐந்து வளைவுக் கற்கள் கொண்ட பாலங்கள், தேவாலயங்கள், கடைகள், மற்றும் வீடுகள் ஆகியவை துல்லியமாகப் பிரதிபலிக்கப் பட்டுள்ளன. மேலும், இந்த மாதிரிக் கிராமத்திற்குள்ளேயே அதன் சிறிய மாதிரி (ஒரு மாதிரிக்குள் ஒரு மாதிரி) இருப்பதும் இதன் சுவாரஸ்யமான அம்சமாகும். இது கிராமத்தின் அழகையும், கட்டடக்கலை பாரம்பரியத்தையும் வருங்காலச் சந்ததியினருக்கு காட்சிப்படுத்த உதவுகிறது.




எல்லாவற்றிலும் மேலைநாட்டு நாகரிகத்தைப் பின்பற்றும் நாம், மாதிரி கிராமங்களை உருவாக்குவதிலும், இருக்கின்ற கிராமங்களைத் தக்க வைத்துக் கொள்வதிலும் கவனம் செலுத்தினால், நம் தொன்மையை வரும் சந்ததியினருக்கு விட்டுச் செல்லலாம். சிதையாத மண்வாசம் சற்றேனும் உள்ளுக்குள் இருக்கட்டும்; வேர்கொண்டே வாழ்வதுதான் வாழ்வென்று இளைய மனம் உணர்ந்து கொள்ளட்டும்; இந்த எழில்மிகு மண்ணின் வரம் தலைமுறை தாண்டி நிலைக்கட்டும்.



கவிதை

# தைப்பொங்கல்

முற்றங்களை நிரப்புகின்ற வண்ண கோலங்கள்....

நிலைப்படி சாமரமாய் அசைகின்ற
மாவிலைத் தோரணம்...

அடிகள் ஆறிலும் தித்திப்பு தெவிட்ட
கரும்புகள்...

நறுமணப் புட்டிகள் தோல்வி காணும்
மஞ்சள் கிழங்குகள்...

இன்று வரை மாற்று காண ருசியுடன்
பனைங்கிழங்குகள்...

புதுவெல்லமும் நெய்யும்
பச்சரிசியுடன் சங்கமித்து
பொங்கிய பொங்கல்...

ஆடை புதிது உடுத்தி
ஆதவன் முன் படைத்து
அனைவருக்கும் பகிரப்பெற்றது
பொங்கலும்!!
பொங்கல் வாழ்த்துக்களும்!!!




**காதம்பரி**

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™

# ஜனவரி



# பிப்ரவரி




மார்ச்
March 2025
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
16
YEARS

# ஏப்ரல்




மே
May 2025
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு


ஜூன்
June 2025
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

# ஜூலை




ஆகஸ்ட்
August 2025
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

# செப்டம்பர்



# அக்டோபர்




நவம்பர்
November 2025
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு


டிசம்பர்
December 2025
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
Merry Christmas

# தமிழ் 2026

நற்றமிழரின் நாடித்துடிப்பு




## JANUARY




## FEBRUARY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | | |

## MARCH

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

## APRIL

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## MAY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

## JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## AUGUST

| | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

ஐய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com







Email: editor@ithamil.com


Season's Greetings
and
Happy New Year!
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA™